மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

தொலைத்தூர தொடர்கல்வி இயக்ககம்

திருநெல்வேலி - 12

# B.A TAMIL

திறன்வளர் பாடம் – ஆக்கத்தமிழ்

**MSU/2021-2022/UG-COLLEGES/PART-III/B.A TAMIL/SEMESTER III/**

**SKILL BASED CORE - I**

**SEMESTER III/SKILL BASED CORE I (optional)**

**மூன்றாம் பருவம்**

**திறன்வளர் பாடம் - ஆக்கத்தமிழ் LTPC – 4004**

**நோக்கம்**

1. மொழிநடை உரைநடை குறித்து அறிந்து கொள்ளுதல்
2. அடிப்படை வாக்கிய அமைப்புகளை முறைப்படி எழுதப் பழகுதல்

**பயன்**

1. மொழிநடை குறித்த அறிஞர்களின் கருத்துகளை அறிந்து கொள்ளுதல்.
2. வலி மிகல், சந்தி விகுதிகள், வாக்கிய வகைகள் பற்றிய அடிப்படை இலக்கணங்களை தெரிந்து கொள்ளுதல்.
3. நிறுத்தற் குறியீட்டின் பயன்பாட்டைப் புரிந்து கொள்ளுதல்.

## உள்ளுறை


| வ.எண் | பாடம் | பக்கம் |
|---|---|---|
| 1 | அலகு – 1<br>மொழிநடை : மொழிநடை குறித்து ராஜாஜி, சூரியநாராயண சாஸ்திரியார், கருத்துக்கள் - மாதிரி உரைநடைகள் - டாக்டர்.சேதுப்பிள்ளை, திரு.வி.க, மு.இராகவையங்கார் - கா.சு.பிள்ளை – மறைமலையடிகள் - பேரறிஞர்.அண்ணா, உரைநடையில் கவனிக்க வேண்டியவை – மொழிநடை பற்றி உ.வே.சா | 4-11 |
| 2 | அலகு – 2<br>வலி மிகுதல் - வலி மிகுதலும் மிகாமையும் - வலிமிகும் விதிகளின் தொகுப்பு – வலி மிகாமைக்குரிய விதிகள் - எளிய சந்தி விகுதிகள் - சொற்றொடர் பிரிப்புத் தவறுகள். | 12-63 |
| 3 | அலகு – 3<br>வாக்கிய வகைகளும் அமைப்பு முறைகளும் - வாக்கியம் என்றால் என்ன? – வாக்கிய வகைகள் - செய்தி வாக்கியம் - வினா வாக்கியம் - விழைவு வாக்கியம் - உணர்ச்சி வாக்கியம் - தனி வாக்கியம் தொடர் வாக்கியம் - தமிழ் வாக்கியத்தின் தனிச்சிறப்பு. | 64-71 |
| 4 | அலகு – 4<br>மரபுத்தொடர்கள் - பழமொழிகள் - உவமைகள் - கட்டுரை எழுதுதல் - சிறுகதை, வாழ்க்கை வரலாறு, நகைச்சுவை இலக்கியம், நாடகம் ஆகியவை எழுதுதல். | 72-95 |
| 5 | அலகு – 5<br>நிறுத்தற்குறிகள் இடும் முறைகள் : காற்புள்ளி – அரைப்புள்ளி – முக்காற்புள்ளி – முற்றுப்புள்ளி – வினாக்குறி – உணர்ச்சிக்குறி – இரட்டை மேற்கோள் குறி – ஒற்றை மேற்கோள் குறி – தொடர் விடுபாட்டுக்குறி – விடுகுறி – மேற்படி குறி முதலான நிறுத்தற் குறிகள். | 96-102 |

# ஆக்கத்தமிழ்

## அலகு – 1

## மொழிநடை

**மொழிநடை – விளக்கம்**

செய்யுளை என்ன என்று விளக்க இயலாதது போல மொழிநடையையும் இன்னது என்று விளக்குவது இயலாது. கட்டுரை எழுதுவோரோ நூல் இயற்றுவோரோ தம் கருத்தைப் பிறர் உள்ளத்தில் விரும்பி சேருமாறு எழுதும் முறையைத்தான் மொழிநடை என்கிறோம். சுருங்கக் கூறினால், உரைக்குஞ் செவ்வியே அல்லது முறையே மொழிநடை என உரைக்கலாம். மொழிநடையின் நோக்கம் கற்பார் உள்ளத்தைக் கவர்ந்திழுப்பதேயாகும். இந்நோக்கம் இல்லையென்றால் எழுதுவது பயனடையாது.

மொழிநடை எப்படி பொருந்தியிருக்க வேண்டும்? எவ்விதமான சொற்களைப் பயன்படுத்த வேண்டும்? மொழிநடை என்ன இலக்கணம் அமைந்ததாக இருக்க வேண்டும்? என்று பல வினாக்கள் மொழிநடையைக் குறித்து எழுகின்றன. மொழிநடையைக் குறித்து பலர் பலவாறு கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

உலகப் பேரறிஞர்களின் ஒருவரான ராஜாஜி, ''தமிழ் மொழிநடை, பேச்சுநடையில் அமைந்திருக்க வேண்டும்'' என்றார். பேச்சு நடையை விளக்குகையில் அவர், பேச்சு நடை எழுதுங்கால் கொச்சை மொழியையும் ஆங்கில மொழியையும் அறவே நீக்கி எழுத வேண்டும் என்றும், பேசத்தக்கவர்கள் எவ்வாறு பேசுவார்களோ அவ்வாறு எழுதுவதே பேச்சு நடையாகும் என்றும், அத்தகைய பேச்சு நடையே அழகும் சுவையும் வலிமையும் வாடாப் புதுமையும் கொண்டு விளங்கும் என்றும் தமது வசன நடையைப் பற்றிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறியிருக்கும் பேச்சு நடை என்பது இக்காலத்தில் பலரும் விரும்பும் எளிய தெளிவு நடையே அன்றிப் பிறர் சொல்லும் கொச்சைப் பேச்சு நடை அன்று என்று அறிதல் வேண்டும்.

வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரியார், (பரிதிமாற் கலைஞர்) ''பண்டிதரானோர் திரிசொற்கள் பல வழங்கியும், அருகிய சொல்லுருவங்களை உபயோகித்தும், செய்யுட்களில் அருகிவரும் அளபெடைகளைத் தொகுத்தும், விரிக்க வேண்டிய வேற்றுமை உருபுகளைத் தொகுத்தும், சாமானிய மக்கள் மருண்டு ஒதுங்கிச் செல்லத்தக்கவாறு எழுதும் வழக்கத்தை நிறுத்திவிடல் வேண்டும். கடின நடை கூடாது. 'அன்னோன் ஈண்டை இருந்திருக்குபு பிற்றை ஞாயிறு ஏகினான்' என்பது போன்று எழுதலாகாது. 'அவன் இங்கே தங்கியிருந்து மறுநாள் போனான் என்று எழுதுக' என எளிய நடையைக் கைக்கொள்ளுமாறு வற்புறுத்தியுள்ளார்.

கருத்தை ஒட்டியே மொழி நடை அமைகிறது. அவரவர் மனப்பண்புக்கும் தன்மைக்கும் கல்விப்பயிற்சிக்கும் முயற்சிக்கும் ஏற்றவாறு மொழி நடை இருக்கும். இலக்கணம், இலக்கியம்

மிக நன்று கற்றுவிடுவதாலே மட்டும் நல்ல மொழிநடை அமைந்து விடுவதில்லை. அது கருவிலே அமைந்த திருவாக இருக்கிறதெனில் தவறாகாது. பலரும் கறி சமைப்பர். அவருள் ஒரு சிலரே சுவையாகச் சமைப்பர். 'ஐந்தும் இருந்தால் அறியாத பெண்ணும் நன்கு கறி சமைப்பாள்' என்பது முற்றும் உண்மையன்று. ஐந்தும் இருந்தும் பலர் சமைக்கும் திரு அமையாமையால் சமைக்குங் கறி சுவையற்றிருக்கக் காண்கிறோம். ரசம் வைப்பதும் சிலருக்கே அமைந்த திருவாக இருப்புத கண்கூடு. அதுபோலவே நல்ல மொழிநடை அமைவது ஒரு சிலருக்கே கைவந்த திறனாக உள்ளது. இதனால் முயற்சி வேண்டுவதில்லை என்று கூறவில்லை. ஒருவருக்கு முயற்சியும் பயிற்சியும் இருந்தால், அவர் சிறந்த மொழிநடை எழுதும் திறன் பெறலாம். முயற்சியுடையார் இகழ்ச்சியடைவரோ? அடையார். ஆங்கில பெரும்புலவர் ஸ்டீவன்சன் என்பார், "நான் அறிஞர் பலருடைய கட்டுரைகளைப் படித்து அவற்றைப் போன்று எழுதிப் பயின்று நல்ல மொழிநடை எழுதும் திறமைப் பெற்றேன்" என்று தம் பட்டறிவை (அனுபவத்தை) உரைப்பது நமக்கும் வழிகாட்டும் என்று சொல்ல வேண்டுவதில்லை.

பலருடைய மனப்பண்புகளுக்கு ஏற்றவாறு பலவகை மொழிநடைகள் அமைவது இயற்கை. சொற்களைப் பயன்படுத்துவதிலேதான் பெரும்பாலும் கடினமும், எளிமையும், இனிமையும் தோன்றும். உரைநடையிலும் பலவகை நடைகளைக் கூறலாம். கொடுந்தமிழ் நடை, செந்தமிழ் நடை, திரிசொல் நடை, இயற்சொல் நடை, இலக்கிய நடை, கலப்பு மொழி நடை, தனித்தமிழ் நடை, அடுக்குமொழி நடை, பழந்தமிழ் உரைநடை, செம்மாப்பு மொழிநடை, தெளிவு நடை எனக்கூறலாம்.

கொச்சை மொழியிலேயே எழுதுவது கொடுந்தமிழ் நடை. நல்ல தமிழில் பிழையின்றி எழுதுவது செந்தமிழ் நடை. கடினமான சொற்களால் அமைவது திரிசொல்நடை. எளிய சொற்களால் எழுதப்படுவது இயற்சொல் நடை. செய்யுள்களின் சொற்களையும் தொடர்களையும் அடிகளையும் அமைத்து எதுகை மோனைத் தொடைகளைத் தொடுத்து எழுதுவது இலக்கிய நடை. விஞ்ஞானக் கட்டுரைகளை இந்நடையில் எழுதுதல் கூடாது. கலப்பு மொழிநடை என்பது வடசொற்களையும் பிறமொழிச் சொற்களையும் கலந்துவரக் கவலைப்படாது எழுதுவது. தூய தமிழ்ச்சொற்களால் எழுதுவது தனித்தமிழ் நடை. இது பயிற்சிக் குறைவால் கற்பார்க்குச் சிறிது கடினமாகத் தோன்றும். அடுக்குமொழி நடை என்பது சொற்களை அடுக்கி ஆடம்பரமாகக் கருத்தைப் பற்றி கவலைப்படாமல் சொல்லழகு ஒன்றைக் கருதி எழுதப்படுவது.

பழந்தமிழ் உரைநடை என்பது பண்டை உரையாசிரியர்களான சேனாவரையர் போன்றவர்கள் தருக்க முறையைக் கையாண்டு சொற்சுருக்கம் கருதி மிடுக்கு நடையில் எழுதியதுபோல அமைவது. செம்மாப்பு மொழிநடை என்பது செருக்கினால் எளிதாக கூறுவதையும், முயன்று பல்லுடைக்கும் முறையில் கடின சந்திகளைச் சேர்த்து எழுதுவதாகும். கருத்தைத் தெளிவாகக் கூறுவதையே முதன்மையாகக் கொண்டு நன்கு சிந்தித்து எழுதுவதைத் தெளிவு நடை எனலாம். ஜான் மார்லி என்ற ஆங்கிலப் பேரறிஞர் தெளிவு நடையையே தலைசிறந்ததாக மேற்கொள்ளுமாறு கூறியுள்ளார். கருத்துத் தெளிவு இருந்தாலன்றி இந்தத் தெளிவு நடை கைவரப் பெறுதல் இயலாது.

மொழி நடை, எழுதுவோரின் தன்மையையும் மனப் பண்பையும் மொழிவது. எழுத்தாளர் உளப்பாங்கும் உணர்ச்சியும் எப்படியோ, அப்படியே எழுதும் மொழி நடையும் அமையும் என்பதில் ஐயமில்லை. ஆடம்பரத்தை விரும்புபவர் அடுக்கு அலங்கார மொழி நடை எழுதுவர். அடக்கமுடைய சான்றோர் எளிய தெளிவு நடை எழுதுவர். ''மொழி நடையே எழுத்தாளன், எழுத்தாளனே மொழிநடை'' என்றார் பிரான்சு நாட்டுப் பேரறிஞர். ஆதலால் எழுத்தாளர்களுடைய பண்புகளுக்கு ஏற்றவாறு பலவகை மொழி நடை இருந்தே தீரும். மொழி நடையைப் பற்றி குறைக் கூறுவதில் பயனில்லை.

பயனைக் கருதி நாட்டிலுள்ள மக்களிடையே அறிவைப் பரப்ப வேண்டுமென்றால் இன்றைக்கு எழுத்தாளர்கள் கைப்பற்ற வேண்டுவது எளிய தெளிவு நடை என்பதை யாரும் மறுக்க இயலாது. எளிய நடையே அழகிய நடை. எளிமையே மொழி நடைக்கு இனிய அணி என்பது ஆங்கில பழமொழி. சொல்லும் திறமும் கருத்துத் தெளிவும் இருந்தால்தான் நடையில் தெளிவு உருவாகும். சொல்லலங்காரம் கருத்து இன்மையைக் குறிக்கும். எளிய தெளிவு நடை எழுத வேண்டுமெனில் சொல்லறிவு, சொற்களைப் பயன்படுத்தும் திறன், கருத்துத் தெளிவு, எளிதாகக் கூறும் பேராற்றல், சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், நவின்றோர்க்கு இனிமை, நன்மொழி புணர்த்தல், நேர்மை, எளிமை இவை அனைத்தும் தேவைப்படும்.

கருத்தைத் தெளிவாக உள்ளத்தில் அமைத்துக் கொண்டு உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று கூறாத நேர்மையுடன் பழகினால், அழகிய தெளிவு நடை அமைவது கடினமன்று. எளிதாகக் கைக்கூடும். அதற்கு நல்ல மொழி நடை நூல்களைக் கற்றவண்ணம் இருத்தல் வேண்டும். வேறு மொழிகளை அறிந்தவர்கள், அம்மொழியிலுள்ள ஓரிரு நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கினால் நாளடைவில் நல்ல மொழி நடை கைவரப் பெறலாம்.

### மொழி நடை குறித்து டாக்டர். ரா.பி.சேதுப்பிள்ளை

''கார்மேகத்தின் இடையே இலங்கும் கதிரொளி போன்று இரக்கமற்ற அரக்கர் வாழ்ந்த இலங்கை மாநகரில் 'திரிசடை' என்னும் நல்லாள் தோன்றினாள். அம்மங்கை இளமையிலேயே விபீணன் தனயை என்னும் தகைமைக்கு ஏற்ற அறிவும் சீலமும் வாய்ந்து விளங்கினாள். மதுக்குடம் மலிந்த இலங்கை மாநகரில் மயக்குங் கள்ளைக் கண்ணெடுத்தும் பாராத கன்னியாக அமைந்தாள். ஊனைத் தின்று ஊனைப் பெருக்கும் அரக்கர் நிறைந்த நகரில் புலால் உணவை அறவே ஒழித்த புனிதவதியாக இலங்கினாள். இத்தகைய நல்லொழுக்கம் வாய்ந்த நல்லாள், அழகினும் சிறந்து நாளொரு மேனியாக வளர்ந்து வந்தாள்''.

### மொழி நடை குறித்து திரு.வி.கலியாண சுந்தரனார்

''தமிழ் நாட்டில் ஆரியர் தமிழர் பிரிவு பெரிதும் பேசப்படுகிறது. ஆரியர் தமிழ்நாட்டில் புகுந்ததைச் சரித்திர உலகம் கூறிக்கொண்டிருக்கிறது. அதை வாழ்விடை ஏன் பாராட்டிப் பகைமைக் கொள்ளல் வேண்டும்? ஆரியர் தமிழ் நாட்டில் குடிபுகுந்து பல்லாயிரம் ஆண்டுகளாகிவிட்டன. இப்பொழுது 'தூய ஆரியர் இன்னார், தூய தனித்தமிழர் இன்னார்' என்று எவரே பிரிக்கவல்லார். ஒரு நூறாண்டு ஓரினத்தாரும் மற்றோர் இனத்தாரும் ஓரிடத்தில் வாழ நேரின், அவர்தம் தனிமையும் இவர்தம் தனிமையும் மறைந்து கலந்த இனம் உருக்கொண்டு

எழும். இயற்கைநிலை இவ்வாறாகப் பல்லாயிரம் ஆண்டுகளாய் தமிழ் நாட்டில் வாழ்ந்து வரும் ஆரியருக்கும் தமிழருக்கும் கலப்பு ஏற்பட்டிராது என்று கருதுவது மதியுடைமையாகுமோ?''.

**மொழி நடை குறித்து மு.இராகவ ஐயங்கார்**

''பழைய காலத்தே தமிழ் மக்கள் கப்பல் செய் தொழிலிலும் வல்லவராயிருந்தனர். ''கலஞ்செய் கம்மியர்'' ''கலம்புணர் மாக்கள்'' எனவரும் மணிமேகலைத் தொடர்களால் இ∴துணரப்படும். கப்பல் நடுக்கடல் சென்று திரியுங் காலத்தே திசை தடுமாறாது கரைசேர்தற்கு அனுகூலமாகக் காவிரிபூம்பட்டினத்தில் கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டிருந்தது என்பது சிலப்பதிகார கடலாடு காதையில் காணலாம். சென்னை முதலிய பெரும்பட்டினங்களில் இக்காலத்து வைக்கப்பட்டுள்ள 'லைட் ஹௌஸ்' போன்றதே இவ்விளக்கும்''.

**மொழி நடை குறித்து கா.சுப்பிரமணியம் பிள்ளை**

''டாக்டர்.கால்டுவெல் என்னும் ஆங்கிலப் பாதிரியார் திருநெல்வேலி ஜில்லாவில் இடையன்குடி என்னும் இடத்தில் நெடுநாள் வசித்திருந்தார். அவர் தமிழாராய்ச்சி செய்து தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய தமிழ்க் கிளைமொழிகளையும் நன்கு கற்று இம்மொழிகளின் இலக்கணங்களனைத்தையும் ஒப்பிட்டு மொழி நூல் உண்மைக்கு ஏற்றவாறு ஒப்பிலக்கணம் என்று ஆங்கிலத்தில் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரேயே இயற்றியுள்ளார். அது தமிழ் மக்களால் போற்றற்பாலது''.

**மொழி நடை குறித்து மறைமலையடிகள்**

''மக்களுயிர் வாழ்க்கைக்கு மட்டுமன்றி இந்நிலவுலகத்துள்ள எல்லா உயிர்களுக்குமே நீரானது மிகவும் தேவையுள்ளதாய் இருக்கின்றது. பாருங்கள், உயிர்த் தொகுதிகளுள் மிகவும் கீழ்ப்படியான நிலையில் இருக்கும் மரஞ்செடி கொடிகளும் புற்பூண்டுகளும் கூட தண்ணீரையே பெருங்கருவியாய் கொண்டு உயிர் பிழைத்து வருகின்றன. பார்வைக்கு வெறுமையாய்த் தோன்றும் தீஞ்சுவைத் தண்ணீரைப் பருகி அவைகளெல்லாங் கவடுங் கோடுங் கொம்பும் வளருந் தளிரும் இலையும் பூவும் பிஞ்சுங் காயுங்கனியுமாய்ச் செழித்து எவ்வளவு பொலிவாய்த் தோன்றுகின்றன. நாலைந்து ஆண்டுகள் தொடர்பாக மழை பெய்யாது விட நிலம் வறண்டுபோமாயின் அவைகள் எல்லாங் கரிந்து பட்டுப்போகும் என்பது எவர்க்குத் தான் தெரியாது. இன்னும் அம்மரங்களில் உறையும் பறவைகளும் அவற்றின் நிழலில் உறையும் விலங்குகளும் கான்யாறுகளிலுஞ் சுனைகளிலும் மலை வீழருவிகளிலும் இருக்குந் தெளிநீரைப் பருகி எவ்வளவு களிப்பாய் உயிர் வாழ்கின்றன. மழைக்காலத்தில் நம்மனோர் தண்ணீரின் அருமையை உணரவிட்டாலும், வேனிற் காலத்து வெப்பந் தாங்காமல் துடிக்குங்கால் அவர்கள் தண்ணீரே உயிரென்று கூறுதலைக் காண்கிறோம் அன்றோ? ஆதலால், நீரின் சிறப்பையும் அதன் இன்றியமையாமையினையுந் தெரியாத உயிர் இந்நிலவுலகத்தில் ஏதுமே இல்லை என்று திண்ணமாய்ச் சொல்லலாம்''.

**மொழி நடை குறித்து பேரறிஞர் அண்ணாத்துரை**

‘‘ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இந்நாட்டுப் பழங்குடி மக்களாக வாழ்ந்து, நாட்டைக் காத்து, நிலத்தைப் பண்படுத்திப் பாதுகாத்துப் பட்டாளமாக இருந்து வரும் தமிழ்நாட்டு ஹரிஜனங்களை ஒதுக்கி அழித்து மிதித்து, மாக்களினும் கேடாக மதித்து, ஊருக்கு புறம்பே நாகரிகத்துக்கு வெளியே சேற்றிலே புழுதியிலே வாழ்ந்துவரச் செய்தும், அவர்களுக்கு இழிபட்டம் அளித்தும், ‘பார்த்தால் பாவம்’ ‘தொட்டால் தீட்டு’ ‘நடந்தால் குற்றம்’ என்று தர்மம் வகுத்தும், தெருவிலே நுழையவும் முடியாதபடி அவர்களை மருட்டியும் வதைப்பது நீதியா, முறையா?

கிராமங்கள் இன்று இருண்டு கிடக்கின்றன. உழவர்கள் வாடி வதங்குகின்றார்கள். பருவ மழையோ இல்லை. பயிர்வளமோ கிடையாது. பசித்தொல்லையோ பொல்லாதது. லட்சக்கணக்கில் மக்கள் வாடுகிறார்கள். ஊரைவிட்டு வாசலைவிட்டு, ஆணும் பெண்ணும் குட்டியும் குழந்தையும் வாலிபரும் கிழவரும் வானத்தைக் கூரையாகக் கொண்டு வறண்ட நிலத்தை வீடாக்கிக் கல்லுடைத்து மண்ணெடுத்து காலங்கழிக்கிறார்கள். இப்படி இருப்பவர்கள் எண்ணற்றவர்கள். காய்ந்த தலையும் எலும்பும் தோலுமாக இருக்குங் கோலமும், ஒட்டிய வயிறும் உலர்ந்த உதடும் மருண்ட கண்களும் குழி விழுந்த கன்னங்களும்அவர்களிடம் காண்கின்றனமே, அவர்களைப் பார்த்தால்மனம் உருகாதா? யார் இக்காட்சியைச் சகித்துக் கொண்டிருத்தல் கூடும்? கிராமங்களுக்குச் செல்லுங்கள். அவர்களை முன்னேற்றி அவர்களது வறுமையை ஒழியுங்கள்’’.

**உரைநடையில் கவனிக்க வேண்டியவை**

வாக்கிய அமைப்புகளும் பிழை நீக்கவும் பத்தியமைப்பும் குறியீடுகளும் தெரிந்து கொண்டால் மட்டும் இனிய உரை நடை எழுதுவது இயலாது. அழகிய இனிய நடையில் எழுதப்பட்டுள்ள நல்ல தமிழ் உரைநடை நூல்களைப் படிக்க வேண்டும். இனிய உரைநடை எழுதுவதற்கு அதுதான் பேருதவியாயிருக்கும்.

உரைநடை எளிதாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும். உரைநடையில் தெளிவே முதன்மையானது. இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கடினமான சொற்களைப் எழுதுவதால் உரைநடை உயர்ந்துவிடாது. அப்படி எழுதுவது பொத்தல் நடையாகும். இக்காலத்தில் விளங்காத முறையில் எழுதுவதைச் சிறந்ததாக அறிவுடையோர் ஒப்புக்கொள்வதில்லை. விளங்கும் எளிய நடையே உரைநடைக்கு அழகு.

1. **சொற்கள்** - உரைநடையில் கடினமான சொற்களைப் பயனில்லாமல் திணிப்பது கூடாது. ‘சென்றேன்’ என்பதற்குப் ‘படர்ந்தேன்’ என்று எழுதுவது நன்றாகயிராது. ‘நான் ஓர் எருதைப் பார்த்தேன்’ என்று எழுதாமல் ‘எனக்கு ரிஷபம் தரிசனமாயிற்று’ என்று எழுதுவது நகைப்பைத் தான் விளைவிக்கும். ‘துணியைத் துவைத்தீரா?’ என்று எழுதாமல் ‘கலையைச் சிலையிற் கலையாமல் தோயத்தில் தோய்த்துத் துவைத்தீரா?’ என்று எழுதுவதும் வேடிக்கையாகவே இருக்கும்.

வீணாக ஆங்கில சொற்களையும் வடமொழிச் சொற்களையும் பெய்து எழுதுவது தவறு. ரோட், டிரைவர் என்பன போன்ற ஆங்கில சொற்களையும், ஜலம், சாதம் போன்ற வடமொழிச் சொற்களையும் எழுதுவது பிழையே. வுழக்கு வீழ்ந்த சொற்களை பயன்படுத்துவதும் நன்றன்று. உவன் என்பது வழக்கு வீழ்ந்த சொல். கூடியமட்டும் தமிழ் சொற்களைக் கொண்டே எழுதுக. மிகவும் இன்றியமையாத இடங்களில் வல்கனைட், பிளாட்டினம், டயர், ரப்பர், பேனா, பென்சில், கொக்கோ, சோடா, பெப்பர்மின்ட், ஆப்பில், சிகரெட் போன்ற பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தலாம்.

2. **மேற்கோள்** - வீணாக மேற்கோள்களைக் கொட்டிவிடுவது அறிவுக் குறைவைக் காட்டும் என்பர். புழையகாலத்தில் மேற்கோள்களை மிகுதியாய்ச் சேர்த்து எழுதுவது வழக்கமாய் இருந்தது. இக்காலத்தில் இன்றியமையாது தேவைப்படும் இடங்களில் மட்டும் வலியுறுத்தும் பொருட்டு மேற்கோள்களைப் பயன்படுத்த வேண்டும்.
3. **இனிய சொற்றொடரும் மரபும்** - ஆங்காங்கே இனிய சொற்றொடர்களையும் மரபுத்தொடர்களையும் இனிமைக்காக பயன்படுத்தலாம். வேண்டுமென்று அவைகளை வலிந்து புகுத்துதல் கூடாது.
4. **பழமொழிகள்** - உரைநடையில் வேண்டிய இடங்களில் மட்டும் பழமொழிகளைப் பயன்படுத்தலாம். அவற்றையும் அளவுக்கு மேல் பயன்படுத்துதல் கூடாது. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும். வேண்டுமென்றே பழமொழிகளைப் புகுத்து எழுதுதலும் கூடாது.
5. **அணிகள்** - உரைநடையில் விளக்கத்திற்காகவும் சுருக்கத்திற்காகவும் அழகுக்காகவும் உவமை, உருவகம் முதலிய அணிகளை அமைத்து எழுதலாம்.
6. **சந்திகள் -** மிகவும் இன்றியமையாத சந்திகளையே பயன்படுத்த வேண்டும். கடின சந்திகளையும் ஐயம் உண்டாக்கும் சந்திகளையும் விலக்குதல் நல்லது. ‘ பலவிலைகள்’ என்னும் சொற்றொடர்க்குப் பல இலைகள் என்று பொருள் இருக்குமானால், ‘பல இலைகள்’ என்றே பிரித்தெழுதுக. ‘நானூறு’ என்பது ‘நான் நூறு’ என்று பொருள் கொள்வதாயிருந்தால் பிரித்தே எழுதுக.
7. **மொழிநடை** – மொழிநடை பலவகையாக இருக்கலாம். அவரவர் திறமைக்கும் பழக்கத்திற்கும் அறிவுடைமைக்கும் ஏற்றவாறு மொழிநடை அமையும். பொதுவாக பயன்படுத்துவதற்கு எளிய மொழிநடையே இன்று வேண்டுவது.

**மொழிநடையைக் குறித்துத் தமிழ் அறிஞர் பெருமக்கள் கூறியிருப்பதாவது :**

தண்டமிழ் மொழிக்கு அரும் பெருந்தொண்டாற்றிய பேரறிஞர் தஷ்ணாத்திய கலாநிதி டாக்டர்.உ.வே.சாமிநாத ஐயரவர்கள் 23.1.1933-ல், நேதர்ஜி போஸ் சாலையிலுள்ள சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் நடந்த தமிழன்பர் மாநாட்டில் நிகழ்த்திய பேருரையில் உரைநடையைப் பற்றி அவர் கூறியதாவது:-

‘‘.........தமிழ் வசனநடையை ஒருவகைப்படுத்த விரும்பும் அன்பர்கள், எழுதும் மொழி வேறாக வேறாக இருக்கிறதே என்று எண்ணுவதிற் பயனில்லை. பிழையின்றி இயன்றவரையில் யாவருக்கும் விளங்கும் வார்த்தைகளையே எழுதும் பழக்கத்தை மேற்கொள்வது நல்ல

முறையாகும். வழக்கற்ற சொற்களையும் திரிசொற்களையும் வசனநடையில் கூடிய வரையில் விலக்குதல் நன்று. தம் கருத்தை மற்றவர்கள் எளிதில் அறிந்து பயனுற வேண்டுமென்பதை எழுதுபவர்கள் மனதிற்கொண்டு எழுதுவதுதான் பயனை அளிக்கும். பேசினாலும் எழுதினாலும் கருத்தை அறிவிக்கும் நோக்கத்தை முக்கியமாகக் கொள்ள வேண்டுமேயன்றிக் கடுமையான நடையைக் கைக்கொள்ளுதல் கூடாது. அவ்வாறு கைக்கொண்டால், 'தமிழே கடினமானது' என்னும் எண்ணம் தமிழ் மக்களுக்கு உண்டாகி விடும்.''

- **தமிழன்பர் மாநாட்டு தலைமையுரை.**

திரு K.S.சீனிவாசப் பிள்ளையவர்கள் தம்முடைய அரிய நூலாகிய தமிழ் வரலாற்றின் முதற்பாகத்தில் தமிழ் உரைநடையைப் பற்றி தெளிவாக எழுதியுள்ளதாவது:-

''இனி, உரைநடை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை எனக்குத் தோன்றியவாறு சொல்லுகிறேன்.......உரைநடை அல்லது வாசகத்தை எழுதும்போது வீணான சந்தியிலக்கணத்தைக் கைவிட்டுப் பதங்களைத் தனித்தனியே எழுத வேண்டும்.......உரைநடையில் திரிசொற் பிரயோகத்தைத் தவிர்க்க வேண்டும். இயற்சொற்களையே பெரும்பான்மை உபயோகித்தல் வேண்டும். இலக்கண வழுப் புகாமல் காக்க வேண்டும். இழி வழக்கிலுள்ள இயற்சொற்கள் இலக்கண வழுவிலவேனும் அவைகளைத் தவிர்த்தல் வேண்டும். தமிழ்ச் சொற்கள் இருக்கப் பிற மொழிச் சொற்களைச் சேர்ப்பது தவறேயாம்.''

- **தமிழ் வரலாறு.**

வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரியார் கூறியுள்ளதாவது:-

''பிறரெல்லாம் படித்துணர்ந்து கொள்ளத்தக்க தெளிவான நடையில் எழுதுவது யாவரும் மேற்கொள்ளத்தக்கது. அத்தன்மையான தெளிவு நடைக்குத் திரிசொற்கள் வேண்டுவதில்லை.''

- **தமிழ் மொழியின் வரலாறு**.

திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகியவற்றை மொழிபெயர்த்த டாக்டர் G.U.போப் என்ற ஐரோப்பியர் தண்டமிழ் மொழிக்கு இணையற்ற தொண்டு செய்த கிறித்தவச் சமயத் தொண்டர். அவர் 1857-ல் வெளியிட்ட தமது இலக்கண வினாவிடை நூலில் கூறியிருப்பதாவது:-

''தமிழ்ப் பாஷையைப் பேசுவோரும் எழுதுவோரும் பிரயோகப்படுத்துவதில் கவனிக்கத்தக்க முக்கியமான விதிகள் யாவை? (1) தாம் கருதிய பொருளை யாவரும் ஐயமின்றி எளிதில் அறியும் பொருட்டுத் தெளிவாய் எழுத வேண்டும். (2) இயன்ற மட்டும் அந்நிய பாஷையின் மொழிகளை நீக்கி இயற்றமிழ்ச் சொற்களைத் தெரிந்து எழுத வேண்டும். (3) பயன்படாத சந்தி விகாரங்களை நீக்கிவிட வேண்டும்.''

தமிழ் மக்களின் முன்னேற்றம் அறிவு வளர்ச்சியினால் ஏற்படுவது. இவ்வுண்மையை உணர்ந்து எளிய நடையில் யாவருக்கும் விளங்கும் முறையில் கட்டுரைகளை எழுத வேண்டும்.

**மாதிரி வினாக்கள்**

1. மொழிநடை குறித்து எழுதுக.
2. தமிழறிஞர்கள் மொழிநடை பற்றி குறிபிட்டுள்ளனவற்றை கூறுக.
3. உரைநடையில் கவனிக்க வேண்டியவை யாவை?
4. பேரறிஞர் அண்ணாத்துரை மொழிநடை பற்றி கூறியுள்ளவற்றை விளக்குக.
5. ரா.பி.சேதுப்பிள்ளை, திரு.வி.க போன்றோரின் மொழிநடையை ஆய்க.

## அலகு - 2

## வலி மிகுதல்

நல்ல தமிழ் எழுதுவது என்றால் என்ன பொருள்? அழகான சொற்களை அணியணியாக அடுக்கிப் பிழையாக எழுதுவது என்று பொருள்படுமா? இல்லை. பிழையற்ற தமிழில் இலக்கணமரபு குன்றாமல் எழுதுவதுதான் நல்ல தமிழில் எழுதுவதாகும். பிழையோடு அழகாக எழுதுவது மணமற்ற மலர் போன்றதாகும். பிழைகள் மலிந்த அழகிய நூல்களுக்கு அறிஞர் மதிப்புக் கிட்டுவதில்லை. பிழையற்ற நூல்களே மதிப்படையும், நின்று நிலவும். பிழையுள்ளவை நாளடைவில் அழிந்து ஒழியும்.

வலி மிகுதல் என்பது நல்ல தமிழ் எழுத விரும்புவோர் அறிந்து கொள்ள வேண்டியவற்றுள் ஒன்று. ‘வலி மிகுதல்’ என்பது பற்றிச் சிந்தித்தால் தலைவலி மிகும் என்று எண்ணிவிட வேண்டியதில்லை. வல்லைழுத்து மிகுந்து வருதலையே இலக்கணத்தில் சுருக்கமாக வலி மிகுதல் என்பர். வலி மிகுதலால் பொருள் வேறுபாடு தெரியும். இன்னோசை உண்டாகும். ‘செடிகொடி’ என்னும் தொடருக்கும் ‘செடிக்கொடி’ என்னும் தொடருக்கும் வேறுபாடு உண்டு. செடி கொடி என்னும் தொடருக்குச் செடியும் கொடியும் என்பது பொருள். செடிக்கொடி என்னும் தொடரானது செடியில் ஏறியுள்ள கொடி என்றே பொருள் தரும். திரைக்கடல் என்னும் சொற்றொடருக்குத் திரையையுடைய கடல் என்று பொருள் காண வேண்டும். திரை - அலை. ‘தந்த பலகை’ என்னும் தொடருக்கும், ‘தந்தப் பலகை’ என்னும் தொடருக்கும் முறையே கொடுத்த பலகை என்றும், தந்தத்தால் ஆன பலகை என்றும் பொருள் ஏற்படும். ‘பெண்மையுடைய பெண்களெலாம்’, ‘பெண்மையுடையப் பெண்களெலாம்’ ஆகிய இவ்விரண்டு தொடர்களையும் பாருங்கள். முதலாவது தொடரானது பெண் தன்மையுள்ள பெண்களெலாம் என்று பொருள் தருகிறது. இரண்டாவது தொடர் பெண் தன்மை ஒழிந்து போக இருக்கும் பெண்களெல்லாம் எனப் பொருள் கொடுக்கிறது. இவற்றை இங்கு எடுத்துக் காட்டியதன் மூலம் இலக்கண அறிவு இருந்தால்தான் சொற்றொடர்களின் பொருளை நன்குணர்ந்துகொள்ள முடியும் என்பது புலனாகும். எனவே, நம் முன்னோர்கள் புணர்ச்சி இலக்கண அறிவை மொழித்தேர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாய் வற்புறுத்தியுள்ளார்கள்.

வாழை பழம் என்றால் நன்றாயிருக்குமா? என்று எழுதுவதை விட வாழைப்பழம் என்றால் தான் தமிழுக்குரிய இனிய ஓசையை அச் சொற்றொடரில் காணலாம்.

போதுமான தமிழ்க்கல்வி இல்லாதவர்கள் எழுதும் நூல்களில், வலி மிகவேண்டிய இடத்தில் வலி மிகாமல் இருக்கும் பிழைகள் மலிந்து கிடக்கின்றன. ரயில் நிலைய அறிவிப்புகளிலும், வேறு இடங்களில் காணப்படும் அறிவிப்புப் பலகைகளிலும் இப் பிழைகளை மிகுதியாகக் காண்கிறோம். தமிழ் நாளிதழ்களிலோ, தமிழ் வார இதழ்களிலோ இப்பிழைகள் மலிந்திருப்பதைப் பற்றிச் சொல்லவே வேண்டுவதில்லை. இங்ஙனம் அங்கும் இங்கும் எங்கும் பிழைகளே மிகுந்திருத்தலைக் காணலாம். ஆங்கில இதழ்களிலோ பிழைகள் மிகுந்திருக்கக் காண்பதில்லை. தமிழ் செய்த தவக்குறைவோ என்னவோ தமிழ் நாளிதழ்களிலும் வார

இதழ்களிலும் எழுத்தாளர் பலர் நூல்களிலும் இப் பிழைகள் மலிந்து கிடக்கின்றன. குாரணம் மொழித் தேர்ச்சியற்றவர்கள் எழுதுவதே ஆகும்.

பல மொழிகளை ஆய்ந்தறிந்த மொழிநூலாசிரியர் ஆட்டோ யெஸ்பர்சன் என்பவர், ''ஒரு மொழியைக் கற்றுக் கொள்வது என்றால், பல சொற்களை அடுக்கி எழுதப் படித்துக்கொள்வது மட்டுமாகாது. எந்த மொழியைக் கற்கிறார்களோ அந்த மொழிக்கு உரிய இலக்கண முறைப்படி மரபுதவறாது சொற்களைச் சேர்த்தெழுதக் கற்றுக்கொள்ள வேண்டும்....இது யாருக்கும் இயற்கையாக உண்டாகாது. இயற்கையாக வர வேண்டுமென்றால் அளவு கடந்த உழைப்பு வேண்டுவதாகும்'' என்கிறார். அவர் கூறுவது மிகமிக உண்மை.

'வல்லெழுத்து மிகுவது ஏன் வேண்டும்?' பொருளைத் தெளிவாகவும் சரியாகவும் உணர்வதற்கும், தமிழ் மொழிக்கே உரிய இன்னோசையை வெளிப்படுத்துவதற்கும் இதைத் தெரிந்துகொள்ள வேண்டும். வலிமிகுதல் தமிழ்மொழியிலும் மலையாள மொழியிலும் காணப்படுவதன்றி வேறு மொழிகளில் இல்லை என்று மொழி நூலறிஞர்கள் கூறுகிறார்கள்.

'சென்னை தமிழ்ச் சங்கம்', 'மதுரை தமிழ்ச் சங்கம்' என்று எழுதுவது தவறு. 'சென்னைத் தமிழ்ச்சங்கம்' என்றும் 'மதுரைத் தமிழ்ச்சங்கம்' என்றும் எழுத வேண்டும்.

'புது கல்வி திட்டம்' என்று எழுதுவது பிழையாகும். 'புதுக் கல்வித் திட்டம்' என்று எழுத வேண்டும்.

'குடும்பங்களை காப்பாற்ற' என்று எழுதலாகாது. 'குடும்பங்களைக் காப்பாற்ற' என்று எழுதுக.

வல்லெழுத்து மிகுதலை மிகமிக எளிதாகப் தெரிந்து கொள்ளும்படி சில விதிகள் கீழே தரப்படுகின்றன. அவை வருமாறு :

1. அ, இ, எ; அந்த, இந்த, எந்த; அங்கு, இங்கு, எங்கு; ஆங்கு, ஈங்கு, யாங்கு; அப்படி, இப்படி, எப்படி; ஆண்டு (இடம்), ஈண்டு, யாண்டு; அவ்வகை, இவ்வகை, எவ்வகை; அத்துணை, இத்துணை, எத்துணை; இனி, தனி, அன்றி, இன்றி;S மற்ற, மற்றை, நடு, பொது, அணு, முழு, புது, திரு, அரை, பாதி எட்டு, பத்து, முன்னர், பின்னர் ஆகிய இவை நிலைமொழியாக, அ.்.தாவது முதலில் நிற்கும் சொல்லாக இருந்து, 'க' 'ச' 'த' 'ப' என்னும் எழுத்துகளுள் எது வருமொழியாக வந்தாலும் வல்லெழுத்தானது கட்டாயம் மிகும். 'க' என்றால் 'க' முதல் 'கௌ' வரையிலுமுள்ள எழுத்துக்களைக் கொள்ள வேண்டும். இவ்வாறே ச, த, ப என்னும் எழுத்துக்களுக்கும் கொள்ள வேண்டும். வருமொழி முதலில் அ.்.தாவது அடுத்து வரும் சொல்லின் முதலில் க, ச, த, ப வருக்கம் வந்தால்தான் வல்லெழுத்து மிகும். உயிரெழுத்து வந்தால் மிகாது. க, ச, த, ப வருக்கம் தவிர வேறு எழுத்துக்கள் வரினும் மிகாது. அ+பக்கம் = அப்பக்கம் என எழுத வேண்டும்.

**எடுத்துக்காட்டுகள்**

| | |
|---|---|
| அக் குடம் | அத்துணைப் பெரிய |
| இச் செடி | இத்துணைச் சிறிய |
| எப் பக்கம் | எத்துணைப்பாடங்கள் |
| அந்தச் செடி | இனிப் பேசேன் |
| இந்தக் குழந்தை | தனிக் குடிசை |
| எந்தப் பாடம்? | அ∴தன்றிக் கொடேன் |
| அங்குச் சென்றான் | இன்றிச் செல்வேன் |
| இங்குப் போகாதே | மற்றப் பிள்ளைகள் |
| எங்குக் கேட்டாய்? | மற்றைக் குறிப்புகள் |
| ஆங்குச் சென்றேன் | நடுக் கடல், நடுத் தெரு |
| ஈங்குக் கொடுத்தான் | அணுக் குண்டு |
| யாங்குச் சென்றாய்? | பொதுக் கூட்டம் |
| அப்படிப் பேசு | முழுப்பக்கம் |
| இப்படிச் சொல் | புதுக்கல்வி, புதுப்பொருள் |
| எப்படித் தந்தாய்? | திருக்குறள், திருக்குளம் |
| ஆண்டுப் போனேன் | அரைப் பக்கம் |
| ஈண்டுத் தந்தேன் | பாதித்துணி |
| யாண்டுச் சென்றாய்? | எட்டுக் குழந்தைகள் |
| அவ்வகைக் கொடி | பத்துச் செடிகள் |
| இவ்வகைப் பூக்கள் | முன்னர்க் கண்டேன் |
| எவ்வகைச் செடி? | பின்னர்ப் பேசுவேன் |

பெரும்பாலோர் ‘அங்கு போனார்’, ‘இங்கு சென்றார்’ ‘எங்கு கொடுப்பாய்’ என்று எழுதுகின்றனர். இப்படி எழுதுவது தவறு. ‘அங்குப் போனார்’, ‘இங்குச் சென்றார்’ ‘எங்குக் கொடுப்பாய்’ என்றே எழுத வேண்டும். அங்கு, இங்கு, எங்கு என்னும் சொற்களுக்குப்பின் கட்டாயம் வல்லெழுத்து மிகும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

2. சொற்கள் க்கு, ச்சு, ட்டு, த்து, ப்பு, ற்று என முடிந்திருந்தால், அச்சொற்களை வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்கள் என்பர். மக்கு, தச்சு, விட்டு, செத்து, உப்பு, கற்று

ஆகிய இவை வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்கள். இத்தகைய சொற்கள் நிலை மொழியாக இருந்து வருமொழி முதலில் க, ச, த, ப என்னும் எழுத்துக்கள் வந்தால், கட்டாயம் வல்லெழுத்து மிகும்.

எடுத்துக்காட்டாக கீழ்வரும் சொற்களைக் காணலாம்.

| | |
|---|---|
| மக்குப் பையன் | செத்துப் பிழைத்தான் |
| தச்சுத் தொழில் | உப்புக் கடை |
| விட்டுச் சென்றார் | கற்றுக் கொடுத்தார் |

பத்து, எட்டு என்னும் சொற்களும் இங்கே அடங்கும். (உ.ம்) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை. எதிர்த்து பேசினார் என்று எழுதுவது தவறு. எதிர்த்துப் பேசினார் என்றே எழுத வேண்டும். விற்று சென்றான் என எழுதலாகாது. விற்றுச் சென்றான் என்றுதான் எழுத வேண்டும்.

3. 'நாட்டின் ஆட்சியை கைப்பற்ற' என்று எழுதுதல் பிழை. 'ஆட்சியைக் கைப்பற்ற' என்று எழுதுவது சரியானது. 'மந்திரி சபைக்கு போக' என்று வல்லெழுத்து மிகாமல் எழுதுவது தவறு. 'மந்திரி சபைக்குப் போக' என்றே எழுத வேண்டும்.

இரண்டாம் வேற்றுமை 'ஐ' என்னும் உருபிற்குப் பின்னும், நான்காம் வேற்றுமை 'கு' என்னும் உருபிற்குப் பின்னும் வல்லெழுத்து மிகும்.

வல்லெழுத்து மிகுதலைப் பற்றி எழுதுவது சுவையாக இராது. படிப்பதும் சிறிது கடினமாக இருக்கும். எனினும், ஒருமுறை இருமுறை இங்கே எளிதான முறையில் கூறியுள்ளதைப் படித்தறிந்து பழகிவிட்டால், இப்பிழை வாராதவாறு எவரும் எழுதலாம். எழுதவும் முடியும். 'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம், வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்' என்பது உண்மை. மனம் உண்டானால் வழி உண்டாகும். முயற்சி செய்தால் முடியாதது ஒன்றுமில்லை.

1. ''இந்த இடத்தை பிரயாணிகள் தங்கும் இடமாகப் உபயோகிக்கக் கூடாது. டிக்கட்டுகள் வாங்கியவுடன் தங்குமிடத்திற்கு செல்ல கோறப்படுகிறார்கள்.''
2. ''உசிலம்பட்டி வரையிலுள்ள ஸ்டேஷன்களுக்கும் மதுரைக்கு தெற்கேயுள்ள எல்லா ஸ்டேஷன்களுக்கும் 2-ஆம் வகுப்பு டிக்கெட்டுகள் கொடுக்கப்படும்.''

இவ்விரண்டு அறிவிப்புகளும் செந்தமிழ் உலவும் நந்தமிழ் மதுரைப் புகைவண்டி நிலையத்திலேயே பயணச் சீட்டு விற்குமிடத்தில் இருப்பவை. பல்லாயிரக்கணக்கான மக்களால்

பார்க்கப்படுபவை. எந்தத் தமிழறியார் திருப்பணியோ இது! புகைவண்டி நிலையத்து எழுத்தர் திருப்பணியாகத்தான் இ்.து இருக்க வேண்டும்.

முதல் அறிவிப்பில் ‘இடத்தை பிரயாணிகள்’ என்று வல்லெழுத்து மிகாமல் இருப்பது பிழையானது. ‘இடத்தைப் பிரயாணிகள்’ என்று எழுதவேண்டும். ‘தங்குமிடத்திற்கு செல்ல கோறப்படுகிறார்கள்’ என்னும் மூன்று சொற்களுள்ள தொடரில் மூன்று பிழைகள் உள்ளன. ‘தங்குமிடத்திற்குச் செல்லக் கோரப்படுகிறார்கள்’ என்று எழுதுவது தான் திருத்தமானது.

இரண்டாவது அறிவிப்பில் ‘மதுரைக்கு தெற்கே’ என்று இருப்பது தவறானது. ‘மதுரைக்குத் தெற்கே’ என்றிருக்க வேண்டும். இரண்டாம் வேற்றுமை ‘ஐ’ உருபின் பின்னும் நான்காம் வேற்றுமை ‘கு’ உருபின் பின்னும் வல்லெழுத்து மிக வேண்டும் என்னும் இவ் விதிகள் தெரிந்திருந்தால் இப்பிழைகள் நேர்ந்திராது. நாளிதழ் ஆசிரியர்களும் செய்தி எழுதி அனுப்புகிறவர்களும் இவை போன்ற பிழைகளைச் செய்துவருகிறார்கள். ஆதலால், எத்துறையினரும் வல்லெழுத்து மிகுதலைக் கற்றுக்கொள்ள வேண்டும். எளிதாகக் கற்கலாம்.

வல்லெழுத்து மிகுதற்குள்ள வேறு விதிகளையும் இங்குக் காண்போம்

வேறொருச் சொல்லைப் பற்றியல்லாது நிற்க முடியாதிருக்கும். ஒரு குறைந்த வினைச்சொல் மற்றொரு வினைச்சொல்லை தழுவி நின்றால், அப்பொருள் குறைந்த வினைச்சொல்லை வினையெச்சம் என்பர். தேடப் போனார், எனக் கூறினார். மெல்ல சொன்னார், தேடிச் சென்றார், வருவதாய் கூறினார், போய்ப் பார்த்தார் எனும் இத்தொடர்களில் உள்ள தேட, என, மெல்ல, தேடி, வருவதாய், போய் என்பவை வினையெச்சங்களாகும். இவை எச்சச் சொற்களாய் வினைத் தழுவி நிற்பதால் வினையெச்சங்கள் எனப்படும். தேட, என, மெல்ல என்னும் இவ்வினையெச்சங்கள் அகர ஈற்றில் முடியும் வினையெச்சங்கள். தேடி என்பது இகர ஈற்றில் முடியும் வினையெச்சம். போய் என்பது வினையெச்சம். வருவதாய் என்பது ஆய் சேர்ந்து வந்த வினையெச்சம். அகர ஈற்று வினையெச்சத்தின் பின்னும், இகர ஈற்று வினையெச்சத்தின் பின்னும் ஆய், போய் என்னும் வினையெச்சங்களின் பின்னும் வரும் வல்லெழுத்து மிகும். இதனைக் கீழ்வரும் எடுத்துக்காட்டுகளைப் படித்துத் தெரிந்துக்கொள்ளலாம்.

1. வரக்கூறினார், தேடப்போனார் - அகர ஈற்று வினையெச்சத்தின் பின் வந்த வல்லெழுத்து மிகுந்தது.

2. கூறிச்சென்றார், வாடிப்போயிற்று - இகர ஈற்று வினையெச்சத்தின் பின் வந்த வல்லெழுத்து மிகுந்தது.

3. போய்ச் சொன்னார், போய்த் தேடினார் - போய் என்னும் வினையெச்சத்தின் பின் வந்த வல்லெழுத்து மிகுந்தது.

4. சொன்னதாய்ச் சொல், வந்ததாய்க் கூறு – ஆய் சேர்ந்து வந்த வினையெச்சத்தின் பின் வந்த வல்லெழுத்து மிகுந்தது.

மதுரைப் புகைவண்டி நிலைய முதல் அறிவிப்பில் 'செல்ல கோறப்படுகிறார்கள்' என்றிருப்பது தவறு என்று முன்னர் குறிப்பிடப்பட்டது. 'செல்லக் கோரப்படுகிறார்கள்' என்றிருக்க வேண்டும் என்று திருத்தமும் முன்னர் கூறப்பட்டது. அப்படிக் கூறக் காரணம் யாதெனில் 'செல்ல' என்பது அகர ஈற்று வினையெச்சம். ஆதலால், 'செல்லக் கோரப்படுகிறார்கள்' என்று எழுத வேண்டும். கோரப்படுகிறார்கள் என்பதற்கு விருப்பப்படுகிறார்கள் என்பது பொருள். இடையின ரகரத்திற்கு வல்லின றகரம் போடப்பட்டிருப்பது பிழை.

5. இரண்டு சொற்கள் இருந்து பொருள் கொள்ளும்போது நடுவில் ஆறாம் வேற்றுமை உருபாகிய 'அது' என்பது மறைந்து வந்தால், ஆறாம் வேற்றுமைத் தொகை எனப்படும். குதிரைத் தலை என்பது ஆறாம் வேற்றுமைத் தொகை. ஆறாம் வேற்றுமைத் தொகையில் முதலில் நிற்கும் சொல் அஃறிணையாக இருந்தால் வல்லெழுத்துக் கட்டாயமாக மிகும்.

| | |
|---|---|
| குதிரைக் குளம்பு | நரிப் பல் |
| கோழிக் கால் | நாய்க் குட்டி |
| படைத் தலைவன் | கழுதைக் குரல் |
| சேனைத் தலைவன் | பறவைக் கூட்டம் |

பிழையில்லாமல் எழுதப்பட்ட அறிஞர்களுடைய உரைநடை நூல்களைப் படிப்பதால் ஓரளவு இவ் விதிகளை உணராமல் எழுதக்கூடிய மொழித்திறமைப் பெறலாம். அப்படித்தான் பலர் எழுதியும் வருகின்றனர். விதிகளைத் தெரிந்து கொண்டால் ஐயமின்றி எழுதும் ஆற்றல் மிகும். எனவே நல்ல தமிழ் எழுத விரும்புகிறவர்கள் வலி மிகும் விதிகளைப் படித்துத் தெரிந்து கொண்டால் பிழை இல்லாமல் எழுதலாம்.

## வலி மிகுதலும் மிகாமையும்

பொருளை நன்கு தெரிந்து கொள்வதற்கும் நாம் எழுதும் பொருளைப் பிறர் புரிந்து கொள்வதற்கும், வலி மிகுதலைப் பற்றியும் மிகாதிருத்தலைப் பற்றியும் அறிந்து கொள்வது இன்றியமையாதது.

'பசி பிணி பகை இவை குலோத்துங்கன் ஆட்சியில் இல்லை' என்னும் வாக்கியத்திற்கும், 'பசிப்பிணி, பகை இவை குலோத்துங்கன் ஆட்சியில் இல்லை' என்னும் வாக்கியத்திற்கும் பொருளில் மிகுந்த வேறுபாடு உண்டு. முதல் வாக்கியத்தில் பசியும் பிணியும் பகையும் இல்லை என்பது பொருள். இரண்டாம் வாக்கியத்தில் பசியாகிய பிணியும் பகையும் இல்லை என்பது பொருள். இரண்டிற்கும் உள்ள வேறுபாடு வலி மிகுதலால் உண்டாகிறது. ஓடா குதிரைகள் என்பதற்கும் ஓடாக் குதிரைகள் என்பதற்கும் நிரம்ப வேறுபாடுகள் உண்டு. ஓடா குதிரைகள்

என்றால் குதிரைகள் ஓடமாட்டா என்றும், ஓடாக் குதிரைகள் என்றால் ஓடாத குதிரைகள் என்றும் பொருள் கொள்ள வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட வேறுபாடு உணர்ந்து பிழையின்றி நல்ல தமிழ் எழுதுவதற்கு ஓர் அளவு இலக்கணம் அறிய வேண்டுவது இன்றியமையாதது. இலக்கணத்தின் நோக்கமானது பிறர் தவறின்றிப் புரிந்து கொள்வதற்கும், தவறின்றிக் கருத்தை வெளியிடுவதற்கும் கருவியாக அமைவதாகும். வல்லெழுத்து மிகுவதை நன்கு தெரிந்துகொள்வதற்குத் தொடர் இலக்கணம் இன்றியமையாததாகிறது.

## தொடர்

இரண்டு சொற்களுக்குக் குறையாமல் தொடர்ந்து வருவது தொடராகும். ஒரு சொல்லைத் தொடர் எனக் கூறக்கூடாது. ஒன்றுக்கு மேற்பட்ட வண்டிகள் தொடர்ந்து நிற்கும்போது தான் வண்டித்தொடர் என்று கூறுகிறோம். அதுபோல ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்தால்தான் தொடர் என்று கூறவேண்டும். கோழி கூவிற்று என்பது தொடர்.

தொடர், தொகாநிலைத் தொடர் என்றும் தொகைநிலைத் தொடர் என்றும் இருவகைப்படும். தொகாநிலைத் தொடரைத் தொடர் என்றும், தொகைநிலைத் தொடரைக் தொகை என்றும் கூறுவர்.

தொடரில் இரண்டு சொற்கள் இருந்து பொருள் கொள்ளும் போது நடுவில் சொல்லோ உருபோ மறைந்து வராமல் வெளிப்படையாக பொருளை உணர்த்துவது தொகாநிலைத் தொடர் எனப்படும்.

தொடரில் இரண்டு சொற்கள் இருந்து பொருள் கொள்ளும் போது நடுவில் சொல்லோ உருபோ மறைந்து வந்து பொருளை உணர்த்துவது தொகாநிலைத் தொடர் எனப்படும்.

கோழி கூவிற்று என்னும் தொடரில் ஒன்றும் மறைந்து (தொக்கி) நிற்கவில்லை. ஆதலால் இது தொகாநிலைத் தொடர் எனப்படுகிறது. தங்கை சட்டை என்னும் தொடரானது தங்கையினது சட்டை எனப் பொருள் தருகிறது. இதில் ‘அது’ என்னும் உருபு மறைந்து வருவதால் தொகைநிலைத் தொடர் என்கிறோம்.

துணி கிழிந்தது – தொகாநிலைத் தொடர்

துணி கட்டு – தொகைநிலைத் தொடர்

துணி கிழிந்தது - இ:்து எழுவாய்த் தொடர். எழுவாய் முதலில் இருப்பதால் எழுவாய்த் தொடராகிறது. கிளி பேசுகிறது - இ:்து எழுவாய்த் தொடர். எழுவாய்த் தொடரில் பெரும்பாலும் வல்லெழுத்து மிகாது.

ஓடா குதிரைகள் - இது வினைமுற்றுத் தொடர். வினைமுற்று முதலில் இருப்பதால் இது வினைமுற்றுத் தொடர். வினைமுற்றுத் தொடரில் வல்லெழுத்து மிகாது. ஓடாக் குதிரைகள் என்னும் தொடரைப் பெயரெச்சத் தொடர் என்போம். ஓடாத என்னும் சொல்லில் இருக்கும் ‘த’

என்னும் ஈறு கெட்டுவிட்டது. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத் தொடரில் வரும் வல்லெழுத்து மிகுந்து வருமாதலால் ஓடாக்குதிரைகள் என்று எழுத வேண்டும்.

தொகைநிலைத் தொடரானது சொற்சுருக்கத்திற்காகத் தமிழில் அமைந்து கிடக்கிறது. சொற்களின் சிக்கனத்திற்காகவும் புதுச்சொற்களை ஆக்கிக்கொள்வதற்காகவும் நம் முன்னோர்கள் தொகைநிலைத் தொடர்களை அமைத்திருக்கின்றனர். துணி கட்டு - இது தொகைநிலைத் தொடர். தொகை ஒருசொல் நீர்மைத்து. அ.்.தாவது இரண்டு சொற்களாக நின்றாலும் ஒரு சொல் போன்ற தன்மையுடையது.

செடிகொடிகள் - இ.்.து உம்மைத்தொகை. நடுவில் இணைக்கும் 'உம்' மறைந்திருப்பதால், உம்மைத்தொகை. பூரிகிழங்கு, இட்டலிசாம்பார் இவை உம்மைத்தொகைகள். உம்மைத்தொகையில் வல்லெழுத்து மிகாது. செடிக்கொடிகள், பூரிக்கிழங்கு, இட்டலிச் சாம்பார் என்று எழுதுவது தவறு. இப்படி எழுதினால் இவை உம்மைத்தொகைகள் ஆகாது. பொருளும் மாறுபடும். யானை குதிரை – உம்மைத்தொகை. மேற்குறிப்பிட்டவற்றிலிருந்து உம்மைத்தொகையில் வலிமிகாது என்பது அறிய முடிகிறது.

மலைத்தோள் - இ.்.து உவமைத்தொகை. உவமையைக் காட்டும் சொல் மறைந்து வந்திருப்பதால் உவமைத்தொகை ஆயிற்று.

வேற்றுமைத் தொகையில் இரண்டு வகை உண்டு. வேற்றுமை உருபுமட்டும் மறைந்துவரும் தொகை வேற்றுமைத்தொகை. துணி கட்டு - இ.்.து இரண்டாம் வேற்றுமைத் தொகை. இங்கே வல்லெழுத்து மிகாது. குதிரைக் கழுத்து - இ.்.து ஆறாம் வேற்றுமைத் தொகை. ஆறாம் வேற்றுமைத் தொகையில் முதலில் நிற்கும் சொல் அ.்.றிணையாக இருக்குமானால் வல்லெழுத்து மிகும். கிளிக்கால், வையைக்கரை இவற்றில் வலி மிகுந்திருப்பதைக் காணலாம். ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி உயர்திணையாக இருக்குமானால் வல்லெழுத்து மிகாது. சீதை கை, தம்பி சட்டை, கண்ணகி கோயில் - இங்கு நிலைமொழி உயர்திணையாய் இருப்பதால் வலி மிகவில்லை.

மற்றொரு வேற்றுமைத் தொகை உண்டு. இதனை உருபும் பயனும் உடன்தொக்க தொகை என்பர். யானைப் பாகன் என்னும் தொடரில் 'ஐ' உருபும், 'ஓட்டும்' என்னும் பயனைத் தரும் சொல்லும் மறைந்திருப்பதால், இத்தொகையை உருபும் பயனும் உடன்தொக்க தொகை என்கிறோம். 'யானையை ஓட்டும் பாகன்' என்பது இத்தொடருக்குப் பொருள். உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வல்லெழுத்து கட்டாயம் மிகும்.

1. சிற்றுண்டிச்சாலை, தண்ணீர்த் தொட்டி - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வலி மிகுந்தது.
2. தங்கக்காப்பு, பருத்தித்துணி, தகரப்பெட்டி - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வலி மிகுந்தது.
3. குழந்தைப்பால் - நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வலி மிகுந்தது.

4. மலைப்பாம்பு, மதுரைச் சொக்கநாதர் கோயில், மதுரைத் தியாகராசர் கல்லூரி, கல்லூரிக் கழகம், சென்னைத் தமிழ்ச்சங்கம் - ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வலி மிகுந்தது.

மல்லிகைப்பூ - இ∴து இருபெயரொட்டுப் பண்புத்தொகை. சிறப்புப் பெயரும் பொதுப் பெயரும் இருந்து 'ஆகிய' என்பது தொக்கி வருவது இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும். மல்லிகை என்பது சிறப்புப் பெயர். ஒரு வகையைக் குறிப்பது சிறப்புப் பெயர். பூ என்பது பொதுப் பெயர். பொதுவான பெயர் பொதுப் பெயர் எனப்படும். இரு பெயர் ஒட்டி வருவதால் இருபெயரொட்டுப் பண்புத் தொகை என்கிறோம். இருபெயரொட்டுப் பண்புத் தொகையில் இருபெயரும் ஒன்றையே குறிக்க வேண்டும். இருபெயரொட்டுப் பண்புத் தொகையில் வருமொழி வல்லெழுத்தில் தொடங்கினால் வல்லெழுத்து மிகும்.

(எ.கா) ஆடித்திங்கள், ஆவணித்திங்கள், சென்னைப்பட்டினம், மதுரைப்பட்டணம், பசிப்பிணி.

குடிதண்ணீர், சுடுகாடு - இவை வினைத்தொகைகள். மூன்று காலம் காட்டும் விகுதி மறைந்து வருவது வினைத்தொகை. வினைத்தொகையில் வல்லெழுத்து மிகாது.

கீழ்கணக்கு என்று இரண்டும் சேரும்பொழுது அவை கீழ்கணக்கு என்றும் வரும். 'கீழ் என் கிளவி உறழத் தோன்றும்' என்று தொல்காப்பிய எழுத்ததிகாரமும், 'கீழின்முன் வன்மை விகற்பமும் ஆகும்' என்று நன்னூலும் விதி கூறுகின்றன. இவ்விரு நூல்களும் இரு வகையாகவும் எழுதலாம் என்று கூறுகின்றன. ஆனால் தொல்காப்பிய உரையாசிரியர்கள் பதினெண் கீழ்க்கணக்கு என்றே எழுதியுள்ளதைக் காண்கிறோம். கிழக்கு என்னும் சொல்லும் திசை என்னும் சொல்லும் சேரும்பொழுது கீழ்த்திசை என்றே வரும். 'கீழ்த்திசை வாயிற் கணவனொடு புகுந்தேன்' என்று சிலப்பதிகாரக் கட்டுரைகாதை 182 ஆவது வரியில் கீழ்த்திசை என வந்திருப்பது காணலாம்.

எழுத்துகள் என்பது சரியா, எழுத்துக்கள் என்பது சரியா என்பது குறித்து இருவேறு கருத்துக்கள் உண்டு. எழுத்துகள் என்பதே சரியானது. வாக்குக்கள், வாழ்த்துக்கள், எடுத்துக்காட்டுக்கள், இனிப்புக்கள், விளையாட்டுக்கள், விளக்குக்கள் என்பவை கேட்க இனியனவாய் இருக்கின்றனவா? இல்லையே. மேலும் விகுதிப்புணர்ச்சியில் வல்லெழுத்துக்குப்பின் வரும் வலி மிகுவதற்கு விதியும் இல்லை.

## வலிமிகும் விதிகளின் தொகுப்பு

தமிழ் வளர்த்த மதுரை மாநகரத்தின் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து ஒருவர் நகருக்குள் நுழைந்தால் முதலில் கீழ்கண்ட அறிவிப்புகள் அவர் கண்களில் படும்.

கரிகடை – மதுரைப் பேருந்து நிலையத்துக்கு அருகில் உள்ள கடை.

விலை குறைவாய் கிடைக்கும் - துணிக்கடை

வாடகைக்கு கிடைக்கும் - மிதி வண்டி செப்பனிடுந் தொழிற்கடை

அமைப்புப்பற்றி பேச, அதிகமாக காயங்கள், வங்காள தொழிலமைச்சர், பண்பாட்டை கடைபிடித்து, எந்த சமூகத்தையும், தெரிவித்து கொள்ள, தற்கால கல்வி, திருமதி சுப்பராவுக்கு பாராட்டு, இலங்கை கண்காணிகள், ஆட்களை கடத்தும், சென்னை கடற்கரை, இலங்கைக்கு சட்ட விரோதமாக, முடிவுபற்றி பாகிஸ்தான் பதில், இடைக்கால பதில், பேசி காரியங்களை, தவிர தற்காப்பு, ஒன்றை புதிதாக, நிகழ்ச்சிகளை பற்றி, இங்கு செய்யக் கூடியது, குறித்து பிரெஞ்சு உதவி, இந்த பதிலை தெரிவிக்குமாறு, தீ பெட்டி தொழிற்சாலை, மதுரைக்கு திருப்பியனுப்பப்படுவர், அந்த துறைகளில், அதற்கேற்ப போதிய, நுணுக்கமாக திட்டத்தை, கிழக்கு நோக்கி பாயச் செய்ய, வேண்டுமென கேட்டுக் கொண்டார், நேற்று பகல், சென்னை கிரிக்கெட் கழகம் - இவை தமிழகத்தில் உலவி வரும் சில நாளிதழ்களில் ஒரே நாளில் வந்த பிழைகள்.

மாண்புறத் தமிழ் வளர்த்த மதுரையில் மட்டுமல்லாமல், தமிழ் நாட்டில் இருக்கும் பல இடங்களிலுமுள்ள அறிவிப்புப் பலகைகளிலும் ரயில் நிலையங்களிலும் நாளிதழ்களிலும் வேறு வெளியீடுகளிலும் இத்தகைய பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. மேலே குறிப்பிடப்பட்ட தவறுகள் வல்லெழுத்து மிகாத பிழைகளாகும். வார நாளிதழ்களிலும் பெரும்பாலான நூல்களிலும், புதியனவாக வருகின்ற பல கவிதைகளிலும் காணப்படுகின்ற எழுத்துப் பிழைகள், சொற் பிழைகள், வாக்கிய தவறுகள், ஒருமை பன்மைத் தவறுகள், குறியீட்டுத் தவறுகளான இவைகளைப் பற்றிச் சொல்ல வேண்டுவதே இல்லை.

ஆங்கில நாளிதழ்களிலும் வெளியீடுகளிலும் அளவற்ற தவறுகளைக் காண்பதில்லை. ஏனென்றால் ஆங்கில மொழித் தேர்ச்சியுடையவர்களே நாளிதழ்களை நடத்துவதனாலும், நாளிதழ்களுக்குச் செய்தி திரட்டி அனுப்புகிறவர்களும் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருக்கும் காரணத்தினாலும், ஆங்கில நாளிதழ்களில் பெரும்பாலும் அளவுக்கு மிக்க தவறுகளைக் காண்பது அரிதாகிறது. தமிழில் நாளிதழ் நடத்துபவர்களும் ஓரளவு மொழித் தேர்ச்சி பெற்றுவிட்டால், இக் குறைகள் விரைவில் நீங்கும். எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழாட்சி மொழியைப் பயன்படுத்தும் அலுவலர்கள் ஓரளவு மொழித் தேர்ச்சி பெற்றுவிட்டால், இன்று பிழையாகவே எழுதும் இழிநிலை நாளடைவில் அடியோடு அழிந்தொழியும்.

தமிழகத்தில் எல்லாத்துறைகளிலும் எதையும் நல்ல தமிழில் எழுத வேண்டிய இன்றியமையாமை இன்று நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆதலால், அலுவலக எழுத்தர்கள் தமிழை வழுவின்றி எழுதப் பயின்றுகொள்ள வேண்டும். நாளிதழ் ஆசிரியர்களும் பிறரும் இனிப் பிழையின்றித் தமிழை எழுதினால்தான் மதிப்புப் பெறக்கூடும் என்று உணர்வார்களாக.

முன்னே குறிப்பிடப்பட்ட பிழைகளுக்கு உரிய திருத்தங்களைக் காணலாம்.

கரிக்கடை என்றிருக்க வேண்டும். கரியை விற்கும் கடை என்பது பொருள். இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வரும் வல்லெழுத்து மிகுந்து வரும் என்பது விதி.

வாடகைக்குக் கிடைக்கும், திருமதி சுப்பராவுக்குப் பாராட்டு, இலங்கைக்கு சட்ட விரோதமாக, மதுரைக்குத் திருப்பியனுப்பப்படுவர் - நான்காம் வேற்றுமை 'கு' உருபுக்குப்பின் வரும் வல்லெழுத்து மிக வேண்டும்.

பண்பாட்டைக் கடைபிடித்து, ஆள்களைக் கடத்தும், ஒன்றைப் புதிதாக, பதிலைத் தெரிவிக்குமாறு - இங்கே 'ஐ' உருபுக்குப்பின் வரும் வல்லெழுத்து மிக வேண்டும் என்பது விதி.

விலை குறைவாய்க் கிடைக்கும், அதிகமாகக் காயங்கள், தவிரத் தற்காப்பு, அதற்கேற்பப் போதிய, நுணுக்கமாகத் திட்டத்தை, செய்யவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார் - ஆய், ஆக, என என்று வரும் வினையெச்சங்களின் பின்னும், அகர ஈற்று வினையெச்சங்களின் பின்னும் வரும் வல்லெழுத்து மிக்கு வரவேண்டும் என்பது விதி.

அமைப்புப்பற்றிப் பேச, முடிவுபற்றிப் பாகிஸ்தான், பேசிக் காரியங்களை, கிழக்கு நோக்கிப் பாயச் செய்ய - இகர ஈற்று வினையெச்சத்துக்குப் பின்னும் அகர ஈற்று வினையெச்சத்துக்குப் பின்னும் வரும் வல்லெழுத்து மிக வேண்டும்.

எந்த சமூகத்தையும், அந்த துறைகளில், இந்தப் பதிலை – அந்த, இந்த, எந்த என்னும் சொற்களுக்குப் பின் வல்லெழுத்து மிகும்.

அமைப்புப்பற்றி, தெரிவித்துக் கொள்ள, குறித்துப் பிரெஞ்சு உதவி, நேற்றுப்பகல் - வன்தொடர்க் குற்றியலுகரத்துக்குப் பின்வரும் வல்லெழுத்து மிகும்.

இங்குச் செய்யக்கூடியது – அங்கு, இங்கு, எங்கு என்னும் சொற்களுக்குப் பின்வரும் வல்லெழுத்து மிகும். இச்சொற்களுக்குப் பின்வரும் வல்லெழுத்து மிகாது எழுதுகின்றனர் பலர். அங்கு, இங்கு, எங்கு என்னும் சொற்களுக்குப் பின் கட்டாயம் வல்லெழுத்து மிக வேண்டும்.

வங்காளத் தொழிலமைச்சர், தற்காலக் கல்வி, இலங்கைக் கண்காணிகள், இடைக்காலப்பதில், தீப்பெட்டித் தொழிற்சாலை, சென்னைக் கடற்கரை, சென்னைக் கிரிக்கெட் கழகம். உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வரும் வல்லெழுத்து மிகவேண்டும் என்பது விதி. தீ+பெட்டி=தீப்பெட்டி. ஓரெழுத்து ஒரு மொழிக்குப்பின் வல்லெழுத்தில் சொல் வந்தால் வலி மிகும். ஓரெழுத்தே பொருள் குறிப்பது ஓரெழுத்து ஒரு மொழி எனப்படும். தீ என்பது ஓரெழுத்து ஒரு மொழியாகும்.

இலக்கணம் முழுவதையும் படித்து நினைவில் வைத்துக் கொண்டு வல்லெழுத்து மிகும் இடத்தையும், மிகாத இடத்தையும் உணர்வது கடினமாயிற்றே என எண்ணுகின்றனர் பலர். ஆனால் பிழையற எழுதும் தமிழறிஞர்களின் நூல்களைப் படிப்பதாலும், இவ்விதிகளைத் தெரிந்துகொள்வதாலும் ஒருவர் பிழையின்றி எழுத எளிதாகக் கற்றுக்கொள்ளலாம்.

சிதறிக்கிடக்கும் வலிமிகும் விதிகள் எல்லாம் இங்குத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

கீழ்வரும் சொற்களுக்குப்பின் க, ச, த, ப வருக்க எழுத்துக்களில் அமைந்த சொல் வருமொழியாக வந்தால் வலி மிகும்.

1. அ, இ, எ அந்த, இந்த, எந்த அங்கு, இங்கு, எங்கு ஆங்கு, ஈங்கு, யாங்கு அப்படி, இப்படி, எப்படி ஆண்டு, ஈண்டு, யாண்டு அவ்வகை, இவ்வகை, எவ்வகை அத்துணை, இத்துணை, எத்துணை இனி, தனி அன்றி, இன்றி மற்ற, மற்றை, நடு, பொது, அணு, முழு, புது, திரு, அரை, பாதி எட்டு, பத்து முன்னர், பின்னர் ஆகிய இச்சொற்களுக்குப் பின்வரும் வலி மிகும்.

2. ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின்வரும் வலி மிகும்.

   பூ+பறித்தாள் = பூப்பறித்தாள்

   தீ+பிடித்தது = தீப்பிடித்தது

   கை+குழந்தை = கைக்குழந்தை

   பூ+பந்தல் = பூப்பந்தல்

3. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வரும் வலி மிகும்.

   அறியா+பிள்ளை = அறியாப்பிள்ளை

   காணா+காட்சி = காணாக்காட்சி

   சொல்லா+சொல் = சொல்லாச்சொல்

   நிலையா+பொருள் = நிலையாப்பொருள்

   தீரா+துன்பம் = தீராத்துன்பம்

4. அகர, இகர ஈற்று வினையெச்சத்தின் பின்னும், ஆய், போய், ஆக, என என்னும் வினையெச்சங்களின் பின்னும் வரும் வலி மிகும்.

   வர+சொன்னான் = வரச்சொன்னான்

   மெல்ல+பேசினார் = மெல்லப்பேசினார்

   ஓடி+போனான் = ஓடிப்போனான்

   கேட்பதாய்+கூறினான் = கேட்பதாய்க்கூறினான்

   போய்+தேடினான் = போய்த்தேடினான்

   இருப்பதாக+கூறு = இருப்பதாகக்கூறு

   என+கேட்டான் = எனக்கேட்டான்

5. வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின்வரும் வலி மிகும்.

எட்டு+கட்டுகள் = எட்டுக்கட்டுகள்

பத்து+செய்யுள்கள் = பத்துச்செய்யுள்கள்

கற்று+கொடுத்தான் = கற்றுக்கொடுத்தான்

விட்டு+சென்றாள் = விட்டுச்சென்றாள்

வைத்து+போனான் = வைத்துப்போனான்

கொக்கு+பறந்தது = கொக்குப்பறந்தது

கொக்குப் பறந்தது என்னும் தொடர் எழுவாய்த் தொடராயினும், நிலைமொழி வன்தொடர்க் குற்றியலுகரமாதலால் வலிமிகுந்து வந்தது. இதில் வலிமிகுதலை விரும்பாவிட்டால் கொக்கு என்னும் சொல்லின் பக்கத்தில் காற்புள்ளியிட்டு கொக்கு, பறந்தது என்று எழுதலாம்.

6. திரு, நடு, முழு, விழு, பொது, அணு போன்றுள்ள முற்றியலுகரச் சொற்களுக்குப் பின்வரும் வலிமிகும்.

திரு+கோயில் = திருக்கோயில்

நடு+தெரு = நடுத்தெரு

முழு+பேச்சு = முழுப்பேச்சு

விழு+பொருள் = விழுப்பொருள்

பொது+பணி = பொதுப்பணி

அணு+குண்டு = அணுக்குண்டு

7. இரண்டாம் வேற்றுமை உருபின் பின்னும் நான்காம் வேற்றுமை உருபின் பின்னும் வரும் வலி மிகும்.

பூனையை+பார்த்தான் = பூனையைப்பார்த்தான்

கடைக்கு+போனான் = கடைக்குப்போனான்

8. பண்புத் தொகையில் வரும் வல்லெழுத்து மிகும்.

வெள்ளை+தாள் = வெள்ளைத்தாள்

மெய் +பொருள் = மெய்ப்பொருள்

பொய்+புகழ் = பொய்ப்புகழ்

9. இருபெயரொட்டுப் பண்புத் தொகையில் வரும் வல்லெழுத்து மிகும்.

தை+திங்கள் = தைத்திங்கள

கோடை+காலம் = கோடைக்காலம

மல்லிகை+பூ = மல்லிகைப்பூ

ஆஸ்திரேலியா கண்டம், ஆப்பிரிக்க கண்டம் - இவை பிறமொழி பெயராகையால் இவற்றில் வலி மிகுதல் கூடாது.

10. உவமைத் தொகையில் வரும் வலி மிகும்.

ரொட்டி+தலை = ரொட்டிதலை

தாமரை+கண் = தாமரைகண்

முத்து+பல் = முத்துப்பல்

11.நான்காம் வேற்றுமைத் தொகையில் அஃறிணைப் பெயர்களின் பின்வரும் வலி மிகும்.

முத்து+பல் = முத்துப்பல்

12. ஏழாம் வேற்றுமைத் தொகையில் வரும் வலி மிகும்.

காட்டிடை+சென்றாள் = காட்டிடைச்சென்றாள

குடி+பிறந்தார் = குடிப்பிறந்தார்

13. ஆறாம் வேற்றுமைத் தொகையில் முதலில் நிற்கும் நிலைமொழி அஃறிணையாக இருப்பின் வலி மிகும்.

குருவி+தலை = குருவித்தலை

கிளி+கூடு = கிளிக்கூடு

தேர்+கட்டு = தேர்க்கட்டு

பூனை+குட்டி = பூனைக்குட்டி

14. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வரும் வலி மிகும்.

சிற்றுண்டி+சாலை = சிற்றுண்டிசாலை

தயிர்+குடம் = தயிர்க்குடம்

காய்கறி+கடை = காய்கறிக்கடை

தேர் +பாகன் = தேர்ப்பாகன்

15. மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வரும் வலி மிகும்.

பித்தளை+குடம் = பித்தளைக்குடம்

பட்டு+சேலை = பட்டுச்சேலை

மோர் +குழம்பு = மோரக்குழம்பு

16. நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வரும் வலி மிகும்.

குழந்தை+பால் = குழந்தைப்பால்

கோழி+தீனி = கோழித்தீனி

17. ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வரும் வலி மிகும்.

வாய்+பாட்டு = வாயப்பாட்டு

விழி+புனல் = விழிப்புனல்

18. ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வரும் வலி மிகும்.

தண்ணீர்+பாம்பு = தண்ணீர்ப்பாம்பு

சென்னை+கல்லூரி = சென்னைக்கல்லூரி

மதுரை+கோயில் = மதுரைக்கோயில்

19. தனிக்குற்றெழுத்தை அடுத்து வரும் ஆகாரத்தின் பின்னும் வலி மிகும்.

கனா+கண்டான் = கனாக்கண்டான

நிலா+பயன் = நிலாப்பயன்

சுறா+தலை = சுறாத்தலை

20. அன்றி, இன்றி என்னும் இகர ஈற்றுக் குறிப்பு வினையெச்சங்களின் பின் வரும் வலி மிகும்.

அன்றி+செல்வேன் = அன்றிச்செல்வேன்

இன்றி+கொடேன் = இன்றிக்கொடேன்

## விதிவிலக்கும் பிறவும்

21. ட, ற, இரட்டித்த நெடில் தொடர், உயிர்த் தொடர்க் குற்றியலுகரச் சொற்களுக்குப் பின்வரும் வலி மிகும்.

1. மாடு+சாணம் = மாட்டுச்சாணம்

தமிழ்நாடு+கலை = தமிழ்நாட்டுக்கலை

தமிழ்நாடு+போக்குவரத்து = தமிழ்நாட்டுப்போக்குவரத்து

2. ஆறு+தண்ணீர் = ஆற்றுத்தண்ணீர்

கிணறு+தவளை = கிணற்றுத்தவளை

வேறு+பொருள் = வேற்றுப்பொருள்

3. மென்தொடர்க் குற்றியல் உகரச் சொற்களுக்குப் பின்னும், உயிர்த்தொடர்க் குற்றியலுகரச் சொற்களுக்குப் பின்னும், முற்றியலுகரச் சொற்களுக்குப் பின்னும் வரும் வல்லெழுத்துச் சில இடங்களில் மிகும்.

(அ) வண்டு+கால் = வண்டுகால்

திண்டு+கல் = திண்டுகல்

பாம்பு+தோல் = பாம்புதோல்

குரங்கு+கூட்டம் = குரங்குகூட்டம்

கன்று+குட்டி = கன்றுகுட்டி

பண்பு+தொகை = பண்புதொகை

பண்பு+பெயர் = பண்புபெயர்

மருந்து+கடை = மருந்துகடை

(ஆ) முதுகு+தண்டு = முதுகுதண்டு

எருது+கொடி = எருதுகொடி

(இ) உணவு+பொருள் = உணவுபொருள்

செலவு+சொல் = செலவுசொல்

இந்துக்கள், பந்துக்கள், கந்துக்கடன் என்னும் சொற்களில் வல்லெழுத்து மிகுந்து வரும்.

"பல்லோர் துஞ்சும் நள்ளென் யாமத்து

உரவுக்களிறு போல் வந்து இரவுக்கதவம் முயறல்

கேளேம் அல்லேம், கேட்டனம் பெரும!"

'பெரும, வலிமையுடைய களிற்றைப்போல இராக்காலத்தே தாழிட்ட கதவைத் திறக்க முயன்றதனால் உண்டான ஒலியைக் கேட்டனம்!' என்பது பொருள். (குறுந்தொகை.244) இங்கே முற்றுகரத்திற்குப் பின்வரும் வலி மிகுந்திருத்தலைக் காணலாம்.

இங்கு வல்லெழுத்து மிகுந்து வரவேண்டிய தொடர்களின் பட்டியல் தரப்பட்டுள்ளது. அவற்றைப் படித்துப் பழகிக் கொண்டால் தவறின்றி வல்லெழுத்து மிகுந்து வரவேண்டிய இடங்களைக் கண்டறிந்து எழுதலாம்.

**வலி மிகும் தொடர்களின் வரிசை**

**அ**

அரைப்பங்கு

அறிவுப்பஞ்சம்

அணுக்குண்டு

அந்தக்கழகம்

அங்குப்போனார்

அவனுக்குக் கொடுத்தான்

அழுக்குத்துணி

அன்றிச் செய்யேன்

அன்புத்தளை

**ஆ**

ஆரம்பப்பள்ளி

ஆண்டுப்போனான்

ஆண்டுக்காலம்

ஆங்குச்  சென்றான்

ஆட்சித்தொடக்கம்

ஆலோசனைக்கூட்டம்

**இ**

இன்றிப்பேசு

இந்தப்பேச்சு

இங்குத்தந்தேன்

இசைச்செல்வர்

இடைநிலைப்பள்ளி

இராக்காலம்

இராப்பகல்

இரவுக்குறி

இந்தியத்துணைக்கண்டம்

இந்தியத்  தூதுக்குழு

இனிக்கேட்பேன்

இடப்பக்கம்

**ஈ**

ஈண்டுப்போகிறேன்

ஈங்குக்கொடுத்தேன்

**உ**

உழவுத்தொழில்

உணவுப்பொருள்

உயர்நிலைப்பள்ளி

உருளைக்கிழங்கு

உண்மைக்கதை

**ஊ**

ஊழ்ப்பயன்

ஊர்க்கோயில்

**எ**

எங்குத்தேடினாய்?

எதிர்ப்பக்கம்

எருதுக்கொடி

எல்லாப்பொருள்களும்

**ஏ**

ஏழைக்குடியானவன்

ஏறத்தாழ

ஏறக்குறைய

**ஐ**

ஐந்தாண்டுத்திட்டம்

ஐப்பசித்திங்கள்

**ஒ**

ஒற்றைக்கொம்பு

ஒப்புக்கொண்டான்

**ஓ**

ஓட்டப்பந்தயம்

ஓட்டைக்குடிசை

**க**

கட்டுக்கோப்பு

கடைத்தெரு

கடையைத்திற

கலைச்செல்வம்

கலைக்கழகம்

கலைக்குடும்பம்

கலைக்கோயில்

கழகத் துணைத் தலைவர்

கழகச் செயலாளர்

கற்றுக்கொடுத்தார்

கமலக்கண்ணன்

கட்டடக்கலை

கரிக்கடை

கனாக்கண்டான்

**கா**

கார்ப்பருவம்

காரைக்குடிக் கம்பர் கழகம்

காவிரிக்கரை

காட்டுச்செடி

காலைக்கடன்

காறித் துப்பினான்

காணாக்காட்சி

**கி**

கிழக்குத்திசை

**கீ**

கீழ்க்கணக்கு

கீழ்த்திசை

கீழ்க்கரை

**கு**

குதிரைத் தலை

குழுத்தலைவர்

குறும்புச்செயல்

குரங்குக்குட்டி

குரங்குப்பிடி

குளக்கரை

குறித்துச்சொன்னார்

குடும்பத்திட்டம்

குழந்தைக்காப்பகம்

**கூ**

கூட்டுக்கறி

கூட்டுச்செயலாளர்

**கெ**

கெட்டுப் போனார்

**கே**

கேட்டுக் கூறினார்

கேட்கச் சொன்னார்

கேள்விச் செல்வம்

**கை**

கைக்குட்டை

கைச்செலவு

கைத்தொழில்

**கொ**

கொடுக்கச் சொன்னார்

கொடுத்துக் கேட்டார்

**கோ**

கோடைக்காலம்

கோழிக்கால்

கோபுரச்சிலை

கோட்டைக்கதவு

**சி**

சித்திரைத்திங்கள்

சிற்றுண்டிச்சாலை

சிறைப்படுத்தி

**சு**

சுக்குத்தின்றான்

சுட்டுக்கொன்றான்

சுறாத்தலை

**செ**

சென்னைச் சட்டசபை

செத்துப்பிழைத்தார்

சென்னைக் குறள்நெறிக் கழகம்

**சே**

சேனைத் தலைவர்

**சோ**

சொட்டுத்தண்ணீர்

சொல்லாச்சொல்

**த**

தமிழ்ப்பற்று

தமிழ்ப்பேராசிரியர்

தமிழ்ப்பாடம்

தமிழ்க்கலை

தமிழ்ச்சொல்

தனிப்பாடல்

தயிர்க்குடம்

தண்ணீர்த்தொட்டி

**தா**

தாய்ப்பறவை

தாய்க்கொலை

தாய்ப்பால்

**தி**

திருக்குளம்

திண்டுக்கல்

திருப்பணி

திருக்கோயில்

திருமணப்பந்தல்

திரைக்கடல்

திறைப்பொருள்

**தீ**

தீப்பிடித்தது

தீராத்துயர்

**து**

துணிப்பஞ்சம்

துண்டுக்கடிதம்

**தெ**

தெப்பகுளம்

தெருத்தெருவாய்

தெப்பத்திருவிழா

**தே**

தேசப்படம்

தேர்ப்பாகன்

தேர்த்திருவிழா

**தை**

தைத்திங்கள்

**தொ**

தொடக்கப்பள்ளி

தொடக்கச்செலவு

தொலைக்காட்சி

**ந**

நகர்ப்புறம்

நடுத்தெரு

நடுப்பகல்

நட்டுச்சென்றான்

நகரசபைத் தலைவர்

நகரசபைத் துணைத்தலைவர்

**நா**

நாட்டுப்பொருள்

நாய்க்கால்

நாய்க்குட்டி

நான்குவீசைப் புளி

**நி**

நிலாக்கதிர்

நிலையாப் பொருள்

**நீ**

நீர்க்குமிழி

**நே**

நேற்றுப்பகல்

நேர்க்கோடு

**ப**

படைத்தலைவன்

பச்சைக்கிளி

பண்டைக்காலம்

பண்புப்பெயர்

பண்புத்தொகை

பந்தர்க்கால்

படித்துக்கொண்டான்

பயிற்சிக்கூடம்

பரிசுக்குழு

பரிசுப்பொருள்

பயிற்சிப்பள்ளி

பட்டப்படிப்பு

பட்டினிச்சாவு

பற்றிக்கூறினார்

பணத்தொல்லை

பணிவாய்ப் பேசு

பள்ளிக்கூடம்

பைந்தமிழ்ப் பாவலர்

**பா**

பாம்புத்தோல்

பாடத்தேர்வுக்குழு

பார்ப்பனச் சிறுவன்

**பி**

பித்தளைத்தட்டு

பிள்ளைத்தமிழ்

பின்னர்க் கூறப்படும்

**பு**

புத்திக் கூர்மை

புதுச்சேரி

புலமைச் செல்வம்

புலிக்குட்டி

புதுப்பொருள்

புறாச் சிறகு

புறாப் பறக்கும்

**பூ**

பூப்பறித்தான்

பூச்செடி

பூப்பல்லக்கு

பூப்பந்தல்

பூனைக்குட்டி

பூக்கடைத் தெரு

**பொ**

பொடிக்கடை

பொறுப்புத்தொகை

**ம**

மக்குப்பிள்ளை

மண்பானைச் சமையல்

மதுரைக்கல்லூரி

மதுரைத் தியாகராசர் கல்லூரி

மனிதப்பிறவி

மல்லிகைப்பூ

மலர்க்கலை

மற்றப்பிள்ளை

மற்றைப்பகுதி

மதுரைத் தமிழ்ச்சங்கம்

மதுரைக் கிளைநிலையம்

மழைக்காலம்

மலைப்பாம்பு

மளிகைக்கடை

மலர்க்கை

**மா**

மாகாணக் காங்கிரஸ் குழு

மரக்கால்

மாதச் செலவு

மாரிக்காலம்

மார்கழித் திங்கள்

மாற்றுப் பெயர்

மானிடப்பிறவி

மாற்றுத்திட்டம்

**மி**

மிகப்பேசினான்

**மீ**

மீக்கூற்று

**மு**

முழுக்கடலை

முன்பனிக்காலம்

**மெ**

மெய்ப்புகழ்

மெய்க்கீர்த்தி

**மே**

மேடைப்பேச்சு

மேற்குப்பக்கம்

மேலைத்தெரு

**மோ**

மோர்க்குழம்பு

**மை**

மைத்தடங்கண்

**யா**

யானைத்தந்தம்

யாங்குச்சென்றாய்?

யாண்டுப் போனாய்?

**வ**

வந்தவழிக் கண்டுகொள்க

வண்டுக்கால்

வயிற்றுச்சோறு

வலப்பக்கம்

வடதிசைக்காற்று

வட்டிக்கடை

**வா**

வாய்ச்சொல்

வாய்ப்பாட்டு

வாழைப்பழம்

**வி**

விளையாட்டுச் சாமான்கள்

விற்றுச்சென்றார்

**வெ**

வெண்கலக் கடைத்தெரு

வெளிப்பக்கம்

வெள்ளித்தட்டு

**வே**

வேதனைச்செயல்

வேளைச்சாப்பாடு

வேர்க்கடலை

வேர்ப்பலா

வேலைத்தொல்லை

வேற்றுமைத்தொடர்

**வை**

வையைக்கரை

வைத்துச்சென்றான்

இவற்றை நன்றாகத் தெரிந்துகொண்டால் பல பிழைகளை நீக்கலாம். தமிழறிஞர்கள் எழுதியுள்ள உரைநடை நூல்களைப் படிக்கும்போது, வல்லெழுத்து மிகும் இடங்களைக் கவனித்துப் படித்துவந்தால், பிழையின்றி எழுத நன்கு தெரிந்து கொள்ளலாம்.

'எதிரில் இருக்கும் பக்கம்' என்னும் பொருளில் எழுதினால் எதிர்ப்பக்கம் என எழுத வேண்டும். எதிர்கட்சி - இத்தொடரை வினைத்தொகையாகக் கொண்டால் எதிர்கட்சி என்று வலி மிகாமல் எழுத வேண்டும். (எதிர்த்த கட்சி, எதிர்க்கிற கட்சி, எதிர்க்கும் கட்சி)

## வலி மிகாமைக்குரிய விதிகள்

வல்லெழுத்து மிகாமல்வரும் இடத்தை வலி மிகாமை என்கிறோம்.

தமிழ்நாடுக் காங்கிரஸ், சிறியப் பெட்டி, பெரியப் பையன், முதுப்பெரும் புலவர், தமிழ்ப் பேசும் பகுதி, நடைப்பெற்றப் பொதுக்கூட்டம், அன்றையப் பேச்சு, ரயில்வேத் தொழிலாளர், மிக்கப்பேச்சு, ஒருக்காலும் - இப்பிழைகளை நாளிதழ்களிலும் வெளியீடுகளிலும் காணலாம்.

தமிழ்நாடு காங்கிரஸ் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் என்று வரும்.

சிறிய பெட்டி என்றும், பெரிய பையன் என்றும், நடைபெற்ற பொதுக் கூட்டம் என்றும் அன்றைய பேச்சு என்றும் இருக்க வேண்டும். சிறிய, பெரிய, நடைபெற்ற, அன்றைய என்பவை பெயரெச்சங்கள். பெயரெச்சங்களின் பின்வரும் வல்லெழுத்து மிகும்.

ஒருகால் என்று எழுத வேண்டும். பெரும்பாலும் முற்றியலுகரத்துக்குப் பின்வரும் வல்லெழுத்து மிகாது.

திருவள்ளுவர் அருளுடைமை அதிகாரத்தில் 'பொருளற்றார் பூப்பர் ஒருகால்' என்று கூறியுள்ளார். வெகுளாமை என்னும் அதிகாரத்தின் ஒன்பதாவது குறட்பாவிற்கு, ''தவம் செய்யுமவன் தன் மனத்தால் வெகுளியை ஒருகாலும் நினையானாயின்'' என்று பரிமேலழகர் உரையெழுதியுள்ளார். தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியரான தெய்வச்சிலையாரும் வேற்றுமையை விளக்குகையில் ஒருகால் என்றே எழுதியிருப்பதைக் காணலாம்.

தமிழ் பேசும் பகுதி என்றுதான் எழுத வேண்டும். இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லெழுத்து மிகக் கூடாது. தமிழ்ப்பற்று, தமிழ்ப்புலவர், தமிழ்ப் பேராசிரியர் என்னும் தொடர்களில் வலி மிகும். ஏனெனில் இம் மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகளாகும்.

மிகப் பேசினார் என்றும், மிக்க பேச்சு என்றும் எழுத வேண்டும். மிக என்பது அகர ஈற்று வினையெச்சமாதலால் வலி மிகும். மிக்க என்பது பெயரெச்சமாதலால் வலி மிகாது.

ரயில்வே தொழிலாளர் என்றிருப்ப நன்று.

## வலி மிகா விதிகளின் தொகுப்பு

வல்லெழுத்து மிகக்கூடாத இடங்களைக் கீழ்வரும் விதிகளால் மிகமிக எளிதாகத் தெரிந்து கொள்ளலாம்.

1.அது, இது, எது; அவை, இவை, எவை; அன்று, இன்று, என்று; அத்தனை, இத்தனை, எத்தனை; அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு; அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு; படி, ஆறு, சேர்ந்து வரும் வினையெச்சங்கள், ஒரு, இரு, அறு, எழு இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, ஒன்பது நீ, பல, சில இச் சொற்களுக்குப் பின் வருமொழி முதலில் க, ச, த, ப வருக்கம் இருந்தால் வல்லெழுத்து மிகாது.

**எடுத்துக்காட்டுகள்**

அது பெரிது, இது சிறிது. எது கொடியது?

அவை போயின, இவை சென்றன. எவை கூவின?

அன்று போனார். இன்று கேட்டார். என்று சொல்வார்?

அத்தனை செடிகள். இத்தனை பலகைகள். எத்தனை பூக்கள்?

அவ்வளவு பருப்பு, இவ்வளவு கடுகு. எவ்வளவு தந்தார்?

வந்தபடி பேசினான். சொன்னவாறு கேட்டேன்.

ஒரு பொருள், இருதடவை, அறுதொழில், எழுகடல், இரண்டு தூண்கள், மூன்று குழந்தைகள், நான்கு கால்கள், ஐந்து சிறுவர்கள், ஆறு கடைகள், ஏழு கடிதங்கள், ஒன்பது பூட்டுகள்.

நீ போ.

பல செடிகள், சில செடிகள். ஆனால், பலூபல, சிலூசில ஆகிய இவை சேர்ந்து வரும்போது பலபல என்றும், சிலசில என்றும், பலப்பல என்றும், சிலச்சில என்றும், பற்பல என்றும், சிற்சில என்றும் வரும்.

அத்துணைப் பெரிது, இத்துணைச் சிறிது, எத்துணைப் பாடல்கள் என்று அத்துணை, இத்துணை, எத்துணை என்னும் சொற்களின் பின்வரும் வல்லெழுத்து மிகுந்துவரும். ஆனால், அத்தனை, இத்தனை, எத்தனை ஆகிய இவற்றின் பின்னும் வல்லெழுத்து மிகாது.

2. ஒடு, ஓடு என்னும் மூன்றாம் வேற்றுமை உருபுகளின் பின்னும் இருந்து, நின்று என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபுகளின் பின்னும் அது, உடைய, அ என்னும் ஆறாம் வேற்றுமை உருபுகளின் பின்னும் வரும் வல்லெழுத்து மிகாது.

தம்பியொடு பேசினார். பொன்னனோடு போனார் - மூன்றாம் வேற்றுமை உருபுகளின் பின்வரும் வலி மிகாது.

வீட்டிலிருந்து கொடு, மலையினின்று கழிந்த – ஐந்தாம் வேற்றுமை உருபுகளின் பின்வரும் வலி மிகாது.

கோழியினது கொண்டை, தம்பியினுடைய சட்டை, என கைகள் - ஆறாம் வேற்றுமை உருபுகளின் பின் வலி மிகாது. என – என்னுடைய. என் +அ = என. அ என்பது ஆறாம் வேற்றுமை உருபு.

3. ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிரப் பிற பெயரெச்சங்களின் பின்வரும் வல்லெழுத்து மிகாது. ஓடிய குதிரை என்னும் தொடரிலுள்ள ஓடிய என்பது பெயரெச்சம். ஓடாத குதிரை என்னும் தொடரிலுள்ள ஓடாத என்பது ஈறு கெடாத எதிர்மறைப் பெயரெச்சம். ஓடாக் குதிரை என்னும் தொடரிலுள்ள ஓடா என்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். இந்த ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின்வரும் வல்லெழுத்து மட்டும் மிகும். மற்றப்படி ஈறு கெடாத பெயரெச்சங்களின் பின்வரும் வல்லெழுத்து மிகவே மிகாது.

(உ.ம்) பெரிய பெட்டி, சிறிய குதிரை, நல்ல பாம்பு, நல்ல குழந்தை, படித்த பையன், படியாத பெண் - பெயரெச்சங்களின் பின்வரும் வல்லெழுத்து மிகாது. ஓடாக் குழந்தை - இங்கு ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வந்த வல்லெழுத்து மிகுந்துள்ளது.

4. கூப்பிடுகின்ற விளிப்பெயர், மரியாதையாகத் தமிழ்ப் பண்பாட்டுக்குரிய முறையில் சொல்லும் வியங்கோள் வினைமுற்று ஆகிய இவற்றின் பின்வரும் வலி மிகாது.

தம்பி போ – விளித்தொடரில் வலி மிகவில்லை.

வாழி பெரியோய்! வீழ்க கொடுமை! – வியங்கோளின் பின் வலி மிகவில்லை.

5. ன்று, ந்து, ண்டு என்று முடியும் வினையெச்சங்களுக்குப் பின்வரும் வல்லெழுத்து மிகாது. இலக்கண முறையில் மென்தொடர்க் குற்றுகரச் சொற்களுக்குப் பின்வரும் வல்லெழுத்து மிகாது.

என்று கூறினார். வந்து கேட்டார்

கண்டு பேசினார் நன்று பேசினாய்

6. ஆ, ஓ, யா என்னும் கேள்வி கேட்கும் வினாக்களுக்குப் பின்வரும் வலி மிகாது.

அவனா போனான்?

தம்பியோ கேட்கிறான்?

யா சிறியன? (யா – யாவை)

7. தேற்றம், பிரிநிலை ஆகிய பொருள்களில் வரும் ஏகாரங்களுக்குப் பின்வரும் வலி மிகாது.

அவனேதான் இதைக் கொடுத்தான்.

பெண்களுள் தமயந்தியே சிறந்தவள்.

8. எண்ணுப் பொருளில் வரும் ஏகாரத்தின் பின்னும், ஐயப்பொருளில் வரும் ஓகாரத்தின் பின்னும் வரும் வலி மிகாது.

காயே கிழங்கே வாங்கு - இங்கு வந்த ஏகாரம் எண் ஏகாரம்.

காயோ கிழங்கோ வாங்கு - இங்கு வந்த ஓகாரம் ஐய ஓகாரம்.

9. இரு வடமொழிச் சொற்கள் சேர்ந்து வருந் தொடர்களில் வரும் வலி மிகாது.

ஆதி+பகவன் = ஆதிபகவன்

தேச+பக்தி = தேசபக்தி

10. வினைத்தொகை – ஒரு நாய் நேற்றுக் கடித்தது, இன்றும் கடிக்கிறது, நாளைக்கும் கடிக்கும். அதுபோல சுடுகாடு என்பது முன்னே பிணங்களைச் சுட்ட காடு, இன்றும் பிணங்களைச் சுடுகின்ற காடு, நாளைக்கும் பிணங்களைச் சுடும் காடு என்று மூன்று காலத்திற்கும் பொருள் தருகிறது. மூன்று காலங்களையும் காட்டும் விகுதிகள் மறைந்து பெயரெச்சத் தொடர்போல வருவது வினைத்தொகை. இன்னும் விளக்கமாகச் சொன்னால் வினைச் சொல்லின் பகுதியும் பெயர்ச்சொல்லும் சேர்ந்து வருவதை வினைத்தொகை எனலாம். வினைத்தொகையில் வலி மிகாது.

(உ.ம்) சுடுகாடு, இடுகாடு, குடிதண்ணீர், அடுகளிறு, விடுபடை, ஆடுகொடி, நாட்டுபுகழ், கூப்பு கை, உரைகல், ஈட்டு பொருள் - வினைத்தொகைகளில் வரும் வலி மிகாது.

11. உம்மைத்தொகையில் வரும் வலி பெரும்பாலும் மிகாது. உம்மை மறைந்து நிற்பது உம்மைத்தொகை. இட்டலி சாம்பார் என்னும் தொகை உம்மைத்தொகை. யானை குதிரை - உம்மைத்தொகை. உம்மைத்தொகையில் வரும் வலி மிகாது. இராப்பகல், இன்பத்துன்பங்கள், ஏற்றத்தாழ்வு - இவைபோன்ற உம்மைத்தொகைகளில் மட்டும் இன்னோசை கருதி விதிவிலக்காக வலி மிகும்.

12. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வரும் வல்லினம் மிகாது. இரண்டு சொற்கள் நின்று இரண்டாம் வேற்றுமை ஐ உருபு தொக வருவது இரண்டாம் வேற்றுமைத் தொகை.

| | | |
|---|---|---|
| பங்கு+பிரித்தான் | - பங்குபிரித்தான் | - இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| பறவை+பிடித்தான் | - பறவை பிடித்தான் | - இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| துணி+கட்டு | – துணிகட்டு | - இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| தமிழ்+படித்தார் | - தமிழ் படித்தார் | - இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| நீர்+குடித்தது | – நீர் குடித்தது | – இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| தேர்+செய்தான் | - தேர் செய்தான் | - இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| காய்+கடித்தான் | - காய் கடித்தான | - இரண்டாம் வேற்றுமைத்தொகை |

பொருள் மயங்காதிருக்கும் பொருட்டுச் செய்யுளில் இரண்டாம் வேற்றுமைத்தொகையில் நிலைமொழி உயர்திணையாயின் வலி மிகுவதுண்டு. (உ.ம்) ஒன்னலர்ச் செகுத்தான். (ஒன்னலரைச் செகுத்தான் என்பது பொருள்)

13. நான்காம் வேற்றுமைத்தொகையில் உயர்திணைப் பெயர்களின் பின்வரும் வலி மிகாது.

பொன்னி+கணவன் - பொன்னி கணவன். (பொன்னிக்குக் கணவன் என்பது பொருள்)

14. ஆறாம் வேற்றுமைத்தொகையில் நிலைமொழி உயர்திணையாயிருந்தால் வலி மிகாது.

காளி கோயில், கண்ணகி கை, தம்பி துணி, ஐயனார் கோயில், அன்னார் கேண்மை.

15. ஏழாம் வேற்றுமைத்தொகையில் சில இடங்களில் வலி மிகாது.

வாய்+புகுந்தது – வாய் புகுந்தது.

16. வன்தொடர்க் குற்றியலுகரம் தவிர மற்றக் குற்றியலுகரங்களுக்குப் பின்வரும் வல்லெழுத்துப் பெரும்பாலும் மிகுவதில்லை.

கடுகு+சிறிது – கடுகு சிறிது – உயிர்த் தொடர்க் குற்றியலுகரத்துக்குப் பின் வலி மிகவில்லை.

எ.்.கு+கூர்மை – எ.்.கு கூர்மை – ஆய்தத்தொடர்க் குற்றியலுகரத்துக்குப் பின் வலி மிகவில்லை.

17. எழுவாய்த் தொடரில் வருமொழி க, ச, த, ப வருக்கங்களில் உள்ள எழுத்துக்களில் சொல் இருந்தால் வல்லெழுத்து மிகாது.

நீ பெரியை, வண்டி சிறியது, கோழி பெரியது, நாய் தின்றது, காய் சிறியது, கூழ் போதாது.

18. முன்னிலை வினைமுற்று, ஏவல் வினைமுற்று, முற்று வினை இவற்றிற்குப் பின்வரும் வல்லினம் இயல்பாகும். அதாவது வலிமிகாது.

வருதி குமரா! – முன்னிலை வினைமுற்றின்பின் வலி மிகவில்லை.

போ தம்பி! – ஏவல் வினைமுற்றின்பின் வலி மிகவில்லை.

வாரா குதிரைகள் - முற்று வினைக்குப்பின் வலி மிகவில்லை. வினைமுற்றுத் தொகாநிலைத் தொடரில் வலிமிகாது.

19. ‘அம்ம’ என்னும் இடைச் சொல்லின்பின் வரும் வலி மிகாது.

அம்ம+கொடிது – அம்ம கொடிது!

20. வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்களின் பின்னும் ‘கள்’, ‘தல்’ என்னும் விகுதிகள் சேரும்போது வரும் வலி மிகுதல் நன்றன்று. பிழை என்று சொல்வதற்கில்லை.

வாக்கு+கள் - வாக்குகள்

தோப்பு+கள் - தோப்புகள்

எழுத்து+கள் - எழுத்துகள்

வாழ்த்து+தல் - வாழ்த்துதல்

கூப்பு+தல் - கூப்புதல்

தூற்று+தல் - தூற்றுதல்

மேற்குறிப்பிடப் பட்டவற்றின் விதி வருமாறு,

“இடையுரி வடசொல்லின் இயம்பிய கொளாதவும்

போலியும் மரூஉவும் பொருந்திய வாற்றிற்கு

இயையப் புணர்த்தல் யாவர்க்கும் நெறியே.” (நன்னூல்)

‘இடைச்சொல் உரிச்சொல் வடச்சொல் இவற்றிற்குச் சொல்லிய விதிகளுள் கூறப்படாதனவும், போலியும் மரூஉவும் பொருந்திய வகையில் புணர்தலைக் கொள்ளுதல் அறிவுடையோர் யாவர்க்கும் முறையாகும்.’ இது மகாவித்துவான் மே.வீ.வேணுகோபாலப் பிள்ளையவர்கள் கொள்ளும் பொருளாகும்.

**வலி மிகாத தொடர்களின் வரிசை**

**அ**

அண்ணா கொடு

அவர் தலை

அது போயிற்று

அவை சென்றன

அவ்வளவு காலம்

அன்று பேசினார்

அத்தனை செடிகள்

அரிய பொருள்

அரிய பெரிய

அவரோ கொடுத்தார்?

அவரா போனார்?

அறிவு பெற்றான்

அறுசுவை

அறிந்தவாறு சொன்னான்

அன்னை தந்தை

அமெரிக்கா கண்டம்

அவ்வாறு கூறினார்

**ஆ**

ஆஸ்டிரேலியா கண்டம்

ஆடு கொடி

ஆறு பொருள்கள்

ஆண்டு கொண்டான்

ஆதரவு தந்தான்

ஆடாது செய்தால்

ஆதி பகவன்

ஆணோ பெண்ணோ

ஆப்பிரிக்கா கண்டம்

**இ**

இது போயிற்று

இன்று சென்றான்

இவை போகின்றன

இத்தனை கொடிகளா?

இவ்வளவு கடுகு கொடு

இவ்வளவு அழகாய்

இருக்கிறாளா?

இரண்டு சிறுவர்கள்

இருபொருள்

இரவுபகலாக

இரவு கழிந்தது

இடி சுவர்

இருந்தபடி செய்து கொடு

இல்லை பொருள்

இவ்வாறு சொன்னார்

**ஈ**

ஈடு கொடு

ஈது பெரிது

ஈந்து போனான்

ஈயாது சென்றான்

**உ**

உரைகல்

உறுபொருள்

உண்டு பொருள்

**ஊ**

ஊதுகோல்

ஊர்காவல்

ஊன்றுகோல்

**எ**

எது பெரிது?

என்று சொன்னார்?

என்று போனாய்?

எவை போயின?

எத்தனை பாடங்கள்?

எவர் கேட்கிறார்?

எவ்வாறு கேட்பாய்?

எழு கடல்

**ஏ**

ஏழு படங்கள்

ஏது படிப்பு

ஏழ் கடல்

**ஐ**

ஐந்து பொருள்கள்

**ஒ**

ஒரு பையன்

ஒரு காலும்

ஒன்பது பேர்கள்

ஒன்று கொடு

ஒப்பில்லாத கடவுள்

**ஓ**

ஓடாத குதிரை

ஓடுகிற பசு

ஓடின காளை

**க**

கபில பரணர்

கம்பு கேழ்வரகு

கம்பர் கழகம்

கன்னி கோயில்

கனி தின்றான்

கண்ணகி கோயில்

கண்டு பேசினான்

கடிந்து கூறினார்

**கா**

காளி கோயில்

கார்காலம்

காடு பெரிது

**கி**

கிளி பேசுகிறது

கிணறு தோண்டினான்

**கீ**

கீரி கத்துகிறது

கீழ் கடல் (கிழக்குகடல்)

கீழ் கரை (கிழக்குகரை)

**கு**

குளிர் காலம்

குமர கோட்டம்

குழந்தை கை

குதிரையினது கால்

குழந்தை சட்டை

**கே**

கேட்டகடி சொல்

கேட்கிறவாறு கொடு

**கை**

கை சிறிது

**கொ**

கொண்டு செல்க

கொண்டு போனார்

**சி**

சில குரங்குகள்

சில சில

சிறுபொருள்

சிறிய செடி

**சு**

சுடுசோறு

**செ**

செடிகொடி

செய்து கொடுத்தார்

செட்டி தெரு

**சொ**

சொன்னபடி செய்

சொல்லியவாறு செய்

**த**

தந்து சென்றான்

தம்பி சட்டை

தம்பியொடு போனார்

தமிழ் காவலர்

தமிழ் படித்தார்

தண்ணீர் கொடு

**தா**

தாய் தந்தை

**தி**

திரிந்து கொண்டிருந்தான்

**தெ**

தெரிந்து பேசு

**தொ**

தொலைபேசி

**ந**

நன்மை தீமை

நல்ல பாம்பு

நல்ல பிள்ளை

**நா**

நாடு பெரிது

நான்கு படங்கள்

நாய்க்கர் தெரு

**நீ**

நீர் குடித்தான்

**நெ**

நெய் கொடுத்தாள்

**ப**

பயிர்செய்தார்

பலகொடிகள்

**மெ**

மெய்காவலர்

மெய்காப்பாளர்

**யா**

யாது கேட்டாய்?

யா சிறியன? (பலவின்பால் வினா)

யாவை பெரியவை?

யார் போனார்?

யானை குதிரை

**ப**

பல பல

பவானந்தர் கழகம்

**பா**

பாத கமலம்

பாடி காவல்

**பி**

பிள்ளை தெரு

**பு**

புனைந்து கூறினான்

புரிந்து கொண்டான்

**பெ**

பெரிய தெரு

**ம**

மழகளிறு

மறைந்து போயிற்று

**மு**

முடிந்து போயிற்று

முதுபெரும் புலவர்

முதலி தெரு

**மூ**

மூன்று பேர்கள்

மூண்டு கொண்டது

மூடுபொருள்

**வ**

வந்து போனான்

வந்தவாறு பேசினான்

வந்தபடி போயிற்று

வள்ளி திருமணம்

**வா**

வாய்பாடு

வாய் புகுவது

**வி**

விருந்து செய்தான்

**வீ**

வீட்டிலிருந்து போ

**வெ**

வெந்நீர் காய்ச்சு

**வே**

வேர் போயிற்று

வேலை கிடையாது

வேதனைபடுகிறான்

பாடிக்காவல் என்பது போல ஊர்காவல் என்னும் தொடர் வலி மிகாமலே வரும். கீழ்கடல் - கீழ்கடல், கீழ்க்கடல் என்றும், கீழ்காற்று – கீழ்காற்று, கீழ்க்காற்று என்றும் இருவகையாக வரும். பதினெண்கீழ்க்கணக்கு - பதினெண்கீழ்கணக்கு - பதினெண்கீழ்க் கணக்கு என்று இருவகையாகவும் வரலாம். ஆனால் தொல்காப்பிய செய்யுளியலில் 470-ஆவது நூற்பா உரையில் பேராசிரியர் பதினெண் கீழ்க்கணக்கினுள்ளும் என்று எழுதியுள்ளார். ஆதலால், கீழ்க்கணக்கு என்று எழுதுவது மரபாயிற்று. மெய்காவலர், மெய்காப்பாளர் - இவை இப்படித்தான் வர வேண்டும். மெய்காவலர், மெய்காப்பாளர் - இவை இரண்டாம் வேற்றுமைத்தொகையாதலால் வல்லெழுத்து மிகாது. மெய்காவலர், மெய்காப்பாளர் என்றால் உண்மையான காவலர், காப்பாளர் என்றே பொருள்படும். ஆதலால் மெய்காவலர், மெய்காப்பாளர் என்றே வல்லெழுத்து மிகாமல் எழுத வேண்டும்.

## எளிய சந்தி விதிகள்

சிலர், விடியற்காலை எனவும் தகுந்தாப்போல் எனவும், நன்றாய்யிருக்கும் எனவும், நிலையில் யிருக்காது எனவும், எவ்வாறு யெனின் எனவும், போக யிருந்தார் எனவும் தவறாக எழுதுகின்றனர். விடியற்காலை என்றும், தகுந்தாற்போல் என்றும், நன்றாய் இருக்கும் என்றும், நிலையில் இருக்காது என்றும், எவ்வாறெனின் என்றும், போகவிருந்தார் என்றும் எழுத வேண்டும். பந்தக்கால் என்று திருமண அழைப்பில் எழுதுவதைக் காணலாம். இது தவறானது. பந்தல்‌கால் - பந்தற்கால் என்றே எழுத வேண்டும். பந்தக்கால் என்பதற்கு, பந்தம் கொளுத்தி வைப்பதற்குரிய கால் என்று பொருள்படும். இத்தவறுகளை நன்குணர்ந்து கொள்ள வேண்டுமெனில் சில புணர்ச்சி விதிகளை அறிந்து கொள்ள வேண்டும். புணர்ச்சி – சந்தி.

புணர்ச்சி என்பது நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் ஒன்றுபட சேர்வது. இப் புணர்ச்சி இருவகைப்படும். ஒன்று இயல்பு புணர்ச்சி, மற்றொன்று விகாரப் புணர்ச்சி. நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது எந்த மாறுபாடும் அடையாமல் இயல்பாய் புணர்வது இயல்பு புணர்ச்சி எனப்படும். நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது மாறுபாடு அடைந்து புணர்வது விகாரப் புணர்ச்சி எனப்படும்.

**புணர்ச்சி**

- இயல்பு புணர்ச்சி
- விகாரப் புணர்ச்சி

**இயல்பு புணர்ச்சி** – கண்டு பேசினார், என்று கூறினார், வந்து தந்தார், செய்து சொன்னான், தெருவில் ஓடினான்

**விகாரப் புணர்ச்சி** – விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும்.

1. தோன்றல்
2. திரிதல்
3. கெடுதல்

**1. தோன்றல்**

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது இடையில் ஏதாவது ஒரு எழுத்து தோன்றினால் அது தோன்றல் எனப்படும்.

வாழை+பழம் ஸ்ரீ வாழைப்பழம். இப்புணர்ச்சியில் 'ப்' புதிதாகத் தோன்றியுள்ளது. எனவே இது தோன்றல் ஆகும்.

**2. திரிதல்**

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது இடையில் ஒரு எழுத்து வேறொரு எழுத்தாக மாறுபடுவது திரிதல் எனப்படும்.

பல்+பொடி ஸ்ரீ பற்பொடி. இப்புணர்ச்சியில் 'ல்' என்னும் மெய்யெழுத்து 'ற்' ஆக மாறியது. எனவே இது திரிதல் ஆகும்.

**3. கெடுதல்**

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது இடையில் ஒரு எழுத்து இல்லாமல் அதாவது அழிந்து போவது திரிதல் எனப்படும்.

மரம்+நாய் ஸ்ரீ மரநாய். இதில் 'ம்' என்னும் எழுத்து கெட்டது. எனவே இது கெடுதல் ஆகும்.

**தோன்றல் : உடம்படு மெய்**

வந்த + உடன் ஸ்ரீ வந்தவுடன் என்று சேர்த்தெழுத வேண்டும். வந்த என்னும் சொல்லின் ஈற்றில் அகர ஒலி இருக்கிறது. வருமொழியாகிய உடன் என்பதன் முதல் எழுத்து உகரம். இந்த இரண்டு உயிர் ஒலிகளையும் ஒன்றுபடுத்தும் 'வ்' என்னும் மெய்யெழுத்தையே உடம்படுமெய் என்கிறோம்.

'வ்' என்றும், 'ய்' என்றும் இரண்டுவகை உடம்படு மெய்கள் உண்டு.

உயிரீற்றுக்கு முன் உயிர் அதாவது நிலைமொழியின் இறுதியிலும் வருமொழி முதலிலும் உயிர் எழுத்து வருமாயின் அவ்விரண்டு உயிர் எழுத்துக்களையும் இணைத்திட இடையில் ஒரு மெய்யெழுத்துத் தோன்றும். இதனையே உடம்படு மெய் என்கிறோம்.

## வகர உடம்படு மெய்

அ, ஆ, உ, ஊ, ஒ என்னும் உயிரொலிகளுள் ஏதாவது ஒன்று நிலைமொழியின் இறுதியில் இருக்க, வருமொழி முதலில் பன்னிரண்டு உயிரெழுத்துக்களுள் எது வந்தாலும் உடம்படு மெய்யாக 'வ்' தோன்றும். இதனையே வகர உடம்படு மெய் என்கிறோம்.

போன+உடன் = போனவுடன்

மா+இலை = மாவிலை

திரு+ஆரூர் = திருவாரூர்

பூ+எழுத்து = பூவெழுத்து

கோ+இல் = கோவில்

வந்த உடன், போன உடன் என்று பிரித்தெழுதுதல் கூடாது. சேர்த்தே எழுதுதல் வேண்டும். வரூஇல்லை என்னும் சொற்களை வரவில்லை என்றுதான் எழுத வேண்டும்.

## யகர உடம்படு மெய்

நிலைமொழியின் இறுதியில் இ, ஈ, ஐ ஒலிகளுள் ஏதாவது ஒன்று இருக்க, வருமொழி முதலில் பன்னிரண்டு உயிரெழுத்துக்களுள் எது வந்தாலும் உடம்படு மெய்யாக 'ய்' தோன்றும். இதனையே யகர உடம்படு மெய் என்கிறோம்.

கூலி+ஆள் = கூலியாள்

தீ+ஆல் = தீயால்

கை+எழுத்து = கையெழுத்து

### 'ஏ' முன் இருமையும்

ஏ ஒலியுடைய சொல்லானது பெயர்ச் சொல்லாயின் 'வகர' உடம்படு மெய்யும், இடைச்சொல்லாயின் 'யகர' உடம்படு மெய்யும் பெற்று வரும்.

தே+ஆரம் = தேவாரம் (தே – கடவுளுக்குச் சூட்டப்படும் ஆரம் - பாமாலை)

கறியே+இல்லை = கறியே யில்லை

உடம்படு மெய் செய்யுளைப் பிரித்துப் பொருள் உணர்ந்து கொள்வதற்கு மிகமிக இன்றியமையாதது. தவறாகப் பிரிக்காமல் சொற்களை எழுதுவதற்கும் இது வேண்டும்.

“வரையார் என்றதனால் உடம்படுமெய் கோடல் தலையன்று.

“கிளி அரிது, மூங்கா இல்லை எனவும் வரும்” - இளம்பூரணர் உரை

“வரையார் என்றதனால் உடம்படுமெய் கோடல் ஒருதலையன்று.

“கிளி அரிது, மூங்கா இல்லை என வரும்” – நச்சினார்க்கினியர் உரை

(மூங்கா – கீரியுள் ஒரு சாதி)

இவ்வாறு தொல்காப்பிய உரையாசிரியர்கள் இருவரும் எல்லா இடங்களிலும் உடம்படுமெய் வர வேண்டுவதில்லை என்று கருதினர். கண்ட இடமெல்லாம் உடம்படுமெய் சேர்த்து எழுதினால் பொருள் மயக்கம் ஏற்படும்.

‘பெரியவிடம்’ என்னும் தொடர் ‘பெரிய வி‘ம்’ என்றும், பெரிய இடம் என்றும் இருபொருள் தரும். பாட்டில் சிலேடைப் பொருள் தருவதற்கு இது பயன்படும். உரைநடையில் இப்படி எழுதுவது தவறாகும். ‘பெரிய இடம்’ என்று பொருள் தருவதற்குப் ‘பெரியவிடம்’ என்று எழுதாமல் உடம்படுமெய் இன்றி பிரித்து எழுதுவதே சிறந்தது.

‘வந்த வலவன்’ என்னும் தொடரானது ‘வந்த தேர்ப்பாகன்’ என்றும், ‘வந்த நண்டு’ என்றும் பொருள்படும். வலவன் - தேர்ப்பாகன். அலவன் - நண்டு. ‘வந்த நண்டு’ என்று பொருள் தர வேண்டுமாயின், ‘வந்த அலவன்’ என்றே எழுத வேண்டும்.

‘அவனையடித்தான்’, ‘கறியேயில்லை’ என்று எழுதாமல் அவனை அடித்தான் என்றும், கறியே இல்லை எனவும் எழுத வேண்டும். ஆனால், தீயொளி, பனையோலை என்பனவற்றைப் பிரிக்காமலே எழுத வேண்டும். பொருள் மயக்கம் ஏற்படாதவாறு உடம்படுமெய்யைப் பயன்படுத்த வேண்டும்.

**உடம்படுமெய் வரவேண்டிய இடங்கள்**

தொகைச்சொற்களில் உடம்படுமெய் வரவேண்டும்.

(உ.ம்) பூவரசு, மாவிலை, தெருவோரம்

**உடம்படுமெய் வரக்கூடாத இடங்கள்**

1. வியப்பு, துன்பம், மெச்சிப்பேசுவது ஆகிய இடங்களில் உடம்படுமெய் தேவையில்லை. (உ.ம்) ஆ! ஆ! என்ன செய்தாய்!

2. ஐயமுண்டாகும் இடங்களிலும் வீணான இடங்களிலும் உடம்படுமெய் தேவையில்லை.

**சுட்டெழுத்துகளின் பின்னும் எகர வினாவின் பின்னும் உயிரெழுத்துவரின் 'வ்' தோன்றி இரட்டித்தல்.**

அ+உயிர் = அவ்வுயிர்

இ +எழுத்து = இவ்வெழுத்து

எ+அணி = எவ்வணி

இந்த 'வ்' உடம்படுமெய் அன்று.

**சுட்டெழுத்துகளின் பின்னும் எகர வினாவின் பின்னும் யகரம் வரின் 'வ்' தோன்றுதல்.**

(உ.ம்) அ+யானை=அவ்வானை என்றும், இ+யானை=இவ்யானை என்றும், எ+யானை=எவ்யானை என்றும் வரும்.

**பிறவற்றின்பின் அந்த அந்த எழுத்தே வருதல்**

(உ.ம்) அ+நூல்=அந்நூல் என்றும், இ +நாடு=இந்நாடு என்றும், எ+நாடு=எந்நாடு என்றும் வரும்.

அ+செடி=அச்செடி என்றும், இ+குதிரை = இக்குதிரை என்றும், எ+படை=எப்படை என்றும், அ+ஞாலம்=அஞ்ஞாலம் என்றும், இ+ஞாலம் = இஞ்ஞாலம் என்றும், அ+மனைவி=அம்மனைவி என்றும், இ+மாதர்=இம்மாதர் என்றும், எ+மாதம்=எம்மாதம் என்றும், அ+வீடு=அவ்வீடு என்றும், இ+வேளை=இவ்வேளை என்றும், எ+விதம்=எவ்விதம் என்றும், அ+ஙனம்=அங்ஙனம் என்றும், இ+ஙனம் =இங்ஙனம் என்றும், எ+ஙனம் = எங்ஙனம் என்றும் வரும்.

**திரிதல்**

விடியல்+காலை=விடியற்காலை எனவும், பந்தல்+கால்=பந்தற்கால் எனவும், தகுந்தால்+போல்=தகுந்தாற்போல் எனவும் வரும்.

**கெடுதல்**

எவ்வாறுஎனின் எவ்வாறெனின் என்றே வரும். எவ்வாறுயெனின் என்று எழுதுவது தவறு. நிலைமொழியின் ஈற்றில் குற்றியலுகரம் இருக்க, வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால் நிலைமொழியீற்றிலுள்ள குற்றியலுகரம் கெட்டுப்போக, நிலைமொழியீற்று மெய்யும் வருமொழி முதலில் இருக்கும் உயிரும் சேர்ந்துவிடும்.

(உ.ம்) வேறு+இல்லை=வேறில்லை

அங்கு+அங்கு=அங்கங்கு

என்று+என்றும்=என்றென்றும்

காசு+ஏது = காசேது?

நாடு+அற்றோர் = நாடற்றோர்

மரபு+ஆகும் =மரபாகும்

உழுது+உண்டு=உழுதுண்டு

ஒப்பு+இல்லை=ஒப்பில்லை

எழுந்து+இரு=எழுந்திரு

**சில சொற்களில் முற்றியலுகரத்துக்கும் இப்படியே வரும். எடுத்துக்காட்டு:**

வரவு+ஏற்பு = வரவேற்பு

கதவு+அடைப்பு = கதவடைப்பு

செலவு+ஆயிற்று = செலவாயிற்று

இச் சந்தியை நன்கு தெரிந்து கொண்டால், செய்யுளில் வரும் குற்றியலுகரச் சந்தியைப் பிரித்து படித்தறிந்து கொள்ளவும், உரைநடையில் குற்றியலுகரச் சந்தியைப் பயன்படுத்தவும் திறமை உண்டாகும்.

நாள்+தோறும் = நாடோறும் எனவும், அவர்கள் +தாம் = அவர்கடாம் எனவும், துகள்+தீர்=துகடீர் எனவும் வரும்.

மேற்குறித்த எளிய சந்தி முறைகளைத் தெரிந்து கொண்டால், எவரும் நல்ல முறையில் பிழையின்றித் தமிழ் எழுதலாம்.

## சொற்றொடர்ப் பிரிப்புத் தவறுகள்

சொற்றொடர்களைக் கூறும்போது இசையறுத்துக் கூறினால்தான் பொருள் தெளிவாக விளங்கும். நன்னூலாசிரியர், ''புணர்மொழி இசைத்திரிபால் தெளிவு எய்தும் என்ப'' என்று குறிப்பிட்டுள்ளார். 'செம்பொன் பதின்பலம்' என்னும் தொடரைச் செம்பொன் பதின் பலம் என்று இசை அறுத்துக் கூறினால், இத்தொடரானது செம்பொன் பத்துப் பலம் என்று பொருள்படும். இத்தொடரையே செம் பொன்பதின்பலம் என்றால், இது, செம்பு ஒன்பது பலம் என்னும் பொருள் தரும். கூறும்போது தெளிவுக்காகச் சொற்றொடர்களை இசையறுத்துச் சொல்ல வேண்டுமென்று வற்புறுத்தினால், எழுதும் பொழுது சொற்றொடர்களைச் சரியான விதத்தில் பிரித்தெழுத வேண்டும் என மிகுதியாக வற்புறுத்த வேண்டும். இன்று வெளிவரும் நாளிதழ்கள், வார வெளியீடுகள், பாட நூல்கள் இவற்றில் சொற்றொடர்களைத் தவறாகப் பிரித்து அச்சிடுதலை மிகுதியாகக் காண்கிறோம். சொற்றொடர்ப் பிரிப்பில் ஏற்படும் தவறுகளை நீக்குவதற்குச் சில

வழிகளும் விதிகளும் இங்கே தரப்பட்டுள்ளன. இங்குக் கூறப்படும் விதிகளைப் பின்பற்றி எழுதினால், சொற்றொடர்களைப் பிரிப்பதில் நிகழும் தவறுகளை நீக்கலாம்.

புத்தியில்லாதவன் என்னும் சொற்றொடரைப் பிரிப்பதில் ஒன்றுக்கு ஒன்று மாறுபட பொருளுண்டாவதைக் காணலாம். புத்தி இல்லாதவன் என்று பிரித்தால் அறிவற்றவன் என்றும், புத்தியில் ஆதவன் எனப் பிரித்தால் புத்தியில் சூரியனைப்போல ஞானம் உள்ளவன் என்றும் அத்தொடர் பொருளைத் தரும்.

ரயில் நிலைய அறிவிப்புப் பலகை ஒன்றில் 'பிரயாணி கள் சாப்பிடும் இடம்' என்றிருந்ததாம். என்ன பொருள்? பிரயாணி கள்ளைக் குடிக்கும் இடம் என்பது பொருள். இப்படி வெளிப்படையாகக் கள் குடிப்பதற்கு ஓர் இடத்தை ரயில் நிலையத்தார் ஏற்படுத்தி வைப்பாரோ? இல்லை. எழுதினவர் பிரயாணிகள் சாப்பிடும் இடம் என்று கள் விகுதியைப் பிரயாணி என்னும் சொல்லுடன் சேர்த்தெழுதியிருந்தால், இந்த வேறுபாடான பொருளே வந்திராது. எனவே, சொற்களையும் சொற்றொடர்களையும் விழிப்பாகப் பொருள் மாறுபடாதவாறு பிரிக்க வேண்டும்.

'முனிவர் தம் வரலாற்றில் கூறினார்' என்னும் வாக்கியத்திற்கும், 'முனிவர்தம் வரலாற்றில் கூறினார்' என்னும் வாக்கியத்திற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. 'தம்' என்பதைப் பிரித்தெழுதுவதாலும், சேர்த்தெழுதுவதாலும் இவ்வேறுபாடு தோன்றுகிறது. முதல் வாக்கியத்தில் 'முனிவர் தம் வரலாற்றில் கூறினார்' என்பது பொருள். இரண்டாவது வாக்கியத்தில், 'முனிவருடைய வரலாற்றில் மற்றொருவர் கூறியுள்ளார்' என்பது பொருள். முனிவர் - தம் - முனிவருடைய. 'தம்' என்பதைச் சேர்த்தெழுதுவதில் கவனம் செலுத்த வேண்டும். அவர் வீட்டிலிருந்து போனார் என்பதற்கும், அவர் வீட்டில் இருந்து போனார் என்பதற்கும் வேறுபாடு உண்டு. இரண்டாவது வாக்கியத்தில் உள்ள 'இருந்து' என்னும் சொல்லுக்குத் தங்கி என்று பொருள் தோன்றக் காணலாம். ஆதலால் வேற்றுமை உருபுகளைச் சேர்த்தெழுத வேண்டும்.

மொழி நூலாசிரியர்கள் மொழிகளைத் தனிநிலை மொழி என்றும், உட்பிணைப்பு நிலைமொழி என்றும், ஒட்டு நிலைமொழி என்றும் மூன்று வகையாகப் பாகுபாடு செய்கிறார்கள். சீனமொழி, திபத்துமொழி, சையாம் மொழி என்பவை தனிநிலை மொழிகள். சொற்கள் தனித்தனியாக இருக்குமாம். வடமொழி உட்பிணைப்புநிலை மொழி. சொற்கள் பிணைந்து நிற்பது உட்பிணைப்புநிலை மொழியாகும். ராணி என்னும் சொல் தமிழில் வழங்கும் வடசொல். இஃது இருசொற்கள் உட்பிணைந்து வந்துள்ள சொல்லாம். துமிழ்மொழி ஒட்டுச்சொல் மொழி. பார்-த்-த்-ஆர்-கள் என்பன இப்படி ஒட்டி வந்த சொல்லே பார்த்தார்கள் என்னும் சொல். கண்அன் என்பவை கண்ணன் என ஒட்டுச் சொல்லாகச் சேரும். எனவே ஒட்டுச்சொல் மொழியாகிய தமிழில் பிரிப்பதில் தவறு ஏற்படுமானால் பொருளே மாறுபட்டு விடும். 'பிரயாணி கள் சாப்பிடும் இடம்' போலாகிவிடும். இங்குப் பழங் கள் கிடைக்கும் என்று பிரித்தெழுதினால் பழமையான கள் கிடைக்கும் என்று பொருள்படும். பழங்கள் என்று சேர்த்து எழுதினால், அச்சொல் பழவகைகள் கிடைக்கும் என்னும் பொருள் தரும். அவரைப்பூவில் காணலாம் என்னும் சொற்றொடரை அவரைப் பூவில் காணலாம் எனத் தவறாகப் பிரித்தெழுதினால் என்ன பொருள் தரும்? பலகைத் தொழில் என்னும் தொடரைப் பல கைத்தொழில் என்று பிரித்தால் தவறான பொருள்தானே

வரும். ஆகையால், சொற்றொடர்களைப் பிரித்தெழுதும் போதும் மிகுந்த கவனம் செலுத்துவது இன்றியமையாதது.

| பிழை | திருத்தம் |
| --- | --- |
| அவ் ஊர் | அவ்வூர் |
| வந்த உடன் | வந்தவுடன் |
| வீட்டில் இருந்து | வீட்டிலிருந்து |
| அவர்கள் இடம் | அவர்களிடம் |
| வர அழைத்தான் | வரவழைத்தான் |
| வெளி ஏறினார் | வெளியேறினார் |
| சொற் கோவை | சொற்கோவை |
| தெரிந்து கொள்க | தெரிந்துகொள்க |
| வந்து விட்டான் | வந்துவிட்டான் |
| மிகுதியாகும் ஆனால் | மிகுதியாகுமானால் |
| பலாச் செடி | பலாச்செடி |
| வெந் நீர் | வெந்நீர் |
| கட்டளை இட்டான் | கட்டளையிட்டான் |
| சிந்தித்து மாய்ந்து கொண்டும் | சிந்தித்தும் ஆய்ந்து கொண்டும் |
| திரு நீலகண்டர் | திருநீலகண்டார் |

''திரு நீலகண்டர்'' என்னும் சொற்றொடரை இடம் விட்டுப் பிரித்தெழுதினால் 'திருவளர் நீலகண்டர்' என்றாகிவிடும். 'ஜலந்தன் குளிர்ச்சியை மாற்றினும் மாற்றும" - இங்கே 'ஜலம் தன்' என்றிருந்தால் தான் பொருள் விளக்கமாகத் தெரியும். 'அவ்' என்பது பலவின் பாற் சுட்டாதலால் அவூஊர் - வ் இரட்டித்து அவ்வூர் என்றாகும்.

சொற்களை எழுதும்போது தவறாக சிலர் பிரித்தெழுதுவர். ஆங்கிலத்தில் சொற்களைப் பிரிக்கும்போது இடமில்லாத காரணத்தால் அவை அசையாகப் பிரிக்கப்பட்டு இணைத்துக்காட்ட '-' இவ்விதமாகச் சிறு கோடிடக் காண்கிறோம். ஆங்கிலத்தில் சொற்களை இடமுட்டுப்பாட்டால் பிரிக்கும்போது ஆங்கில அகராதியிற் குறிப்பிட்டவாறு தவறு நேராத முறையில் பலர் பிரித்தெழுதுகின்றனர்ளூ அச்சிடுகின்றனர். ஆனால், தமிழில் பலர் சொற்களைத் தவறாகப் பிரிக்கின்றனர். மொழியறிவு மிக்கவர்கள் ஆங்கிலத்தை எழுதுவதனால் அதில் தவறுகள்

நேர்வதில்லை. தமிழில் அப்படி இல்லாமையே இத்தகைய தவறுகளுக்கு காரணமாகிறது. சொற்றொடர்களைப் பிரிப்பதிலும் தவறு வரக்கூடாது.

| **பிழை** | **திருத்தம்** |
|---|---|
| (1) கோ தண்டராமன் | கோதண்டராமன் |
| (2) இரட்டை ச்சகோதரர்கள் | இரட்டைச் சகோதரர்கள் |
| (3) வளர்த்து வந்தான் | வளர்த்துவந்தான் |
| (4) அதற்கு ப்போடு | அதற்குப் போடு |
| (5) தொழிலாளர் கள்வன் முறையில் போராடுகிறார்கள். | தொழிலாளர்கள் வன்முறையில் போராடுகிறார்கள். |

எழுதுவதிலும் அச்சிடும் நூல்களிலும் மெய்யெழுத்துகள் இடப்பக்கத்தில் வரக்கூடாது. கீழே வரும் விதிகள் சொற்றொடர் பிரிப்புத் தவறுகளை நீக்கப் பயன்படும்.

1. வினைத்தொகை, பண்புத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை, உம்மைத்தொகை, உவமைத்தொகை, வேற்றுமைத்தொகை, உருபும் பயனும் உடன் தொக்க தொகை, அன்மொழித்தொகை ஆகிய இத்தொகைகளைப் பிரித்தலாகாது. இத் தொகைகள் ஒரு சொல் தன்மையுடையவை. ‘‘எல்லாத் தொகையும் ஒரு சொல் நடைய’’ (சொல்-420) என்று தொல்காப்பியம் கூறுகிறது.

(உ.ம்) வினைத்தொகை – செய்வினைளூ பண்புத்தொகை – பைந்தமிழ்ளூ இருபெயரொட்டுப் பண்புத்தொகை – கார்த்திகைத்திங்கள்ளூ உம்மைத்தொகை – செடிகொடிளூ உவமைத்தொகை – மலைத்தோள்ளூ இரண்டாம் வேற்றுமைத் தொகை – துணிகட்டுளூ உருபும் பயனும் உடன்தொக்க தொகை – தயிர்க்குடம்ளூ அன்மொழித்தொகை – காலாயுதம் கூவிற்று. (காலாயுதம் - கோழி. காலையே ஆயுதமாகக் கொண்டு போரிடுவது)

2. வேற்றுமை உருபுகளைச் சேர்த்தெழுதுக.

(உ.ம்) என்னுடைய வீடு, வீட்டிலிருந்து போனார்.

வீட்டில் இருந்து போனார் என்று உருபைப் பிரித்து எழுதினால் வீட்டில் தங்கிவிட்டுப் போனார் என்று பொருள்படக்கூடும்.

3. இடைச்சொல்லைப் பிரித்தலாகாது.

(உ.ம்) அவர்தாம் (அவர் தாம் என்று பிரித்தல் கூடாது)

4. துணைவினையைச் சேர்த்தெழுதுக.

(உ.ம்) வந்துவிடு, செய்துகொண்டான்.

5. பொருள் வேறுபடுமாயின் சேர்த்தெழுதுக.

**பிழை** – என் பங்கு நிலம் ஆகவே கொடுத்தான்.

**திருத்தம்** – என் பங்கு நிலமாகவே கொடுத்தான்.

6. இடம் இல்லாவிட்டால் பொருள் தரும் முறையில் பிரிக்கவேண்டும். வரவி டாது என்று பிரிக்காமல் வர விடாது என்று பிரித்தெழுத வேண்டும்.

7. உடம்படுமெய்யைச் சில இடங்களில் சேர்த்தே எழுதுக.

| | பிழை | திருத்தம் |
|---|---|---|
| (உ.ம்) | வர இல்லை | வரவில்லை |
| | வந்த உடன் | வந்தவுடன் |

8. கள் விகுதிகளைக் கூடியமட்டும் பிரிக்காமல் எழுதுக.

| | பிழை | திருத்தம் |
|---|---|---|
| (உ.ம்) | அவர் கள் கூறினார் கள். | அவர்கள் கூறினார்கள். |

சேர்த்தெழுத வேண்டிய சொற்றொடர்களைச் சேர்த்தெழுத பழக வேண்டும். அச்சுக்கோப்போரும் சேர்த்தெழுத வேண்டிய சொற்றொடர்களைப் பிரிக்காமல் சேர்ந்து வருமாறு அச்சுக் கோக்கப் பழகுதல் வேண்டும்.

**மாதிரி வினாக்கள்**

1. வலி மிகும் இடங்களை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. சொற்றொடர் பிரிப்பு தவறுகளைப் பட்டியலிடுக.
3. வலி மிகா இடங்களை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
4. சந்தி விகுதிகளை எடுத்துரைக்க.
5. புணர்ச்சி என்றால் என்ன? வகைகளை எடுத்துக்காட்டுடன் விவரி.

# அலகு – 3

## வாக்கிய வகைகளும் அமைக்கும் முறைகளும்

### எழுத்தும் சொல்லும் வாக்கியத்திற்கு கருவிகள்

''பன்னீராண்டு நிகழ்ந்த பஞ்சத்துக்குப்பின் நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்றைப் பாண்டியன், இனி நாடு நாடாயிற்று. ஆகலின், நூல் வல்லாரைக் கொணர்க'' என்று எல்லாப்பக்கமும் ஆட்போக்கினான். ஏவலர் எழுத்ததிகாரம் வல்லாரையும் சொல்லதிகாரம் வல்லாரையும் தலைப்பட்டுக் கொணர்ந்து, ''பொருளதிகாரம் வல்லாரை எங்கும் தலைப்பட்டிலேம்'' என்று மன்னனிடம் கூறியபோது, அவன், ''எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் பொருளதிகாரம் அறிவதன் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம்'' என்று கவன்றான் என இறையனார் அகப்பொருள் கூறுகின்றது. எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் பொருளதிகாரத்தை அறிவதற்குள்ள கருவிகள். அதுபோலவே எழுத்துப்பிழை, சொற்பிழை, சந்திப்பிழை, சொற்பிரிப்புப்பிழை முதலியனவெல்லாம் வாக்கியத்தைப் பிழையின்றி எழுதுவதற்காகவே அறிந்து கொள்கிறோம். எழுத்தும் சொல்லும் வாக்கியத்திற்குக் கருவிகள் என்பது நன்கு விளங்கும்.

### வாக்கியத்தில் பலர் செய்யும் தவறுகள்

வாக்கியங்களை எழுதும்போது மாணவர்களும் செய்தியாளர்களும் இதழாசிரியர்களும் எழுத்தாளர் சிலரும் இலக்கணப்பயிற்சி இல்லாமையால் பற்பல தவறுகள் செய்யக் காண்கிறோம். ஒருமை பன்மை வினைமுற்றுப் பிழைகள் நாளிதழ்களில் மலிந்திருக்கக் காணலாம்.

ஆங்கிலத்தில் இப்பிழையைச் செய்தால் நம்மவர்களே எள்ளி நகைப்பார்கள். ஆனால், தமிழில் ''கட்டுப்பாடுகள் இனிக் கிடையாது'' என்று எழுதினால் தவறு என்று நாம் கவலைப்படுவதில்லை. ''கட்டுப்பாடுகள் இனிக்கிடையா'' என்றிருக்க வேண்டும். சிலர் அப்படி எழுதுவதில் உயிரிருப்பதாகவும் கருதிவிடுகின்றனர். பேச்சு மொழியில் தவறுகள் செய்கிறோம். கவலையில்லை. எழுத்து மொழியில் தவறு செய்வது மொழிக்கு செய்யும் தீமை என்றுதான் கூற வேண்டும்.

### வாக்கியத்தில் முழுக்கவனம் செலுத்துக

நாகரிக வளர்ச்சியின் சின்னம் உரைநடைப் பெருக்கம். செய்யுள் பண்டை மொழியின் சிறப்பு. இன்றைய மொழியின் சிறப்பு இக் காலத்துக்கு ஏற்றவாறு உரைநடை நூல் பெருகுவதேயாகும். விஞ்ஞான அறிவு பெருகப் பெருக, உரைநடை நூல்களுக்கு தேவையும் மதிப்பும் பெருகும். விஞ்ஞானம் வளர்ந்திருக்கும் இக்காலத்தில் உரைநடை தான் எழுத முடியுமேயன்றிச் சிறந்த செய்யுள் இயற்றுவது அரிதாகும். உரைநடையில் கவனம் செலுத்தும் இக்காலத்தில் நாம் உரைநடைக்கு அடிப்படையாக உள்ள வாக்கியத்தில் முழுக் கவனம் செலுத்த வேண்டும்.

**வாக்கிய வரலாறு**

தமிழ்மொழியில் கி.பி.8-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட களவியல் இறையனார் உரையில் வாக்கியங்கள் நல்ல முறையில் அமைந்திருக்கக் காணலாம். அந்த உரைநடை, செய்யுள்நடை போல இருந்தாலும், வாக்கியங்களின் அமைப்புச் சிறந்திருக்கக் காண்கிறோம். கி.பி.13,14-ஆம் நூற்றாண்டுகளிலே வாழ்ந்த உரையாசிரியர்களால் வாக்கிய அமைப்பு வளர்ச்சியுற்றது எனலாம். 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து, மிகுந்த வளர்ச்சியுற்றுள்ள ஆங்கில மொழியின் கூட்டுறவால், தமிழில் வாக்கிய அமைப்புப் பண்பட்டு வரத் தொடங்கியது. இன்று நன்முறையில் வளர்ந்து கொண்டு வருகிறது. இவ்வளர்ச்சிக்கும் ஆங்கில மொழியின் கூட்டுறவே காரணம்.

**வாக்கியம் என்றால் என்ன?**

வாக்கியத்தைப் பிழையின்றி எழுதுவதற்கு வாக்கியம் என்றால் என்ன என்பதைப்பற்றியும், வாக்கிய வகைகள் இவை என்பதைப்பற்றியும், வாக்கியங்கள் இன்னவாறு அமையவேண்டும் என்பதைப்பற்றியும் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

வாக்கியம் என்பது வடசொல். வாக்கியத்தைத் தமிழில் முற்றுச்சொற்றொடர் எனலாம். வாக்கியம், உரைநடையில் மிக மிக இன்றியமையாத பகுதியாகும். வாக்கியம் என்பது ஒரே ஒரு முழுக்கருத்தைத் தெரிவிக்கும் சொற்கூட்டமாகும். ஒரு வாக்கியத்தில் இரு வேறு கருத்துக்கள் இருத்தலாகாது. ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் ஆகியவை இருக்கும். சில வாக்கியங்களில் எழுவாய் மறைந்து வருதலும் உண்டு. ‘நாளை வா’, ‘இளமையில் கல்’, ‘இரப்பவர்க்கு இட்டு உண்ணுங்கள்’ - இவை வாக்கியங்களே. இவற்றில் எழுவாய்கள் இல்லை. முதலிரண்டு வாக்கியங்களில் நீ என்னும் எழுவாயும், மூன்றாவது வாக்கியத்தில் நீங்கள் என்னும் எழுவாயும் மறைந்து நிற்கின்றன. எழுவாய் தோன்றாமல் இருந்தால் அதனைத் தோன்றா எழுவாய் என்பர். செயப்படுபொருள் சில வாக்கியங்களில் இல்லாமலும் இருக்கும். கண்ணன் ஓடினான் என்னும் வாக்கியத்தில் செயப்படுபொருள் இல்லாமல் உள்ளது. சில வாக்கியங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட செயப்படுபொருள்களும் இருக்கும். ஆசிரியர், மாசிலாமணிக்குத் தமிழும் கணக்கும் கற்பித்தார். இதில் ஒன்றுக்கு மேற்பட்ட செயப்படு பொருள்கள் இருக்கின்றன.

எழுவாயைத் தழுவியும் செயப்படுபொருளைத் தழுவியும் பயனிலையைத் தழுவியும் அடைமொழிகள் இருப்பது உண்டு. இல்லாதிருப்பதுமுண்டு. இவ்வடைமொழிகள் வாக்கியத்தின் முழுக்கருத்தை விளக்குவதாகவே இருக்கும். ‘பத்துத் திங்கள் சுமந்து ஈன்றெடுத்த தாயும் ஒழுக்கம் கெட்ட மகனை மிகவும் விரும்பமாட்டாள்’ - இந்த வாக்கியத்தில் அடைமொழிகள் வந்திருக்கின்றன. ‘பத்து திங்கள் சுமந்து ஈன்றெடுத்த’ என்னும் தொடர் ‘தாயும்’ என்னும் எழுவாய்க்குரிய தொடர்ளூ ‘ஒழுக்கம் கெட்ட’ என்னும் தொடர் ‘மகன்’ என்னும் செயப்படு பொருளுக்குரியதுளூ ‘மிகவும்’ என்பது ‘விரும்பமாட்டாள்’ என்னும் பயனிலைக்குரிய அடைமொழி.

தெளிவாகக் கருத்தைத் தெரிவிப்பதே வாக்கியத்தின் நோக்கமாகும். பொருள் மயக்கம் வாக்கியத்தில் வருதல் கூடாது. ‘‘இங்கு செய்யப்படும் பண்டங்கள் நெய்யில் செய்யப்பட்டவை அல்ல’’ என்று சிற்றுண்டிச்சாலை அறிவிப்பில் காணலாம். இ∴து ஏமாற்றும் வாக்கியம். முயக்கும வாக்கியமும் ஆகும். ‘‘செய்யப்பட்டவை’’ என்னும் சொல் வரைக்கும் ஒரு பொருளும் ‘‘அல்ல’’ என்னும் சொல்லைப் படித்த பின்னர் வேறு பொருளும் உணருகிறோம். இப்படி எழுதுவது வாணிகத் தந்திரம்.

**வாக்கிய வகைகள்**

கருத்தைப் பொறுத்து ஒருவகையாகவும், அமைப்பை ஒட்டி மற்றொரு வகையாகவும் வாக்கியங்களைப் பிரிக்கலாம். கருத்தைக் கொண்டு செய்தி (ளுவயவநஅநவெ) வாக்கியம் என்றும், வினா (ஐவெநசசழபயவழைெ) வாக்கியம் என்றும், விழைவு (ஞநளசைந) வாக்கியம் என்றும், உணர்ச்சி (நுஒஉடயஅயவழைெ) வாக்கியம் என்றும் பிரிப்பது ஒருவகை. விழைவு வாக்கியமானது வாழ்த்தையோ கட்டளையையோ வேண்டுகோளையோ சபித்தலையோ தெரிவிக்கும்.

**1. செய்தி வாக்கியம்**

(எ.கா) முயற்சி திருவினையாக்கும்

மழை பெய்தால் நெல் விளையும்

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

**2. வினா வாக்கியம்**

(எ.கா) இது யாருடைய வீடு?

நேற்று நீ வந்தாயா?

நீ எங்கே போகிறாய்?

**3.விழைவு வாக்கியம்**

இது நான்கு நிலைகளில் வரும்.

(எ.கா) நம் நாடு நீடு வாழி! (வாழ்த்து)

நாளைக்குப் பாடம் படித்து வா (கட்டளை)

எனக்கு இந்நூலைத் தருக (வேண்டுகோள்)

நீ ஒழிக (சபித்தல்)

**4. உணர்ச்சி வாக்கியம்**

(எ.கா) ஆ! என்னே இனிமை!

தமிழ் இறந்தபின் தமிழ்மண் மட்டும் இருந்தென்ன!

அந்தோ! மறைந்தார்.

தலைவ, வருக வருகவே!

**அமைப்பு வகை**

அமைப்பை ஒட்டி வாக்கியத்தைத் தனி வாக்கியம் (ளுiஅிடந ளுநவெநஉந) எனவும், தொடர் வாக்கியம் (உழஅிழரனெ ளுநவெநஉந) எனவும், கலவை வாக்கியம் (ஊழஅிடநஒ ளுநவெநஉந) எனவும் பிரிப்புத மற்றொரு வகை.

1. **தனி வாக்கியம்**

ஓர் எழுவாயோ பல எழுவாய்களோ ஒரே பயனிலையைப் பெற்று வருவது தனி வாக்கியமாகும்.

(எ.கா)

- ❖ இளங்கோ சிலப்பதிகாரத்தை இயற்றினார்.
- ❖ பாரதியார் பாஞ்சாலி சபதத்தை இயற்றினார்.

இவை ஒரு எழுவாய் ஒரு பயனிலையைப் பெற்றுவரும் தொடர்கள்.

- ❖ திருவள்ளுவர் திருக்குறளையும், இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தையும், சாத்தனார் மணிமேகலையும் இயற்றினார்கள்.

இச்சொற்றொடர் பல எழுவாய்கள் ஒரே பயனிலையைப் பெற்று வந்த தனிவாக்கியமாகும். தனி வாக்கியம் சிறிதாகவும் அல்லது பெரிதாகவும் எழுதலாம். எனினும் வாக்கியம் சிறிதாகவும் அளவுடனும் இருந்தால்தான் கருத்துத் தெளிவும், உணர்ச்சி வேகமும் இருக்கும்.

2. **தொடர் வாக்கியம்**

ஒரு எழுவாய், பல பயனிலைகளைக் கொண்டு முடிவது தொடர் வாக்கியம் ஆகும். அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியங்கள் அதனால், இதனால் என்னும் சுட்டுமுதற் காரணகிளவிகளாலோ, ஆகையால், ஏனென்றால் என்னும் காரணகிளவிகளாலோ, எனினும், இருப்பினும் போன்ற சொற்களாலோ இணைந்துவரினும், கருத்துத் தொடர்பால் இணைக்கப்பட்டுவரினும் அவ்வாறு வருவதைத் தொடர் வாக்கியம் எனலாம்.

(எ.கா)

- நான் மதுரைக்குப் போனேன்ளூ போனதும் எனக்குக் கடுமையான காய்ச்சல் கண்டதால் உடனே சென்னைக்குத் திரும்பிவிட்டேன்.
- அக்பர் பேரரசர் மட்டுமல்லர்ளூ ஆட்சி திறமையும் மிக்க பேரறிஞர்.
- அரசன் அரியணையில் இருந்தான். அவனோடு அரசியும் இருந்தாள்.
- தென்னைக்குக் கிளைகள் கிடையாளூ மடடைகளே உண்டு.
- இவ்வூரில் நன்செய் நிலமும் உண்டுளூ புன்செய் நிலமும் உண்டு

- நான் வருவேன் என்றேன்ஸ்ரீ வந்துவிட்டேன்.
- எதையும் செய்ஸ்ரீ ஆனால் நன்றாகச் செய்.
- ஒருவனுக்கு உண்மையாக அடையவேண்டிய அறம் துறவறம் அன்றுஸ்ரீ இல்லறமே.
- வேகமாக நடஸ்ரீ இல்லாவிட்டால் வண்டி வருவதற்குள் இரயில்நிலையத்தை அடைய முடியாது.
- நாங்கள் போராடுவது பொன்னுக்கு அன்றுஸ்ரீ புகழுக்கும் அன்றுஸ்ரீ உரிமைக்கே ஆகும்.

**3. கலவை வாக்கியம்**

பல வாக்கியங்கள் கலந்து ஒரு வாக்கியமாக அமைவது கலவை வாக்கியம் எனப்படும். இதில் ஒன்று முதன்மை வாக்கியமாக இருக்கும். மற்றது சார்பு வாக்கியமாக இருக்கும். சிலவற்றில் ஒன்று முதன்மை வாக்கியமாகவும் மற்றவை சார்பு வாக்கியங்களாகவும் இருக்கும்.

(எ.கா)

- நம்நாடு பொருளாதாரத்தில் முன்னேற வேண்டுமெனில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க உறுதிகொள்ள வேண்டும்.
- சேவகன் வந்து கள்வர்கள் பொருள்களைத் திருடிச் சென்றார்கள் என்றும் பிடிப்பதற்குள் அவர்கள் ஓடிவிட்டார்கள் என்றும் கூறியதும், நான் அத் திருடர்களைப் பிடிப்பதற்கு விரைந்து வண்டியில் சென்றேன்.

**4. தொடர் கலவை வாக்கியம்**

கலவை வாக்கியங்களிலும் தொடர்வாக்கியம் கலந்து வருவதால் அத்தகைய வாக்கியங்கள் தொடர் கலவை வாக்கியம் எனப்படும்.

(எ.கா)

- அங்கு வந்தவள் என் தங்கை என்றும், அவளை அங்கிருந்த மாணவன் ‘கேலி’ செய்தான் என்றும் அறிந்ததும் நான் அந்த மாணவனிடம் சென்று, “நீ, அப்பெண்ணை எப்படிக் ‘கேலி’ செய்யலாம்?” என்று கேட்டு வைதேன்ஸ்ரீ காவற்கூடத்துக்கு அவனை இழுத்துச் சென்று காவலரிடம் ஒப்படைத்தேன்.
- திருவள்ளுவர் முதல் முதலாக நீதிக்கருத்துகளைக் குறட்பாவில் அமைத்துத் திருக்குறளை இயற்றினார் என்று கருதுவதனால், அவரை அறிஞர்கள் முதற்பாவலர் என்று குறிப்பிடுவது பலரும் அறிந்த செய்தி என்று நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லைஸ்ரீ நீங்களே அறிவீர்கள்.

**வாக்கியங்கள் எழுதும் முறை**

பல வகையான வாக்கியங்களைக் கலந்து எழுதினால்தான் கட்டுரையோ கதையோ சுவையாக இருக்கும். சிறு வாக்கியங்களுக்கு வேகம் உண்டு. பெருவாக்கியங்களுக்கோ கம்பீரம்

உண்டு. பொருளுக்கு ஏற்றவாறு வாக்கியங்கள் அமையும். எனவே, வாக்கியங்களைப் பிழையின்றி எழுதிப் பழக வேண்டும்.

வாக்கியங்களை வழுவின்றி எழுதுவதற்கு எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் அமையும் முறையையும், எழுவாய் ஏற்ற பயனிலையைக் கொண்டு முடியும் முடிபையும், வாக்கிய அமைப்புக்குரிய இலக்கணங்களையும் தெரிந்துகொண்டு வாக்கியங்கள் எழுதுவது இன்றியமையாதது.

**தமிழ் வாக்கியத்தின் தனிச்சிறப்பு**

தமிழ் வாக்கியம் தமிழன் எண்ணுகிறவாறு அமைந்திருக்கும். கந்தன் என்றோ, பறவை என்றோ முதலில் எண்ணுவது முதலில் இருக்கும். அதாவது எழுவாய் முதலில் இருக்கும். இரண்டாவது எண்ணுவது எதைச் செய்தான் அல்லது எதைச் செய்தது என்பது. ஆதலால் செயப்படுபொருள் இரண்டாவதாக இருக்கும். என்ன செய்தான் அல்லது என்ன செய்தது என்று எண்ணுவது இறுதியிலாதலால் பயனிலை இறுதியில் இருக்கும். பயனிலை இறுதியில் இருத்தல் உளத்தியல் முறை. தமிழ் வாக்கியம் தருக்க முறையில் அமைந்திருப்பதாக ஐரோப்பிய அறிஞர்கள் கருதுகிறார்கள்.

சிலேட்டர் என்பார், ''திராவிட மொழிகள் எல்லாவற்றுள்ளும் மக்கள் பேசு மொழிக்குரிய தன்மையைப் பெற்றுள்ள மொழி தமிழ்மொழி. தருக்க அமைப்புடையதும் தமிழ்மொழியே'' என்றார். தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்து தமிழை நன்கு கற்றுத் தமிழரைப் போல எழுதவும் பேசவும் வல்லவராய் விளங்கிய அமெரிக்கர் ஒருவர், தம்மிடம் தமிழ்மொழி எண்ணுதற்கும் பேசுதற்கும் சிறந்தது என்று கூறியதாய் விட்னி என்ற ஐரோப்பிய அறிஞர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு ஐரோப்பிய அறிஞர்கள் பாராட்டும் முறையில் தமிழ் வாக்கியத்தில் எழுவாய் முதலிலும், செயப்படுபொருள் இடையிலும், பயனிலை இறுதியிலும் பொதுவாக மனிதன் எண்ணுகிற முறையில் அமைந்திருப்பது, தமிழ் வாக்கிய அமைப்பில் காணப்படும் தனிச்சிறப்பாகும். செய்யுளில் இம்முறை மாறி வருவதுண்டு. செய்யுள் மொழி வேறு. உரைநடை மொழி வேறு.

## பத்தி அமைப்பு

பல சொற்றொடர்கள் சேர்ந்து ஒரு கருத்தைத் தெரிவிப்பது பத்தியாகும். நாம் எழுதும் கட்டுரை, கதை, கடிதம் போன்றவற்றை பத்தி பத்தியாகப் பகுத்து எழுதினால்தான் படிப்போர் கருத்துக்களை விரைவாகவும், எளிதாகவும் புரிந்து கொள்ளமுடியும்.

பத்தியில் 'முதல் சொற்றொடர்' அப்பத்தியின் முக்கியக் கருத்தை எடுத்துரைப்பதாக அமைய வேண்டும். அடுத்து வரும் வாக்கியங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக அமைதல் வேண்டும். ஒரு பத்தியில் குறைந்தது மூன்று வாக்கியங்கள் இருத்தல் வேண்டும்.

கருத்துத் தெளிவாக இருந்தால் பத்திகள் எளிதாக அமையும். குழப்பமான போக்கில் மனதில் உதித்தனவற்றையெல்லாம் எழுதினால் பத்திகள் சீராக அமையாது.

சிறந்த தமிழ்ச் சான்றோர்களின் உரைநடை நூல்கள், கட்டுரைகள் ஆகியவற்றை அதிகம் படிப்பதன் வாயிலாகவும், இலக்கண, இலக்கிய அறிவு, மொழித் தேர்ச்சி, பயிற்சிகளின் மூலமும் பொருள் நயம் மிளிரும் சிறந்த பத்திகளை அமைத்து எழுதும் திறமைப் பெறலாம்.

வாக்கியங்கள் சிறியனவும், பெரியனவுமாகக் கலந்து இருந்தால்தான் படிப்பதற்குச் சுவையாக இருக்கும். பத்திகளும் சிறியன, பெரியனவாகக் கலந்தே இருக்க வேண்டும். தொடர்ந்து சிறு சிறு பத்திகளாகவோ, பெரிய பெரிய பத்திகளாகவோ அமைதல் கூடாது. தெரிவிக்கும் பொருளுக்குத் தக்கவாறு பத்திகள் அமைதல் வேண்டும்.

ஒவ்வொரு பத்தியிலும் தொடக்கமும் முடிவும் இருப்பது மிகவும் இன்றியமையாதது. தொடக்கமாகும் முதல் வாக்கிம் படிப்போர் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைய வேண்டும். பத்தியிலுள்ள ஒவ்வொரு சொற்றொடருக்கும் கருத்துத் தொடர்பு இருத்தல் வேண்டும்.

முக்கியமான கருத்துக்களைக் கொண்ட சொற்றொடர்கள் முதலில் அமைய வேண்டும்.

சிலர் எழுதுவது எத்தகைய சிறப்புடைய கருத்தைக் கொண்டது என்றாலும், படிப்பதற்கு விருப்பத்தை தராது. காரணம் என்ன? அவர்களின் திறமைக் குறைவாக அதனைக் கருதிவிடக் கூடாது. பயன்படுத்திய சொற்களையே மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதாலும் ஆர்வமுடன் படிக்கும் வகையில் பத்திகள் அமையாமையுமே அதற்குக் காரணம். இடத்திற்கேற்ற புதிய புதிய சொற்றொடர்களைப் பயன்படுத்தல் வேண்டும்.

மரபுத் தொடர்கள், பல்வேறு பொருத்தமான உவமைகள் இணைத்து எழுதினால்தான் படிப்போரைக் கவர முடியும்.

எழுத்து நடைக்கும், பத்தியமைப்புக்கும் எடுத்துக்காட்டாகச் சில தமிழ்ச் சான்றோர் எழுதிய சில பத்திகளைக் கீழே காண்க.

**காலை**

காலையும் வந்தது. கீழ்வானம் வெள்ளென்று வெளுத்துவிட்டது. மரங்களிலிருந்து கிளம்பும் பறவைகளின் இனிய ஒலி காற்றில் மிதந்து வந்தது. குடியானவர்கள் தங்கள் வேலைகளைப் பார்க்க கிளம்பிவிட்டார்கள். ஆடு, மாடுகளின் மணியோசைக் கேட்டது. உழவர்கள் உற்சாகமாகச் சீழ்க்கை அடிக்கும் குரல் எழுந்தது. கடல் போலக் கழனிகள் மரகத ஒளிகாட்டிக் காலைச் சுடர் வெள்ளத்தில் மின்னின.

தமிழறிஞர் டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களின் உணர்ச்சி ததும்பும் செந்தமிழ் நடையைக் கீழே காண்போம்.

‘‘சிறைச்சாலையில் செக்கிழுத்த துயரத்தை மாற்றியது என் செந்தமிழன்றோ? கைத்தோல் உரியக் கல்லுடைக்கும் போது என் கண்ணீரை மாற்றியது கன்னித் தமிழன்றோ? சிறைக் கோட்டத்தில் வேலை ஒழிந்த வேளையில் தொல்காப்பியத்தைப் படித்துப் படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன். வள்ளுவர் குறளைப் படித்து என் உள்ளம் தழைத்தேன்’’.

டாக்டர் மு.வரதராசனாரின் எளிமையும், இனிமையும் மிளிரும் நடையைப் பாருங்கள்:

''திருடன் உழைக்காமல், பிறருடைய உழைப்பின் பயனைப் பெற்று வாழ்கிறான். அதனால்தான் அவன் சமுதாயத்தில் வெறுக்கப்படுகிறான். எதிர்காலத்தில் உழைக்காமல் உயிர்வாழ்வோர் எவரும் அவ்வாறு வெறுக்கப்படுவர்''

பேரறிஞர் அண்ணாவின் ஆற்றொழுக்கான தெள்ளுதமிழ் நடையைப் பாருங்கள்.

''கிராமங்கள் இன்று இருண்டு கிடக்கின்றன. உழவர்கள் வாடி வதங்குகின்றார்கள். பருவ மழையோ இல்லை. பயிர் வளமோ கிடையாது. பசித்தொல்லையோ பொல்லாதது. லட்சக்கணக்கில் மக்கள் வாடுகிறார்கள். ஊரைவிட்டு, வாசலைவிட்டு, ஆணும், பெண்ணும், குட்டியும், குழந்தையும், வாலிபரும், கிழவரும் வானத்தைக் கூரையாகக் கொண்டு வறண்ட நிலத்தை வீடாக்கிக் கல்லுடைத்து மண்ணெடுத்துக் காலங் கழிக்கிறார்கள். இப்படி இருப்பவர் எண்ணற்றவர்கள்''.

மேற்கண்ட பத்திகள் சிறந்த ஆன்றோர்களால் எழுதப்பட்டவை. இவ்வாறு படிப்பவருக்கு ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பத்திகள் விறுவிறுப்புடன் அமைதல் வேண்டும்.

**மாதிரி வினாக்கள்**

1. வாக்கியம் என்றால் என்ன?
2. தனி வாக்கியம், தொடர் வாக்கியம் குறிப்பு தருக.
3. தமிழ் வாக்கியத்தின் தனி சிறப்புகள் யாவை?
4. பத்தி அமைப்பு முறையை விவரி.
5. வாக்கிய வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

# அலகு – 4

## மரபுத் தொடர்கள்

இணைமொழிகளைப் போலவே மரபுத் தொடர்களிலும் கருத்தாழமும், நடையழகும் சிறப்பாக அமைந்திருக்கும். ஏதேனும் ஒரு சந்தர்ப்பச் சூழ்நிலையில் உருவானவை இவை. மரபுத் தொடர்கள் அந்தந்த மொழியின் தனித் தன்மைக்கேற்றவாறு அமையும். நம் தமிழ் மொழியில் வழங்கிவரும் மரபுத் தொடர்களில் சில கீழே தரப்பட்டுள்ளன.

(எ.கா) ஒருவன் புகழ்பெற்று விளங்குகிறான் என்பதை 'கொடி கட்டிப் பறத்தல்' என்ற மரபுத் தொடர் விளக்குகிறது. சிந்திக்காமல் அவசரமாகக் காரியம் புரிவோரை 'அவசரக் குடுக்கை' என்ற சொல் அறிய வைக்கிறது. ஏமாற்றிவிட்டான் என்பதை 'நாமம் போட்டு விட்டான்' என்று மரபுத் தொடர் விளங்க வைக்கிறது. இச்சொற்கள் மூலம் நாம் செய்தியைப் புரிந்து கொள்வது எளிது.

எடுத்துக்காட்டுகளாக சில தொடர்களைக் காணலாம்.

| **மரபுத் தொடர்** | | **பொருள்** |
|---|---|---|
| அதோ கதி | – | கீழ்நிலை அடைதல் |
| அவலை நினைத்து உரலை இடிக்கிறான் | – | ஒன்றை நினைத்து மற்றொன்றைச் செய்தல் |
| ஆகாயத் தாமரை | – | இல்லாத ஒன்றைக் கூறுதல் |
| ஆயிரங்காலத்துப் பயிர் | – | நீண்டகாலத்திற்கு உரியது |
| இந்திர சாலம் | – | மாயச் செயல் |
| இமாலயத் தவறு | – | மிகப்பெரிய தவறு |
| உலை வைத்தல் | – | கேடு செய்தல் |
| உலக்கைக் கொழுந்து | – | எதற்கும் ஒத்துப் போகாத தன்மை |
| ஊமை கண்ட கனவு | – | வெளியில் கூற முடியாதது |
| ஏட்டுச் சுரைக்காய் | – | நடைமுறைக்கு ஒவ்வாதது |
| ஓலை வந்து விட்டது | – | கட்டளை வந்துவிட்டது |
| ஓலை கிழிந்தது | – | வேலை போய் விட்டது |
| கயிறு திரிக்கிறான் | – | பொய் கூறுகிறான் |

| | | |
|---|---|---|
| கங்கு கரை இல்லை | – | அளவில்லை |
| கோட்டை விட்டான் | – | ஏமாந்தான் |
| குட்டிச் சுவர் | – | பயனற்றிருத்தல் |
| குரங்குப் பிடி | – | விடாப்பிடி |
| கோயில் பெருச்சாளி | – | பொதுச் சொத்தை அபகரிப்பவன் |
| சிதம்பர ரகசியம் | – | யாருக்கும் தெரியாதது |
| தாளம் போடுகிறான் | – | ஆமாம் சாமி போடுதல் |
| நீர்மேல் எழுத்து | – | அழியக் கூடியது |
| பழம் பெருச்சாளி | – | பழமையில் ஊறியவர் |
| பித்தலாட்டம் | – | ஏமாற்றுதல் |
| புத்தகப்பூச்சி | – | அனுபவ அறிவு இல்லாமை |
| முதலைக் கண்ணீர் | – | போலி அழுகை. |
| வாய்ச்சொல் வீரன் | – | செயலில் கோழை |
| விழலுக்கு இறைத்த நீர் | – | வீண் செயல் |
| விசுவாமித்திரப் படைப்பு | – | புதிய படைப்பு |

## பழமொழிகள்

பழமொழிகள் சான்றோர்களின் அனுபவ மொழிகள், மக்களை நன்னெறியில் செலுத்தக் கூடிய வழிகாட்டிகள். உலகெங்கிலும் பழமொழிகள் காணப்படுகின்றன. எல்லா நாடுகளிலும், எல்லா மொழிகளிலும் பழமொழிகள் உண்டு. சங்க இலக்கியம் முதலாக அனைத்து இலக்கியங்களிலும் பழமொழிகள் பயின்று வருகின்றன.

பழமொழிகள் சமுதாயத்தின் கருத்துவளரச்சியால் தோன்றிய நிலைத்து நின்று நல்வழி காட்டும் அறிவுரைகள். அவை நீதிக் கருவூலமாகவும் பட்டறிவுக் குவியலாகவும் விளங்கி வருகின்றன. நாம் எழுதும் உரைநடைகளில் சிறந்த கருத்துக்களை உள்ளடக்கியுள்ள பழமொழிகளையும் இடத்திற்கேற்றவாறு அமைத்து எழுதுவது சாலச் சிறந்தது. குறைவான சொற்களில் நிறைவான பரந்த கருத்துக்களை உள்ளடக்கியுள்ளவை. எளிதில் பதியக் கூடியவை. மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்த பழமொழிகள் சிலவற்றை காணலாம்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

அடியாத மாடு படியாது

அகல உழுவதை விட ஆழ உழு

அடக்கம் ஆயிரம் பொன் பெறும்

அடாது செய்பவர் படாது படுவர்

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

அன்பான நண்பனை ஆபத்தில் அறி

அதிக ஆசை அதிக நட்டம்

அழுகிற பிள்ளை பால் குடிக்கும்

ஆசை வெட்கம் அறியாது

ஆயிரம் வந்தாலும் ஆத்திரம் ஆகாது

ஆற்றில் போட்டாலும் அளந்து போடு

ஆடிப்பட்டம் தேடி விதை

ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம்

ஆள் பாதி ஆடை பாதி

ஆசை அறுபது நாள்ளூ மோகம் முப்பது நாள்

ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்

இக்கரைக்கு அக்கரை பச்சை

இடறின காலே இடறும்

இல்லாது பிறவாது அள்ளாது குறையாது

ஈயிடம் நோயிடம்

ஈருடலும் ஓர் உயிரும் போல

ஈயார் தேட்டை தீயார் கொள்வர்

உப்பிட்டவரை உள்ளளவும் நினை

உண்ட களைப்பு தொண்டருக்கும் உண்டு

ஊமை ஊரைக் கெடுக்கும் பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும்

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்

ஊரார் உடைமைக்குப் பேயாய்ப் பறக்காதே

எட்டி பழுத்தென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன?

எந்த புற்றில் எந்த பாம்பு இருக்குமோ?

எய்தவன் இருக்க அம்பை நோவதேன்?

எறும்பு ஊர கல்லும் தேயும்

எரிகின்ற வீட்டில் பிடுங்கினது லாபம்

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது

ஏழைச்சொல் அம்பலம் ஏறாது

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமோ?

ஒருவர் பொறை இருவர் நட்பு

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்

காலம் போகும் வார்த்தை நிற்கும்

கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு

கிட்ட நெருங்க முட்டப் பகை

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்

குறையச் சொல்லி நிறைய அள

குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை

கெடுவான் கேடு நினைப்பான்

கோல் எடுத்தால் குரங்கும் ஆடும்

சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்

சிறுகக் கட்டி பெருக வாழ்

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்

சுவரோடாயினும் சொல்லியழு

சூடு கண்ட பூனை அடுப்படிக்குப் போகாது

செவிடன் காதில் ஊதின சங்கு

சொன்னதை சொல்லும் கிளிப்பிள்ளை

தம்பியுடையான் படைக்கு அஞ்சான்

தருமம் தலை காக்கும்

தன் நெஞ்சே தன்னை சுடும்

துணிந்தவனுக்கு துக்கம் இல்லை

தூர இருந்தால் சேர உறவு

நல்ல மாட்டிற்கு ஒரு சூடு

நாய் நக்கி சமுத்திரம் குறையுமோ?

நிறைகுடம் தழும்பாது

நிழலின் அருமை வெயிலில் தெரியும்

நீர் அடித்து நீர் விலகாது

நீருள்ள மட்டும் மீன் துள்ளும்

நொறுங்கத் தின்றால் நூறு வயது

நொண்டிக் குதிரைக்கு சறுக்கினது சாக்கு

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

பதறாத காரியம் சிதறாது

பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது

பாம்பின் கால் பாம்பறியும்

புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது

பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்

பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும்

பெண்ணென்றால் பேயும் இரங்கும்

பொய் சொன்ன வாய்க்குப் போஜனம் கிடையாது

மடியிலே கனம் இருந்தால் வழியிலே பயம்

மன நோய்க்கு மருந்தும் இல்லை

மின்னுவதெல்லாம் பொன்னல்ல

மீன் குஞ்சுக்கு நீச்சுப் பழக வேண்டுமா?

முதல் கோணல் முற்றும் கோணல்

முழுதும் நனைந்தவனுக்கு முக்காடு வேண்டுமா?

முட்டாளுக்கு கோவம் மூக்கின் மேலே

முன் கை நீண்டால் முழங்கை நீளும்

யானைப் பசிக்கு சோளப் பொரியா?

வணங்கின புல் தழைக்கும்

வளமுடன் வாழ இளமையில் கல்

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

வாயுள்ள பிள்ளை பிழைக்கும்

விளையும் பயிர் முளையிலே தெரியும்

விளையாட்டே வினையாகும்

விருந்தும் மருந்தும் மூன்று வேளை

வெள்ளம் வருமுன் அணைபோட வேண்டாமா?

வெளுத்ததெல்லாம் பாலா?

இவை போன்ற வாழ்விற்கு வழிகாட்டும் ஒப்பரிய பழமொழிகள் எண்ணற்றவை தமிழ் மொழியில் உள்ளன. அவற்றை நமது உரைநடையில் அமைத்து எழுதினால் கற்போர் மனதைக் கவரும்.

## உவமைகள்

ஒரு பொருளை இன்னொரு பொருளுடன் ஒப்பிட்டு அழகுபடுத்திக் கூறுவது உவமை எனப்படும். செய்யுளுக்கு உவமை அணி செய்வது போல, உரைநடைக்கும் அழகூட்டுவதுடன் பொருள் விளக்கமும் அளிப்பதாகும்.

‘அவர்கள் இருவரும் ஒரே மாதிரி தோற்றம் அளித்தார்கள்’ என்ற சொற்றொடரை, ‘அவர்கள் இருவரும் ஒரே அச்சில் வார்த்தாற் போல் காட்சியளித்தனர்’ என்று உவமை இணைத்து எழுதினால் சுருக்கமும், விளக்கமும் கிடைக்கிறது. உவமையும் உருவகமும் ஒன்றுக்கொன்று தொடர்பு உடையவை. உவமையின் வளர்ச்சியே உருவகம்.

மேற்கண்ட வாக்கியம் உருவகத் தொடராகும். இடம், பொருள், ஏவலுக்கு ஏற்ப, தக்க பொருத்தமான உவமைகளைத் தேர்வு செய்து இணைப்பது உரைநடையின் சிறப்பை உயர்த்தும்.

அத்தி பூத்தாற் போல

அங்காடி நாய் போல

அனலில் பட்ட நெய் போல

அவலை நினைத்து உரலை இடித்தார் போல

ஆற்றில் கரைத்த புளி போல

ஆழம் தெரியாமல் காலை விடுதல் போல

இஞ்சி தின்ற குரங்கு போல

இருதலைக் கொள்ளி எறும்பு போல

ஈருடலும் ஓருயிரும் போல

உடும்புப் பிடி போல

உள்ளங்கை நெல்லிக்கனி போல

ஊமை கண்ட கனவு போல

எட்டாப் பழத்திற்குக் கொட்டாவி விடுவது போல

ஏறவிட்டு ஏணி எடுப்பது போல

ஒரு நாள் கூத்திற்கு மீசை சிரைத்தாற் போல

கண்ணை கட்டி காட்டில் விட்டது போல

குருடும் செவிடும் கூத்துப் பார்த்தாற் போல

கூழில் விழுந்த ஈ போல

கொல்லன் தெருவில் ஊசி விற்பது போல

சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல

சாயம் போன சேலையைப் போல

சிறகு இழந்த பறவைப் போல

சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தாற் போல

சூல் கொண்ட மேகம் போல

செல்லரித்த ஓலை போல

சேற்றிலே மலர்ந்த செந்தாமரைப் போல

தாமரை இலைமேல் தண்ணீர் போல

தோன்றி மறையும் வானவில் போல

நத்தைக்குள் முத்து பிறந்தாற் போல

நாண் அறுந்த வில் போல

நீர்க்குள் பாசி போல

பள்ளத்தில் பாயும் வெள்ளம் போல

பாதிக் கிணறு தாண்டுவது போல

புயலில் சிக்கிய பூங்கொடி போல

மதம் கொண்ட யானை போல

மழையை நாடும் பயிர் போல

மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கினது போல

முடவன் கொம்பு தேனுக்கு ஆசைப்பட்டது போல

முழுப் பூசணியைச் சேற்றில் மறைத்தது போல

யானை வாயில் அகப்பட்ட கரும்பு போல

விளக்கை கண்ட விட்டில் பூச்சி போல

## கட்டுரை எழுதுதல்

**கட்டுரை – விளக்கம்**

சிந்தனைக் கூறுகளின் அல்லது எண்ணக் கூறுகளின் பெரிய அளவினைக் கட்டுரை என்று குறிப்பிடுதல் மரபு. ஒரு பொருளைக் குறித்து வரையறுத்து நூலெழுதும் முறையில் இல்லாமல், சிறிய அளவில் பொருட்செறிவுடன் விளக்கமாக யாரும் படிக்கக்கூடிய நடையில் அமைந்திருப்பதே கட்டுரையாகும்.

பல்வேறு பத்திகளைக் கொண்டு எண்ணங்களின் தொகுதியாக விளங்குவதையும் கட்டுரை என்றே குறிப்பிடுகிறோம். கட்டுரை என்பது அது கொண்டுள்ள உட்பொருள், அமைக்கப்பட்டுள்ள அமைப்புமுறை ஆகிய இரண்டினது அடிப்படையில் இயங்குகிறது என்பர்.

தொடர்கள் எவ்வாறு பத்தியின் சிந்தனைக் கூறுகளாக நின்று விளங்குகிறதோ அதுபோல கட்டுரையின் சிந்தனைக் கூறுகளாக பத்திகள் நின்று செயல்படும் என்று சுருக்கமாகக் குறிப்பிடலாம். மொழியறிவும், பொருளறிவும் இன்றிக் கட்டுரையினை எழுதுதல் இயலாது என்றே கூறவேண்டும்.

**கட்டுரை எழுதுவதன் நோக்கம்**

கட்டுரைகள் தகவல்களைத் தரும் அம்சமாகவும், பொழுதுபோக்கு அம்சமாகவும், படிப்பவர்களை ஏதாவது செய்யத் தூண்டும் அம்சம் உடையதாகவும், படிப்பவர்களைச் செய்யக் கூடாதனவற்றை செய்யாமல் இருக்க வைக்கும் இம்சம் உடையதாகவும், செய்வனவற்றை விட்டுவிடத் தூண்டும் அம்சம் உடையதாகவும் மேலும் இதுபோன்ற பல பயன்பாடுகளைத் தருகின்ற நிலையில் கட்டுரைகள் எழுதப்படுகின்றன. கீழே குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட காரணங்களுக்காகவும் கட்டுரைகள் எழுதப்படுகின்றன.

1. மொழித்திறன்கள் நான்கனுள் எழுதும் திறனை வளர்த்தல்
2. செய்திகளைத் தொகுத்து அறியச் செய்தல்
3. செய்திகளை வகைப்படுத்துதல்
4. செய்திகளை விரித்துரைத்தல்
5. சொல்லாட்சித் திறனை வளர்த்தல்
6. பத்திகளை முறையாகப் பிரித்து எழுதும் திறனை வளர்த்தல்
7. நயம்படவும் திறம்படவும் எழுதும் திறனை வளர்த்தல்
8. தனக்கென தனிநடையை அமைத்தல்
9. கால வரையறைக்குள் எழுதும் திறனை வளர்த்தல்
10. கட்டுக்கோப்பு திறனை வளர்த்தல்
11. கற்பனைத் திறனை வளர்த்தல்
12. ஆய்வு மனப்பாங்கை வளர்த்தல்
13. கோர்வையாக எழுதும் திறனை வளர்த்தல்
14. குறிப்புகள் எடுக்கும் திறனை வளர்த்தல்
15. வருணிக்கும் திறனை வளர்த்தல்

**கட்டுரையின் அமைப்பு**

கட்டுரையானது முன்னுரைப் பத்தி, கருத்துரைப் பத்தி அல்லது கட்டுரையின செய்திப் பத்தி, முடிவுரைப் பத்தி என்னும் மூன்றினது அடிப்படையில் அமைந்தே விளங்கும்.

**முன்னுரைப் பத்தி**

பத்திக்குத் தலைப்புத்தொடர் எவ்வாறு இன்றியமையாததோ அதுபோல கட்டுரைக்கு முன்னுரைப் பத்தி இன்றியமையாததாக விளங்குகிறது. எந்தவிதமான கருத்தினைப் பற்றிக் கட்டுரை எழுத வேண்டுமோ அந்தப் கருத்தைச் சார்ந்ததான செய்திகளையே முன்னுரைப் பத்தியில் எழுதவேண்டும். அதாவது எடுத்துக்கொண்ட கருத்து, எழுதுபவர் எடுத்துக்கொண்ட

கருத்தை அணுகும் முறை, எழுதுபவர் தனது கருத்தை காரணம் காட்டி விளக்கும் திறம், கருத்தை நிறுவும் முறை ஆகியவற்றின் சுருக்கமே முன்னுரைப் பத்தியில் இடம்பெறும்.

**கருத்துரைப் பத்தி**

முன்னுரைப் பத்தியை அடுத்து வருகின்ற பத்தியோ, பத்திகளோ கட்டுரையின் செய்தியை விளக்கும் பத்தியாக அல்லது பத்திகளாக விளங்கும் என்று குறிப்பிடுவது வழக்கம். கட்டுரையினது ஆய்வுக் கருத்திற்குப் பல வழிகளிலும் உறுதுணையாக இநதக் கருத்துரைப் பத்திகள் விளங்கித் திகழும் என்பதில் ஐயமில்லை. கட்டுரை எழுதுபவர் தன் கருத்தை நிறுவும் பாங்கு இந்தப் பகுதியில் நன்கு வெளிப்படுமாறு கருத்துக்களைச் செறிவாகவும் தெளிவாகவும் தரும் பகுதியே கருத்துரைப் பத்தி ஆகும்.

**முடிவுரைப் பத்தி**

கட்டுரையின் கருத்தை அல்லது கருத்துக்களைக் காரணம் காட்டி விளக்கி நிறுவும் முறையைச் சுருக்கமாக எடுத்துக் கூறுவதோடல்லாமல் கட்டுரையின் முடிவையும் கூறும் பகுதியாக விளங்குகிற பகுதி என இந்த முடிவுரைப் பத்தியைக் குறிப்பிடவேண்டும்.

**கட்டுரையின் வகைகள்**

கட்டுரைகளைச் சிந்தனைக் கட்டுரைகள் என்றும், உணர்ச்சிக் கட்டுரைகள் என்றும் இருவகையாகக் கூறுவர். கருத்துக்களைத் தருவதையே குறிக்கோளாகக் கொண்டு வரும் கட்டுரைகளைச் சிந்தனைக் கட்டுரைகள் என்றும், கருத்துக்களைத் தருவதைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தருவதையே குறிக்கோளாகக் கொண்டு வரும் கட்டுரைகளை உணர்ச்சிக் கட்டுரைகள் என்றும் குறிப்பிடுவர்.

விளக்கக் கட்டுரைகள், தத்துவ கட்டுரைகள், விவாத கட்டுரைகள், திறனாய்வுக் கட்டுரைகள், வரலாற்றுக் கட்டுரைகள், வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள் முதலான கட்டுரைகள் சிந்தனைக் கட்டுரைகளின் பாற்படும். எடுத்துரைத்து எழுதுதல், விரிவாகக் கூறி எழுதுதல், மனம்போன போக்கில் எழுதுதல், நகைத்திறம் தோன்றுமாறு எழுதுதல் முதலான கட்டுரைகள் உணர்ச்சிக் கட்டுரைகளின் பாற்படும்.

பொதுவாகக் கட்டுரைகளைச் சிந்தனைக் கட்டுரை, கதைக் கட்டுரை, வருணனைக் கட்டுரை, விளக்கக் கட்டுரை, ஆராய்ச்சிக் கட்டுரை, பத்திரிகைக் கட்டுரை எனப் பல்வேறு வகைப்படுத்திக் கூறுவர்.

**சிந்தனைக் கட்டுரை**

ஏதேனும் ஒரு கருத்தைப் பற்றிச் சிந்தையில் எழுகின்ற எண்ண ஓட்டங்களை ஒழுங்குபடுத்தி முறையாக அமைத்து எழுதும் கட்டுரையைச் சிந்தனைக் கட்டுரை என்கிறோம். இது பொதுவாக அன்பு போன்ற பண்புப் பொருள், கல்வி போன்ற சமூகப் பொருள், நாட்டுப்பற்றுப் போன்ற அரசியல் பொருள் இவற்றைப் பற்றி எழுதப்படும்.

**கதைக் கட்டுரை**

ஒரு நிகழ்ச்சியையோ பல நிகழ்ச்சிகளையோ கதைப் போக்கில் அமைத்துக் கட்டுரையாகத் தருவதைக் கதைக் கட்டுரை என்கிறோம். புராணக்கதை, வரலாற்றுக்கதை, வாழ்க்கை வரலாறு, சுற்றுலா நிகழ்ச்சி, உண்மைக்கதை, கற்பனைக் கதை இவையனைத்தும் இக்கட்டுரையின் பாற்படும்.

**வருணனைக் கட்டுரை**

ஒரு பொருளை அல்லது ஓர் இடத்தை அல்லது ஏதேனும் ஒன்றைக் குறித்து வருணனை செய்து எழுதினால் அதனை வருணனைக் கட்டுரை என்கிறோம். செடி, கொடி, மரவகை, உலோகப் பொருள், நாடு நகரங்கள், இயற்கை, செய்பொருள், குணநலன்கள் இவற்றைப் பற்றி எழுதுவது இவற்றுள் அடங்கும். சூரியனைப் பற்றியும் மதுரையைப் பற்றியும் இவ்வகைக் கட்டுரை எழுதலாம்.

**விளக்கக் கட்டுரை**

ஒரு பொருளைப் பற்றி விளக்கி எழுதும் கட்டுரையை விளக்கக் கட்டுரை என்று குறிப்பிடுவது வழக்கம். நிலையங்கள், தொழில்கள் விஞ்ஞானப் பொருள்கள், இலக்கியப் பொருள்கள் ஆகியவற்றைப் பற்றி எழுதப்படும் கட்டுரைகள் இந்த வகையைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. இவ்வகையில் மின்சாரத்தைப் பற்றியோ, பத்திரிகை தொழில் குறித்தோ, கம்பர் கவியழகைப் பற்றியோ எழுதலாம்.

**ஆராய்ச்சிக் கட்டுரை**

ஏதேனும் ஒரு பொருளைக் குறித்து ஆராய்ந்து எழுதும் கட்டுரையை ஆராய்ச்சிக் கட்டுரை என்கிறோம். இது பெரும்பாலும் இலக்கிய ஆராய்ச்சியைப் பற்றியதாகும்.

**பத்திரிகைக் கட்டுரை**

இது தனிவகையான கட்டுரை. பத்திரிகைகளுக்கென எழுதி அனுப்பப்படும் கட்டுரையைப் பத்திரிகைக் கட்டுரை என்கிறோம். அதாவது வார, மாத வெளியீடுகளிலும் ஞாயிறு மலர்களிலும், பொங்கல் மலர்களிலும் வெளியிடப்படுவதையே பத்திரிகைக் கட்டுரை என்கிறோம். இவற்றின் தலைப்புகள் கவர்ச்சியுள்ளவனவாக இருக்க வேண்டும். இவை குறைந்த கல்வியுள்ளவர்களும் படித்தறிந்து கொள்ளதக்க நடையில் விளக்கமாக, கூடுமானால் நகைச்சுவைப் பொருந்த அமைய வேண்டும். இக்கட்டுரைகளுக்கு நீண்ட முன்னுரை இல்லாதவாறு பொருளைத் தொடங்கி நன்முறையில் முடிப்பது இன்றியமையானதாகும்.

எந்த கட்டுரையிலும் பத்தியமைப்பு, நிறுத்தக்குறிகள் இவற்றில் கவனம் செலுத்த வேண்டும். சொற்பொழிவு செய்யாமல் சிறு வாக்கியங்களும் பெரு வாக்கியங்களும் கலந்து இலக்கிய சுவையுடன் எழுதினால் கட்டுரைகள் படிப்பதற்கு சுவையுடையனவாக இருக்கும்.

**கட்டுரையின் அளவு**

கட்டுரையின் அளவு எழுதுபவரின் சிந்தனை ஓட்டத்தைப் பொருத்தும் எடுத்துக்கொண்ட தலைப்பைப் பொறுத்தும் அமையும். ஒரு கட்டுரை குறைந்த அளவு நான்கு பத்திகளையும் அதிக அளவு பத்துப் பத்திகளையும் கொண்டதாக இருந்தால் போதுமானது.

**கட்டுரை எழுதும் முறை**

கட்டுரைக்குத் தேவையான கருத்துக்களைச் சேகரித்துக்கொண்டு பின்னர் எந்தக் கருத்தை முன்னுரைப் பத்தியில் வைப்பது என்பதை முடிவு செய்துகொண்டு பிறகு அதற்குத் துணை செய்யும் கருத்துக்களை முன்னுரைப் பத்தியின் அடுத்த பகுதியாகிய கருத்துரைப் பத்தியில் அமைத்து இறுதியில் முடிவை முடிவுரைப் பத்தியில் அமைத்து எழுதும் முறைதான் கட்டுரை எழுதும் முறையாகும்.

கட்டுரைக்குத் தேவையான கருத்துக்களைப் பற்றிச் சிந்தித்துத் திட்டமிடுதல், எழுதுதல் (திருந்தா படிவம்) திரும்ப எழுதுதல் (திருந்திய படிவம்) ஆகிய முறைகளைக் கையாண்டால் கட்டுரையை எளிமையாக எழுத வேண்டும்.

கட்டுரை எழுதுவதில் கட்டுரையை எவ்வாறு தொடங்குவது என்பதே சிக்கலாகத் தென்படலாம். எவற்றை எழுதுவது எவற்றை விட்டுவிடுவது என்பதெல்லாம் குழப்பத்தைத் தோற்றுவிக்கலாம். எனவே இவற்றை கருத்தில் கொள்ளாது சிந்தனையில் இருந்து வருகின்ற கருத்துக்களை அப்படியே ஒரு தாளில் எழுதிவிடுதல் வேண்டும். பிறகு அதைப்படித்து எவையெவை எங்கெங்கு வரவேண்டும் என்பதைத் தீர்மானித்து அதன்படி அமைக்க வேண்டும். ஏதாவது விடுபட்டுள்ளதா என ஆராய்ந்து அதனையும் எந்த இடத்தில் சேர்க்க வேண்டுமோ அந்த இடத்தில் சேர்க்க வேண்டும். மேற்கோள்களையும் எடுத்துக்காட்டுகளையும் தேவையான இடங்களில் தந்து தருக்க முறையின் அடிப்படையில் தொடர்களை நிரலாக அமைத்துக் கட்டுரையைச் செம்மைப்படுத்துதல் வேண்டும்.

கட்டுரைத் தலைப்பிற்கு ஏற்றவாறு முன்னுரையினை எழுதி அமைக்கவேண்டும். கட்டுரையின் தலைப்பிற்கு ஏற்ற பின்புலத்தைத் தருவதோடு தற்போதைய நிலையையும் விளக்க வேண்டும். கட்டுரை எழுதுபவர் தலைப்பைப் பகுத்து ஆராய்ந்த முறையையும் அவர்தம் மதிப்பீடுகளையும் எதிர்காலத்தில் என்ன ஆகும் என்பதையும் குறிப்பிட்டு எழுதுதல் வேண்டும். கட்டுரை எழுதுபவர் பரிந்துரைச் செய்யும் கருத்துக்களைத் தகுந்த ஆதாரத்துடன் குறிப்பிட்டு முறையாக எழுதுதல் வேண்டும். கட்டுரைக்கு ஒரு நல்ல முடிவைத் தர வேண்டும். இந்த முறையைப் பயன்படுத்தி திருந்தாப் படிவத்தைத் தயார் செய்யவேண்டும். பிறகு ஒரு முறைக்கு இருமுறைப் படித்துப் பார்த்து தவறுகள் இருப்பின் அதையும் திருத்தம் செய்து கட்டுரையை மேலும் செம்மைப்படுத்தித் திருந்திய படிவத்தைத் தயார் செய்ய வேண்டும். இந்த முறையைப் பின்பற்றிக் கட்டுரையை எழுதினால் அக்கட்டுரை முழுமையடைந்ததாகவும் செம்மையானதாகவும் அமைந்து விளங்கும்.

**கட்டுரை எழுதுவதற்கான சில குறிப்புகள்**

- குறிப்புச் சட்டகம் அமைத்துக் கட்டுரையை எழுத முயல வேண்டும்.
- கட்டுரை எழுதுவதற்குப் பொருத்தமான செய்திகளைத் தொகுத்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.
- தொகுத்த செய்திகளை முன்னுரை, பொருளுரை, முடிவுரை எனப் பல பிரிவுகளாக்கி விரிவாக எழுதுதல் வேண்டும்.
- கருத்து சிதையாதவாறு பத்திகளைப் பிரித்து எழுதுதல் வேண்டும்.
- நிறுத்தற் குறிகளை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.
- குறிப்பிட்ட அளவிற்குள் கட்டுரையை எழுதுதுல் வேண்டும்.

## சிறுகதை எழுதுதல்

சிறுகதை இலக்கியம் சிறந்த இலக்கியம். இவ்விலக்கியம் ஆங்கில கல்வியால் தமிழ்மொழிக்குக் கிடைத்த நன்மையாகும். உரைநடை வடிவத்தில் அமைந்து அன்றாட வாழ்வில் சமூக நிகழ்வின் அடிப்படையில் விறுவிறுப்புடன் படிப்போர் எதிர்பாராத முடிவைக் காட்டுகிற அமைப்பையே சிறுகதை என்கிறோம். சிறுகதையில் ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகள் இல்லாமல் இருப்பது நலம். ஆனால் இருநிகழ்வுகள் இருந்தால் அவற்றின் தொடர்பை நன்றாக அமைத்தல் வேண்டும். ஆழமான உணர்ச்சியை வெளிப்படுத்துவதிலும், சுருக்கமாகச் சொல்லி படிப்பவரின் மனதில் பதிய வைப்பதிலும் சிறுகதையானது கவிதையை அடுத்த நிலையில் உள்ளது எனக் குறிப்பிட வேண்டும்.

சிறுகதை உயிர்பெறுவது வெறும் நிகழ்ச்சிகளால் அல்ல. சிறுகதையை எழுதும் ஆசிரியர் பயன்படுத்தும் கற்பனைத் திறமும் அதனை வெளிப்படுத்தும் திறமுமே சிறுகதைக்கு உயிர் தரும்.

சிறுகதை சிறியதாக இருக்க வேண்டும். 800 முதல் 2000 சொற்களுக்குள் அமையும் சிறுகதை நன்றாக இருக்கும். வேகமுடையதாகவும் இருக்கும். அது சிறிது நீண்டுவிட்டால் தவறில்லை. ஆனால், நெடுங்கதை போல நீண்டு விடக்கூடாது. வீணான வருணனைகள் இல்லாமல் சொற் சிக்கனம் சிறுகதைக்கு மிகவும் வேண்டும். ஒரே ஒரு கருத்தை மையமாகக் கொண்டு அதைப் பின்னியே நிகழ்ச்சி, வருணனை ஆகியவை சிறுகதையில் அமைந்திருக்க வேண்டும். கதை மாந்தர்களின் பல குணங்களை விவரிக்காமல் ஏதாவது சிறப்பாகக் கருதுகின்ற ஒரு குணத்தையே கருவாக அமைத்துக் கதை நிகழுமாறு எழுத வேண்டும்.

எடுத்துக்காட்டாகக் குழந்தையின்மீது தாய்க்குள்ள அன்பினால் தன்னைத் தியாகம் செய்யும் பண்பைக் கருவாக அமைத்துச் சிறுகதை எழுதுவதைக் குறிப்பிடலாம். ஒருவரது வாழக்கையின் பல நிகழ்ச்சிகளைப் பெரும்பாலும் காதலுடன் பின்னிப் பிணைத்துத் திரையிட்டுக் கொண்டு விரிவாக நடந்து செல்லும் நெடுங்கதையாகிய நவீனத்தைப் போல இல்லாது, சிறுகதை கலைத்திறனுடன் சுருங்க இயங்கி வர வேண்டும்.

கலைநுட்பத்துடன் கதையமைப்பும் குணவமைப்பும் பிற்புல அமைப்பும் இயற்கை வருணனையும் சிறுகதையில் இருக்க வேண்டும். கதைக்கு வேண்டாத சொற்களையும் வருணனைகளையும் நீக்கிவிட வேண்டும்.

சிறுகதைக்குத் தொடக்கம், இடை, முடிவு ஆகிய பகுதிகள் உண்டு. ‘முன்னொரு காலத்தில்’ என்று தொடங்கும் பண்டைக்காலக் கதைத்தொடக்கம் போல இல்லாமல் தொடக்கமானது முதலிலேயே படிப்போர் உள்ளத்தைக் கொள்ளைக் கொள்ளுமாறு அமையவேண்டும். எந்தப் பொருள் சிறுகதையின் கருவாக இருக்கிறதோ அந்தப் பொருள் அமையுமாறு முதல் பத்தி இருக்கலாம். கதைத் தொடர்ச்சியை நிறுத்திப் படிப்பவர் உள்ளத்தில் ஆவலை தூண்டும் விதமாக அமைக்க வேண்டும். முடிவு கதைச்சுருக்கம் என தெரியாத முறையில் அமைய வேண்டும். சொல்லுகின்ற ஒவ்வொன்றும் மையக் கருவுக்கு ஒட்டியதாகவே இருக்க வேண்டும்.

கதை உயிருள்ளதாக அமையவேண்டும் என்பதைக் கதை எழுதுவோர் ஒருநாளும் மறத்தலாகாது. படைப்பின் ஒளி கதையில் வீச வேண்டும். சொல்லும் முறை, கருத்துக்களை பயன்படுத்தும் திறமை இவைகளினாலே தான் எழுதும் கதைச் சிறப்புறும்.

நல்ல தமிழில் கதையமைக்கும் திருவும் கற்பனை வன்மையும் குணம் அமைக்கும் முறையும் இயற்கையாக வருணிக்கும் இயல்பும் இனிய மொழிநடை எழுதும் திறனும் உள்ளவர்கள், சிறுகதை எழுதும் முயற்சியில் ஈடுபட்டால் கட்டாயம் வெற்றிப் பெறக்கூடும். புலமை வேறு, சிறுகதை எழுதும் திறமை வேறு. சிறுகதை எழுதத் தனித்திறமை வேண்டும்.

**சிறுகதை எழுதும் திறனை வளர்க்கத் தேவையான கருத்துகள்**

- சிறுகதைகளைப் படிக்கும் ஆர்வம் இருக்க வேண்டும். அதுவே எழுதுவதற்குரிய அடிப்படையாக எதிர்காலத்தில் அமையும்.
- பலவித சூழலில் காணும் நிகழ்வுகளை மனதில் பதியவைத்துச் சிறுகதையாக எழுத முனையலாம்.
- சமூகத்தின் வழி அறிந்தவற்றைத் தன்னைப் பாதித்த நிகழ்ச்சியாகக் கொண்டு அதை சிறுகதை வடிவில் எழுதும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். நாளடைவில் இப்பழக்கம் சிறுகதையைச் சிறப்பாக எழுத பலவகைகளில் உதவி புரியும்.
- சிறுகதை எழுத முனைபவர்கள் உரைநடை பற்றிய உரையாடல் பற்றிய மொழியறிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- பல்வேறு சிறுகதை எழுத்தாளர்களின் சிறுகதைகளைப் படிக்கும் பழக்கத்தைக் கொள்ளுதல் வேண்டும். இதனால் சிறுகதைக்கான கருவைத் தேர்ந்தெடுக்கும் முறை அக்கதையைப் படைத்துக்காட்ட உருவாக்கும் கதை மாந்தர்கள், அம்மாந்தர்களைக் கொண்டு கதையை நடத்திச் செல்லும் முறை, அக்கதைக்கு ஏற்பக் கையாளும் மொழிநடை, கதைப் பொருளுக்கு ஏற்ப அமைத்துக்கொள்ளும் கதையின் வடிவ அளவு, அக்கதையின் வாயிலாக உணர்த்தும் வாழ்வியல் நெறிகள் முதலானவற்றை அறிந்து

அவற்றைத் தம் சிறுகதைப் படைப்புகளில் பயன்படுத்த ஏதுவாக அமையும். பழகப் பழக நாளடைவில் தமக்கென ஒரு நடையைப் பின்பற்றிச் சிறுகதையை எழுத முனையலாம்.

- ஊக்குவித்தல் போன்ற பொருத்தமான செயல்பாடுகளைக் கொண்டு சிறுகதை எழுதும் திறனை உருவாக்கலாம்.
- தலைசிறந்த சிறுகதை எழுத்தாளர்களின் படைப்புகளை அறிமுகப்படுத்துவதன் வாயிலாகச் சிறுகதை எழுதும் திறனை வளர்க்கலாம்.
- நூலகத்தில் உள்ள சிறுகதைகளைப் படித்துக் குறிப்பெடுத்து அதன் வழி சிறுகதையின் அமைப்பினைப் புரிய வைத்து சிறுகதை எழுதும் திறனை வளர்க்கலாம்.
- சிறுகதைகள் பல எழுதிப் பழகப் பழக அப்பழக்கம் வளர்ந்து சிறுகதைகளைப் படைக்கும் ஆற்றல் பெறலாம்.

**சிறுகதை எழுதும் திறனை வளர்க்கத் தேவையான பயிற்சி**

- ஒரு நிகழச்சியைக் கொடுத்து அதைச் சிறுகதையாக எழுதச் செய்யலாம்.
- முன்னரே எழுதப்பட்ட ஒரு சிறுகதையைக் கொடுத்து அதைப் படித்துவிட்டு அதைப் போலவே அவரவர்களின் சொந்த நடையில் அக்கதை அமையுமாறு எழுதச் சொல்லலாம்.
- முன்பாதி அல்லது பின்பாதிக் கதையைக் கொடுத்துவிட்டு விடுபட்ட பாதியை எழுதச் சொல்லலாம்.
- ஏதேனும் ஒரு தலைப்பைக் கொடுத்துவிட்டு அதன் அடிப்படையில் சிறுகதை எழுதச் சொல்லலாம்.
- இதழ்களில் இடம்பெறும் சிறுகதைகளைப் படித்துக்காட்டி அக்கதையின் கருத்தை மையமாகக் கொண்டு சிறுகதையை எழுதத் தூண்டலாம்.

## வாழ்க்கை வரலாறு எழுதுதல்

'மானிடரைப் பற்றி அறிதலே மாண்பு மிக்க கல்வி' என்றார் ஆங்கில கவிஞர் போப். கல்வியில் வாழ்க்கை வரலாறு கற்பது முதன்மையான இடம்பெறுதல் வேண்டும் என்பதே போப் என்பாரின் கருத்து எனலாம். உண்மையில் கற்பனையின்றி நல்ல முறையில் இயற்றப்பட்ட வாழ்க்கை வரலாறு கற்பார்க்கு உற்றுழி உதவும் ஊன்றுகோலாக மட்டும் இருப்பதல்லாது, வேண்டும்பொழுது வழிகாட்டும் கலங்கரை விளக்காகவும் இயங்கும் என்பதில் ஐயமில்லை. நாட்டு முன்னேற்றத்துக்கு நல்ல உண்மையான வாழ்க்கை வரலாறுகள் நிரம்ப வெளிவருதல் வேண்டும். 'முற்பிறப்பில் செய்த நற்றவப் பயனால் இப்பிறப்பில் ஓதாது, கற்பன எல்லாம் முற்றும் கற்றார்' என்று கூறும் வரலாறுகள் நாட்டுக்கு நன்மை செய்யா என்று கூற வேண்டியதில்லை. எப்படி ஒருவர் கல்வி கற்றார், எவ்வழி ஒருவர் முயன்று கவிஞரானார், எவ்வாறு ஒருவர் முயற்சி செய்து செல்வரானார், எவ்வகையில் ஒருவர் நாட்டுக்கு தொண்டு செய்தார், ஒருவர் எத்தகைய

பண்புகள் கொண்டிருந்தார் என்பன போன்ற குறிப்புகள் வாழ்க்கை வரலாற்றில் காணப்படுமாயின், அவை கற்பார்க்குக் கொள்ளத் தக்கனவாகவோ தள்ளத் தக்கனவாகவோ இருத்தல் கூடும்.

தமிழ் மொழியில் வந்துள்ள வாழ்க்கை வரலாறுகள் பெரும்பாலானவை உண்மைத் தன்மையற்றனவாக உள்ளன. நம் முன்னோர்கள் தங்கள் வரலாறுகளைப் பின்னோர் அறிய விரும்பாதிருந்ததே, உண்மை வரலாறுகள் நாட்டில் தோன்றாமைக்கு முதன்மையான காரணமாகும். நாயன்மார்கள் தாங்கள் பாடிய நாந்திச் செய்யுள்களில் தங்கள் பெயர்களைக் குறிப்பிட்டதனாலே இன்று அவர்கள் பாடிய பாடல்கள் இவை இவை என அறிகிறோம். ‘நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்’, ‘கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான் கருத்துடை ஞானசம்பந்தன்’ என்பவை போன்ற குறிப்புகள் நாந்திச் செய்யுள் என்னும் திருநாமப் பாக்களில் இருக்கக் காணலாம். இத்தகைய குறிப்புகளைக் கொண்டு நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடிய பாக்களை அறியலாம்.

கி.பி பத்தாம் நூற்றாண்டில் நம்பியாண்டார் நம்பி சைவ சமய அடிகளாரின் வாழ்க்கை குறிப்புகளை இயற்றினார். இக்காலத்தில் தோன்றிய பாண்டிய மண்டல சதகம், சோழ மண்டல சதகம் ஆகியவை மூல ஆசிரியர்களின் வரலாற்றுக் குறிப்புகளை மிக மிக சுருக்கமான செய்யுள்களில் தெரிவித்துள்ளன. கி.பி 1650-க்கும் 1728-க்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்த ஆத்மநாத தேசிகர் என்பவர் சோழ மண்டல சதகத்தை இயற்றினார். கி.பி 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த படிக்காசு புலவர் தொண்டைமண்டல சதகத்தைப் பாடினார். புடிக்காசு புலவருக்கு பிறபட்டவர் பாண்டிய மண்டல சதகத்தை இயற்றினார். இவர் மதுரையில் வாழ்ந்த வீரபூதி என்பவரின மைந்தரான ஐயன் பெருமாள் பிள்ளை ஆவர். கி.பி 17- ஆம் நூற்றாண்டுக்கு பிற்பட்டவர்.

கொங்கு மண்டலச் சதகத்தை இயற்றினார். இவரது பெயர் கார்மேகக் கவிஞர். கம்பரை ஆதரித்த சடையப்ப வள்ளலை சோழமண்டலச் சதக ஆசிரியர் சோழ நாட்டினர் என்றும், பாண்டிய மண்டல சதக ஆசிரியர் பாண்டியந ாட்டினர் என்றும் ஊர்பற்றினால் தத்தம் நாட்டினர் என்று குறிப்பிட்டுள்ளார்கள். உண்மையில் சடையப்ப வள்ளல் சோழ நாடடினராவார். இத்தகைய முறையில் இந்நூல்கள் வாழ்க்கை குறிப்புகளை கூறலாயின. உண்மையை உணர்வதற்கு இவை பெரிதும் பயன்படுவதாக இல்லை.

கி.பி 1891 இல் தோன்றிய ‘விநோதரச மஞ்சரி’ என்ற நூலானது உண்மை வாழ்க்கை வரலாற்றைக் கூறாமல் கட்டு கதைகளாகவே கம்பர், ஔவையார் வரலாறுகளை வெளியிட்டது. உண்மையான வாழ்க்கை வரலாறுகள் தமிழில் இந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வந்த ஒரு சிலவே தவிர வேறு இல்லை. டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களே முதன்முதலாக தம் ஆசிரியரான மீனாட்சி சுந்தரம்பிள்ளை வாழ்க்கை வரலாற்றை இரண்டு பாகங்களாக வெளியிட்டார். இஃது ஒன்றே தமிழில் நன்முறையில் வெளிவந்த ஒருசில வாழ்க்கை வரலாறுகளில் தலைசிறந்தது. தமிழில் உண்மையான வாழ்க்கை வரலாற்றுக்கு அவரே தந்தை எனலாம். அன்மையில் வாழ்ந்து மறைந்த புலவர் பெருமக்களையோ அறிஞர் பெருமக்களையோ தெரிந்தவர்கள் அப் பெருமக்களுடைய உண்மையான வாழ்க்கை வரலாறுகளை நூல்களாக

வெளியிட்டுத் தமிழகத்துக்கு தொண்டு புரியலாம். அதற்கு இங்குக் கூறப்படும் குறிப்புகள் ஓரளவு உதவிச் செய்யும்.

வரலாறு வேறு, வாழ்க்கை வரலாறு வேறு. வரலாறு நாட்டில் நடந்த நிகழ்ச்சிகளைக் கூறும். வாழ்க்கை வரலாறு தனிப்பட்ட ஒருவரின் வாழ்க்கையை விவரிக்கும். வாழ்க்கை வரலாற்றில் நாம் எதிர்பார்ப்பது ஒருவரது உண்மை வாழ்க்கையாகும். வாழ்க்கை வரலாறு என்பது ஒருவரது உண்மை வாழ்க்கைப் படமாக அமைய வேண்டும். உண்மைக்கு மாறுபட்ட செய்திகள் இதில் இடம்பெறுமாயின், இது கற்பனைக் கதையாகவே மாறிவிடும். வாழ்க்கை வரலாற்றில் விரும்பினால் கூட்டிக் கூறுவது கூடாது. வெறுப்பினால் உள்ளதை மறைத்து விடவும் கூடாது. ஒருவர் சமுதாயத்தில் எவ்வாறு வாழ்ந்து வந்தார் என்றும், அவர் எவ்வாறு அன்நாட வாழ்வில் நடந்து கொண்டார் என்றும், அவருடைய விருப்பு வெறுப்புகள் எவை என்றும், அவர் வாழ்க்கை போராட்டத்தில் எம்முறையைக் கொண்டு வெற்றி பெற்றார் என்றும், எக்காரணத்தால் தோல்வி ஏற்பட்டது என்றும், எப்படி பெருநூலை இயற்றினார் அல்லது அரிய தொண்டாற்றினார் என்றும் தெரிந்து கொள்ளவே வாழ்க்கை வரலாற்றைப் படிக்கிறோம்.

நம் நாட்டில் உண்மை வாழ்க்கை வரலாறு எழுதுவது மிகமிகக் கடினம். உண்மையைக் கூறினால் குறை கூறிவிட்டதாகக் கருதுவர். நம் மனம் இன்னும் பண்படாத காரணத்தினால் உண்மை வரலாறுகள் வெளிவருவது இந்த நூற்றாண்டில் எதிர்பார்க்க கூடியதாக இல்லை. அடுத்த நூற்றாண்டில் உண்மை வரலாறு வரலாம் போலும். என்றாலும் ஒரு சிலரது உண்மை வாழ்க்கை வரலாற்றை எழுத முற்பட வேண்டும்.

இப்பொழுது வாழ்க்கை வரலாறு எழுதுகிறவர்கள் முற்காலத்தில் எழுதியது போன்று ஒருவர் வாழ்க்கையில் நடந்த எல்லா நிகழ்ச்சிகளையும் விடாது தொடர்ச்சியாக எழுதாமல் வாழ்க்கை வரலாற்றுக்குரியவர் வாழ்ந்த கால நிலையையும் அக்காலம் அவரை எவ்வாறு உருவாக்கியது என்பதையும், அவருடைய இளமை, முதுமை மனநிலைகள் எங்ஙனம் இருந்தன என்பதையும், எப்படியெல்லாம் அவர் முயன்று நூலை எழுதி எத்தனை முறை திருத்தி திருத்தி வெளியிட்டார் என்பதையும் குறிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளார்கள்.

டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரவர்கள் மீனாட்சி சுந்தரம்பிள்ளை வரலாற்றில் ஆசிரியர் தமக்கு பாடம் கற்பித்த முறைகளையும், புராணங்கள் இயற்றிய வழிகளையும், எண்ணெயைக் காய்ச்சி தலை முழுகிய பழக்கத்தையும் இவை போன்ற பலவற்றையும் எழுதியுள்ளார்கள்.

வாழ்க்கை வரலாறு எழுதுகிறவர்கள், எவரைக் குறித்து எழுதவேண்டுமோ அவரை நேரில் சந்தித்துப் பார்த்து பல நாட்கள் அவருடன் பழகியவராயும், அவரைப் பற்றி நன்கு அறிந்தவராயும் இருக்க வேண்டும். அவரைப் பற்றி மிகைப்படுத்தியோ குறைபடுத்தியோ கூறுதல் கூடாது. அவரைக் குறித்து வெளியிட தகாதவற்றை வெளியிடுதலும் ஆகாது.

நேரில் பார்த்து எழுதுவது இயலுமா? இயலாது. இறந்துவிட்டவர்களின் வாழ்க்கை வரலாறுகளை எழுத வேண்டுமெனில் என்ன செய்வது? இறந்தவர் வாழ்க்கை வரலாற்றை எழுதுவோர் அவரைப் பற்றி அறிந்தவர்களிடம் உண்மை செய்திகளைக் கேட்டு சேகரிக்க வேண்டும். அவர் எழுதிய கடிதங்கள் கிடைக்குமானால் அவற்றைத் தேடிப்பிடித்து அவற்றிலிருந்து சில அரிய செய்திகளைத் திரட்ட வேண்டும். கால நிகழ்ச்சியை மாற்றாமல்

பிறந்த காலநிலை, உருவாகிய முறை, இளமைப்பருவம், செய்த வேலை, அன்றைய தொண்டுகள், வாழ்க்கையின் மாலைக்கால வாழ்வு, தோற்றம், நற்பண்புகள், தீய பண்புகள் இவற்றைக் கற்பனைக் கலவாது படிப்பார் உள்ளம் கவரும் முறையில் எழுத வேண்டும்.

'என் வரலாறு' என்பது வாழ்க்கை வரலாற்று வகையைச் சேர்ந்தது. வாழ்க்கை வரலாறு பிறரால் எழுதப்படுவது. என் வரலாறு என்பது எழுதுகின்றவரே தம் வரலாற்றை கூறுவது. நேர்மை உள்ளம் படைத்தவரே 'என் வரலாறு' எழுதுதல் கூடும். உண்மையைக் கூற வெட்கப்படாத அறிஞர் பெருமக்களே என் வரலாறுகளை இயற்ற வல்லவர்கள். வாழ்க்கை வரலாற்றை விட என் வரலாறு எழுதுவது மிகமிக கடினமானது. தமிழ் மொழியில் டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரவர்களும், திரு.வி.கல்யாண சுந்தரனாரும் என் வரலாறு எழுதியுள்ளனர். இவர்கள் இருவரும் தங்கள் வறுமை நிலைகளையும், கற்ற முறைகளையும் இவைபோன்ற பலவற்றையும் நேர்மையாக எழுதியிருக்கிறார்கள். மேலை நாட்டு மொழிகளில் இத்தகைய நூல்கள் பலபல உள்ளன.

'வாழ்க்கை வரலாறு' எழுதுபவர்களும் 'என் வரலாறு' இயற்றுபவர்களும் நல்ல தமிழில் எளிய நடையில் எழுத வேண்டும் என்பதை என்றும் மறத்தலாகாது. நல்ல உணடமை வரலாறு வாழ்க்கையை உயர்த்தும் நல்லமுதம். உண்மை வாழ்க்கை வரலாறுகள் தண்டமிழ் உலகில் உலவ நாம் முயல வேண்டும்.

## நகைச்சுவை இலக்கியம் எழுதுதல்

வாழ்க்கை என்பது வேலை, ஓய்வு, இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி, அலைச்சல், அமைதி இவற்றால் ஆனது. துன்பமே இவ்வாழ்வு என்னும் துன்ப நோக்கு வாழ்க்கையில் ஊக்கமளிக்காது. வாழ்க்கை இன்பமானது என்று எண்ணும் எண்ணமே இவ்வுலக வாழ்வை இன்பமாக்கவல்லது. நல்ல வகையில் உண்டாகும் இன்பமே வாழ்க்கைக்குத் தேவையானது. எனவே மக்கள் எழுத்திலும், பேச்சிலும் இன்பம் நாடுவது இயல்பு. நாலடியார் என்னும் நூலில் உள்ள கீழ்வரும் பாடல்,

"உளநாள் சிலவால் உயிர்க்கு ஏமம் இன்றால்

பலர் மன்னும் தூற்றும் பழியால் - பலருள்ளும்

கண்டாரோடு எல்லாம் நகாஅது எவன் ஒருவன்

தண்டித் தனிப்பகை கோள்?"

என்கிறது. இப்பாடல், 'பலருள்ளும் கண்டாரோடு பகைக் கொள்ளாது மகிழ்ந்து சிரித்துப் பேசி வாழ்' என்று நமக்கு அறிவுறத்துகிறது. ஆதலால் நம் வாழ்க்கையில் மகிழ்ச்சி ததும்ப வாழும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்பது விளங்கும். எனவே, நாளிதழ்களும், வார, மாத வெளியீடுகளும் கற்பவர்களுக்கும் நகைச்சுவை அளிக்கத்தக்க கட்டுரைகளையும் கதைகளையும் வெளியிடுகின்றன.

நகைச்சுவைபட எழுதுவது எளிதன்று. ‘பட’ என்னும் சொல்லுக்கு ‘உண்டாகுமாறு’ என்றும், ‘இல்லாது போகுமாறு’ என்றும் இரு பொருளுண்டு. நகைச்சுவை தோன்றச் சிலர் எழுதுவர். பலர் நகைச்சுவை பட்டுபோகுமாறு எழுதுவர். நகைச்சுவையுற எழுதுவது ஒரு சிலர்க்கே இயற்கையாக அமைந்த திருவாகும். அந்த திரு அமையப் பெற்றவர் நகைச்சுவையுற கட்டுரைகளையும், கதைகளையும் எழுத நல்ல தமிழில் பயிற்சி பெறலாம்.

தொல்காப்பியர் தமது இலக்கண நூலில் எட்டுவகை மெய்ப்பாடுகளுள் நகுதலை ஒன்றாகக் கூறியுள்ளார். பொருள் பற்றி நகைச்சுவை நான்காகும். தொல்காப்பியம்,

“எள்ளல், இளமை, பேதமை, மடம் என்று

உள்ளப்பட்ட நகை நான்கு என்ப”

என்று கூறுகிறது. எள்ளுதலும் இளமையும் பேதமையும் மடனும் எனக் கருதப்பட்ட நகை நான்கு என்பது இந்நூற்பாவின் பொருள். இவை நான்கும் ஒன்று இரண்டாகி எட்டு ஆதலும் உடைய. எள்ளல் என்பது இகழ்ச்சி. இது தான் பிறரை எள்ளி நகுதலும் பிறரால் எள்ளப்பட்ட வழித் தான் நகுதலும் என இரண்டாகும். இளமை என்பது தான் இளமையாற் பிறரை நகுதலும், பிறர் இளமையைக் கண்டு தான் நகுதலும் என இரண்டாகும். பேதமை என்பது அறிவின்மை. இது தான் பேதமையால் நகுதலும் பிறர் பேதமையால் நகுதலும் என இரண்டாகும். முடமை என்பது பெரும்பான்மையும் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை. இதுவும் தன் மடமையால் நகுதலும், பிறர் மடமையால் நகுதலும் என இரண்டாகும். ‘எள்ளல்’ என்பது நகைமொழி அல்லது கேலி. இ∴து இழித்தலின் வேறுபட்ட நகைமொழி. பழிப்பில் பரிகாசம்ளூ விளையாட்டு ஏச்சு பேச்சு. இளமை என்பது பிள்ளைத் தன்மைளூ பேதமை என்பது அறிவின்மைளூ மடம் என்பது ஐயுறாது எளிதில் நம்பும் இயல்பு.

சங்கம் மருவிய நூல்களிலும், இடைக்கால நூல்களிலும், பிற்கால நூல்களிலும் புலவர்கள் நகைச்சுவை வெளிப்பட பல பாடல்களை இயற்றியுள்ளனர். பல பொருள் தரும் சிலேடையணியாலும் சில பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன.

கி.பி.2-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருவள்ளுவர்,

“தேவ ரனையர் கயவர் அவருந்தாம்

மேவன செய்தொழுக லான்”

என்னும் குறட்பாவில் கயவரை (கீழ்மக்கள்) புகழ்வது போல நகைச்சுவையுற இகழ்வதைக் காணலாம். வஞசபுகழ்ச்சியணியால் இங்கு நகைச்சுவைத் தோன்றுகிறது. ‘காசாலேசா’ என்னும் தொடருக்குக் ‘காசா, லேசா’ என்றும் ‘காசாலே சா’ என்றும் பொருள் கொள்ளலாம். இப்படி இருபொருள் வரச்சொல்லி நகைச்சுவைத் தோன்றுமாறு செய்வதுண்டு. புத்தியில்லாதவன் என்னும் தொடரை புத்தி இல்லாதவன் என்று பிரித்து அறிவில்லாதவன் எனவும் புத்தியில் ஆதவன் என்றும் பிரித்து அறிவில் சூரியன் போன்றவன் எனவும் பொருள்வருமாறு செய்து நகைச்சுவை பிறப்பிக்கலாம்.

பிற்கால புலவர்கள் கருத்தினாலும் நகைச்சுவைத் தோன்ற பாடியது உண்டு. காளமேகப்புலவர் விகட ராமன் குதிரையைக் குறித்து ,

“முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டுஇழுக்கப்

பின்னே இருந்து இரண்டுபேர் தள்ள – எந்நேரம்

வேதம்போம் வாயான் விகடராமன் குதிரை

மாதம்போம் காத வழி”

என்று ஒரு வெண்பாவை நகைச்சுவை மலிய இயற்றினார். வேதநாயகம் பிள்ளையும் பிற்காலத்தில் பல நகைச்சுவைப் பாக்களைப் பாடியுள்ளார். அவற்றுள் ஒரு செய்யுள்,

“இட்டமுடன் முதலியார் வாங்கிவந்த காளைதினம்

இருபோர் தின்னும்

சட்டமுடன் கொள்ளுண்ணும் புல்லுண்ணும் அதைப்பண்டி

தன்னிற் பூட்டக்

கிட்டவரின் முட்டவரும் தொட்டவர்மே லேசாயும்

கீழே விழும்

எட்டாள்கள் தடிகொண்டு தாக்கிடினும் தூக்கிடினும்

எழுந்தி ராதே”

தமக்காக ஒருவர் வாங்கிவந்த காளை மாட்டைப் பற்றி, வேதநாயகம் பிள்ளை பாடியது இது. இப்படி கி.பி.19-ஆம் நூற்றாண்டு வரையில் பாட்டிலே பெரும்பாலும் புலவர்கள் நகைச்சுவை அமையப் பாடினார்கள்.

கி.பி.18-ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் உரைநடையில் பரமார்த்த குரு கதையை நகைச்சுவை அமைய எழுதி வெளியிட்டார். இதில் குதிரை முட்டை வாங்கியது முதலிய கதைகள் உண்டு. 19-ஆம் நூற்றாண்டில் வேதநாயகம் பிள்ளை, வீராசாமிச் செட்டியார் ஆகியவர்கள் நகைச்சுவைக் கதைகள் இயற்றினார்கள். தாண்டவராய முதலியாரும் இத்தகைய கதைகள் எழுதினார். வீராசாமிச் செட்டியார் இயற்றிய விநோத ரச மஞ்சரி இலக்கியத்துக்குச் செய்த தீமை மிகப்பெரியது. அவர் வேடிக்கையாய் எழுதிய கம்பர், ஔவையார் கதைகளை மக்கள் உண்மைக் கதைகளாகவே நம்பிவிட்டார்கள்.

20-ஆம் நூற்றாண்டில் தான் சிறந்த நகைச்சுவைக் கட்டுரைகள் தோன்றலாயின. வார வெளியீடுகள் இத்துறையில் பெருந்தொண்டு புரிந்து வருகின்றன. இத்துறையை நாம் புறக்கணிக்கக் கூடாது. நல்ல தமிழில் நகைச்சுவைக் கட்டுரைகள் வாராமையால் அறிஞர்கள் வந்தவற்றையும் உயர்வாகக் கருதவில்லை. இன்று சிலர் நகைச்சுவைதட ததும்ப எழுதி வருகிறார்கள். ‘நாடோடி’ இத்துறையில் நல்ல தொண்டாற்றியுள்ளார் எனலாம்.

நகைச்சுவை எழுத்தாளர்களிடத்தில் காணப்படும் குறை, நல்ல தமிழில் எழுதாமையே ஆகும். பேச்சு மொழியிலேயே எழுதினால்தான் நகைச்சுவை தோன்றும் என்று மட்டும் எண்ண வேண்டுவதில்லை. நல்ல தமிழில் பிழையற எழுதுவதாலும் நகைச்சுவை உண்டாக்கலாம்.

பெரும்பாலும் படித்த தமிழர்கள் மிகுதியாக சிரிக்க மாட்டார்கள். அருமையாகத்தான் சிரிப்பார்கள். இவர்கள் சிரிக்க வெட்கப்படுகிறார்கள். இவர்களுக்கு நல்ல நகைச்சுவை இலக்கியங்கள் வாழ்க்கையில் இன்பமூட்ட இன்றியமையாதவை. இதனால் நாளிதழ்களும், வார மாத வெளியீடுகளும் நகைச்சுவைக் கட்டுரைகளையும் கதைகளையும் வெளியிட்டு வருகின்றன. பேசுவதிலும் இடையிடையே நகைச்சுவை நல்ல முறையில் தோன்றுவது நல்லது.

நகைச்சுவை அமைய எழுத விரும்புகிறவர்கள் சமுதாயத்தைக் கூர்ந்து நோக்கிக் கண்மூடிப் பழக்கங்களை நன்றாகக் கண்டு, அவை மண்மூடிப் போகுமாறு செய்யும் முறையில், குறும்புப்படம் வரைபவர்களைப் போன்று, கட்டுரைகளோ கதைகளோ தீட்ட வேண்டும். நகைச்சுவை உண்டாக்க, உள்ளதை மிகைப்படுத்தலாகாது. இழிவு படுத்தலும் கூடாது. சீர்த்திருத்தும் நோக்கமுடையதாதல் வேண்டும்.

நகைச்சுவை, அறிவு நிலைக்கு ஏற்றவாறு வேறுபட வேண்டும். பெண்களுக்கு எழுதுவது ஒருவகைளூ மாணவர்களுக்கு எழுதுவது ஒருவகைளூ கிராம மக்களுக்கு எழுதுவது ஒருவகைளூ அறிஞர்களுக்கு எழுதுவது ஒருவகை. நடையுடைகளைப் பற்றி நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதலாம். காக்கை பிடித்து ஏய்த்து வாழ்தலைப் பற்றி நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதலாம். பாட்டுப் பாடி ஒத்தூதுவாரைக் குறித்தும் நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதலாம்.

இப்படி எழுதும் பொழுது சொற்றொடர்களாலும், புகழ்வதுபோல இகழும் முறையாலும், வேடிக்கைப் பேச்சினாலும் நகைச்சுவை தோன்றச் செய்யலாம். எதை எழுதினாலும் பிழையற நல்ல தமிழில் எழுத மறத்தலாகாது.

## நாடகம் எழுதுதல்

### நாடகம் - விளக்கம்

நாடகம் என்பது ஒரு கலை அல்லது பலவகைக் கலைகளின் கூட்டு சேர்க்கையாகும். நாட்டு ஸ அகம் ஸ்ரீ நாடகம். அதாவது நாட்டு மக்களின் அகத்தைப் பிரதிபலிக்கும் கலை. குதை ஒன்றினை அரங்கிலே நடிப்பு, ஒப்பனை, இசை, ஓவியம், அரங்கமைப்பு, இலக்கியம், ஒலி, ஒளி முதலான கலைகளின் ஒன்றிணைப்பால் படைத்துக் காட்டுவதை நாடகம் எனலாம். நாடகம் மிகப் பழமையான இலக்கிய வடிவம்.

**நாடகத்தின் தேவை**

நாடகம் தலைசிறந்த நற்கலை. கற்றாரையும் கல்லாதாரையும் நாடகம் மகிழ்விப்பதோடு அவர்களுக்கு அவர்கள் அறியாமலேயே அறிவை ஊட்டவல்லதாகவும் பொழுது போக்குக்குரியதாகவும் இலங்கும் நல்ல கலை. நாட்டிலேயே மக்களிடத்தில் புத்துணர்ச்சி மலரவும், சீர்திருத்தக் கருத்துகள் பரவவும், சமுதாயத்தில் காணப்படும் கண்மூடி வழக்கங்கள் மண்மூடிப் போகவும் நாடகம் மிகமிகப் பயன்படும். ஆதலால், தமிழ்மொழியில் நல்ல முறையில் அமைந்த நாடகங்கள் பல தோன்ற வேண்டும். நாடக ஆசிரியர்கள் சிந்தனைச் செய்து நல்ல கருத்துகள் பொதிந்த நாடகங்களை உருவாக்க வேண்டும்.

தமிழ் மொழியில் இன்று மனோன்மணீயம் என்னும் நடிப்பதற்கு முடியாத ஆனால், படித்து இன்புறுதற்குரிய தலைசிறந்த செய்யுள் முறையில் அமைந்த நாடகம் ஒன்றே உண்டு. பழைய முறையில் அமைந்த நாடகங்கள் இனிப் பயன்படாது. புதுவகையான நாடகங்கள் தமிழில் தோன்ற வேண்டும்.

நாடகம் என்னும் சொல்லுக்குத் தமிழ் நூல்களில் கூத்து என்றும், இன்பம் என்றும், புனைந்துரை என்றும் பொருள் காண்கிறோம். சிலப்பதிகாரத்தில் கூறப்படுவது நாட்டியக்கூத்து. நாடக நன்னூல் என்பது நடனத்தைப் பற்றிய நூலையே குறிப்பிடுகிறது. திருக்கோவையாரில் கண்டவர் மகிழ்தல் என்னும் துறையில் அமைந்த பாட்டில் ''நண்பனைத் தண்நறவு உண் அளி போன்று ஒளிர் நாடகமே'' என்னும் அடி வருகிறது. 'தலைவனும் தலைவியும் செல்வது தேன் உண்ணும் வண்டு போன்று இன்பம் பயக்கிறது' என்பது அவ்வடியின் பொருளாகும். திருக்கோவையாருக்கு உரை எழுதிய பேராசிரியர் 'கண்டார்க்கு இன்பம் பயத்தலின் நாடகம் என்றார்' என நாடகம் என்னும் சொல்லுக்கு இன்பம் என்னும் பொருள் உரைத்தார். தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலில்,

''நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

பாடல் சான்ற புலன்நெறி வழக்கம்''

என்னும் நூற்பா உள்ளது. அதில் வரும் 'நாடக வழக்கு' என்னும் தொடருக்குப் புனைந்துரை வழக்கு என நச்சினார்க்கினியர் உரை கூறியுள்ளார்.

ஆனால், கி.பி.9- ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த மாணிக்கவாசகர், ''நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து'' என்று திருவாசகத்தில் பாடியிருக்கிறார். இதை நோக்கும் போது நாடகம் என்னும் சொல் பிற்காலத்தில் 'நடிப்புக்குரியது' என்னும் பொருளில் வழங்கி வந்துள்ளதை அறியலாம்.

நாடக நூல்கள் அக்காலத்தில் இருந்தனவாகத் தெரியவில்லை. சிலப்பதிகாரத்தில் காணப்படுவது நாட்டியக் கூத்தே அன்றி நாடகம் அன்று என்று உறுதியாக கூறலாம். 'கூத்தாட்டு அவைக் குழாத்தற்றே' என்னும் திருக்குறள் தொடரும், 'விளியா தான் கூத்தாட்டுக் காண்டலும்' என்னும் திரிக்கடுகச் செய்யுள் நூலில் உள்ள பாட்டின் அடியும் அந்நாளில் கூத்து நடந்ததை

தெரிவிக்கின்றன. ஒருவேளை நாடக நூல்கள் இருந்து மறைந்து போயினவோ என்பது தெரியவில்லை. பழந்தமிழ் நாடக நூல் ஒன்றும் இன்று நமக்கு இல்லை.

பண்டைக் காலத்தில் தமிழ் மொழியில் நாடக நூல்கள் தோன்றாமைக்குச் சமணரும், பௌத்தரும் காரணமாயினர் என்று சிலர் கூறினர். அவர்கள் கூறியது பொருத்தமாகத் தோன்றவில்லை. எப்படியோ இன்று நம்மிடத்தில் பண்டைத் தமிழ் நாடக நூல்கள் இல்லை.

தமிழ் மொழியில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டிலேயே ‘இராஜராஜேஸ்வர நாடகம்’ தோன்றியதாயும், கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலே ‘பூம்புலியூர் நாடகம்’ இருந்ததாயும் கல்வெட்டுகளால் அறிகிறோம். கி.பி 17-ஆம் நூற்றாண்டில் ‘முக்கூடற்பள்ளு’ போன்ற இசைநாட்டிய நாடகங்களும் எழுந்தன. இதனைத் தொடர்ந்து குற்றால குறவஞ்சி, ஒட்ட நாடகம், சோகி நாடகம், இராம நாடகம், பாரத நாடகம், இந்திரசபா நாடகம், டம்பாச்சாரி நாடகம், பிரமசமாஜ நாடகம் போன்றவை வெளிவந்தன. இவற்றில் எல்லாம் நடிப்பைவிடப் பாட்டுகளே முதன்மையான இடம் பிடித்தன.

20 – ஆம் நூற்றாண்டில் வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியார், பம்மல் சம்பந்த முதலியார் ஆகிய இருவரும் நாடகங்களை எழுதித் தமிழ் நாடகமேடையில் நடிப்பையே முதன்மையாக்கினர். பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை மனோன்மணியம் என்னும் ஒப்புயர்வற்ற செய்யுள் நாடகத்தை இயற்றினார்.

தமிழ் நாடக மேடைகளில் பற்பல ஆண்டுகளாக நடித்து வந்த நாடகங்களுள் பெரும்பாலனவை நடிப்பைக் கருதாமல் பாட்டுக்கே இடமளித்த நாடகங்களாய் இருந்தன. திரைப்படம் வந்த பின்னரே தமிழ் நாடகங்களில் நடிப்புக்கு முதன்மையிடம் அளிக்கப்படலாயிற்று.

நாடகம் என்றால் என்ன? ஒரு கதையை எடுத்துக் கொண்டுக் கதைமாந்தர்க்கு எல்லாம் நடிகர்களை அமைத்து உரையாடல்களாலும் செயல்களாலும் அக் கதைப் பொருளைப் பலர் காண அரங்கத்தில் நடித்துக் காட்டுவதே நாடகம் என்கிறோம். நாடகத்தில் நடிப்பே முதன்மைபெற வேண்டும்.

நடிப்பையே முதன்மையாகக் கருதுமாறு நாடகம் எழுதப்பட வேண்டும். பொருத்தமான இடங்களில் ஒன்றிரண்டு பாடல்கள் இருக்கலாம். நாடகத்தில் பாடல்களை எதிர்பார்ப்பது நாகரீகமன்று. முறையுமன்று.

உரையாடல் நாடகத்தில் நீண்டிருக்க கூடாது. சுருக்கமாக இருக்க வேண்டும். நாடகம் எழுத விரும்புவோர் மூன்று அங்கங்களில் நாடகங்களை இயற்றலாம். முதல் அங்கத்தில் தோற்றமும், இரண்டாவது அங்கத்தில் உச்ச நிலையும், மூன்றாவது அங்கத்தில் முடிவும் அமையுமாறு எழுதலாம். அங்கங்களே இன்றி எழுதும் முறையும் உண்டு. சிறிய நாடகமாக இருந்தால் ஓரங்க நாடகமாக எழுதலாம். பிற்புலம் அந்தக் காலத்துக்கு ஏற்றவாறு பொருத்தமாக இருத்தல் மிகமிக இன்றியமையாதது.

நாடகமானது இன்பியல் நாடகம் என்றும், துன்பியல் நாடகம் என்றும் இருவகைப்படும். இன்பமாக முடிவது இன்பியல் நாடகம். இன்ப நிகழ்ச்சிகளே மிகவும் இன்பியல் நாடகத்தில் இருக்கும். துன்ப முடிவில் அமைவது துன்பியல் நாடகம். அவரவர் வாழ்வின் வெற்றிக்கும் வீழ்ச்சிக்கும் அவரவர் குணங்களே காரணமாகின்றன என்னும் உண்மையை அடிப்படையாகக் கொண்டே துன்பியல் நாடகங்களை அமைத்தார் ேக்ஸ்பியர்.

நகைச்சுவைக் குறு நாடகங்கள் தமிழில் இல்லை. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நடிக்கத் தக்கவாறு இந்நாடகங்கள் மிகுதியாக வெளிவர வேண்டும். இவை இன்றைக்கு வேண்டிய தேவையுமாகும்.

**நாடக ஆசிரியரின் தகுதிகள்**

நாடக ஆசிரியராக விரும்புவோர் வாழ்க்கையைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். சிந்தனையாளராக இருக்க வேண்டும். தமிழிலக்கிய அறிவும் நிரம்பப் பெறவேண்டும். நடைமுறைக்கு வேண்டிய இலக்கணமும் தெரிந்து கொள்ள வேண்டும். இளம் எழுத்தாளர்கள், இத்திறமைகள் பெற்று நல்ல தமிழில், எளிய நடையில், நாடக இலக்கணங்கள் நன்கு பொருந்த, நடிப்புக்கு முதலிடம் தந்து, பாடல் ஒன்றிரண்டே அமைத்துக் குணச்சித்திரங்களைக் காட்டி உணர்ச்சியே உயிராக விளங்குமாறு நல்ல கருத்தமைந்த நாடகங்களையும், நகைச்சுவை குறுநாடகங்களையும் எழுதித் தமிழ் அன்னைக்கு அணி செய்து தண்டமிழ் நாட்டுக்கும் ஒண்டமிழ் மொழிக்கும் தொண்டு புரிய வேண்டும்.

**மாதிரி வினாக்கள்**

1. மரபுத்தொடர்கள் என்றால் என்ன? விளக்குக.
2. கட்டுரையின் வகைகளை விவரி.
3. நகைச்சுவை இலக்கியம் எழுதும் முறைகளை எடுத்துரைக்க.
4. நாடகம் எவ்வாறு எழுத வேண்டும்?
5. சிறுகதை என்றால் என்ன? அமைப்பை விவரி.

# அலகு – 5

# நிறுத்தக் குறியீடுகள்

**நிறுத்தக் குறியீடுகள் - விளக்கம்**

பேசும்போது பொருள் தெளிவுபடுவதற்காகச் சிறு கால இடைவெளிவிட்டுப் பேசுவது வழக்கம். சில இடங்களில் தேவைக்கேற்ப அதிகமான கால இடைவெளி தந்தும் சில இடங்களில் குறைந்த அளவு கால இடைவெளி தந்தும் பேசுவது கருத்துப் புலப்பாட்டு நெறியாகும். கருத்துப்பரிமாற்றத்தில் தெளிவினை உண்டாக்கவும் சுவைக் கூட்டவும் ஏற்ற இறக்கம் தந்தோ, கால இடைவெளி தந்தோ மொழியைக் கையாள்கிறோம். பேசுவது போலவே எழுதும் முறையிலும் கால இடைவெளி தருவதற்குப் பதிலாகச் சில குறியீடுகளைப் பயன்படுத்தி, அவ்விடத்தை நிறைவு செய்கிறோம். படிப்போர் வாக்கியங்களின் பொருளை மாறுபாடின்றி அறிந்துகொள்வதற்கு உதவியாக உரிய இடங்களில் சிற்சில அடையாளங்கள் இடப்பட்டிருக்கும். இவ் அடையாளங்களையே நிறுத்தக்குறிகள் என்கிறோம்.

தமிழ் மொழியில் நிறுத்தக் குறியீடுகள் இல்லை. இவை எல்லாம் ஆங்கில மொழியின் வாயிலாகத் தமிழில் வந்து வழங்கப்படலாயின. தமிழ் மொழியின் இலக்கணப்படி வாக்கியம் முடிந்துவிட்டது என்பதை விளக்குவதற்கு வினைமுற்றை வாக்கியத்தின் இறுதியில் வருமாறு எழுதுவது வழக்கம். ஆனால் இக்காலத்தில் அதற்குப் பதிலாக வாக்கியத்தின் இறுதியில் முற்றுப்புள்ளியை வைத்து வாக்கிய முடிவு உணர்த்தப்படுகிறது.

எழுதும் ஆற்றலை நன்றாக வளர்த்துக் கொள்வதற்கு இந்த நிறுத்தக் குறியீடுகள் மிகவும் துணைபுரிகின்றன. வாக்கியங்களின் வழியே சொல்ல வந்த பொருளைத் தெளிவாகவும் எளிமையாகவும் மற்றவர்களுக்குப் புரியுமாறும் வெளிப்படுத்துவதற்கு இந்த நிறுத்தக் குறியீடுகள் பெரிதும் உதவுகின்றன.

அத்தோடல்லாமல் வாக்கியங்கள் தரும் பொருளைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கும் வாக்கியங்களைச் சரியான முறையில் பிரித்துப் படிப்பதற்கும் இந்த நிறுத்தக் குறியீடுகள் பெருமளவில் துணைபுரிகின்றன. இந்த நிறுத்தக் குறியீடுகளைச் சரியாகப் பயன்படுத்தாவிட்டால் வாக்கியம் வெளிப்படுத்துகிற பொருளில் மாற்றம் ஏற்படும். எனவே நிறுத்தக் குறியீடுகளைப் பற்றிய சரியான அறிவைப் பெறவேண்டியது அவசியமாகிறது.

**இக்கால உரைநடையில் பயன்பாட்டில் இருக்கும் நிறுத்தக்குறிகள்:**

1. காற்புள்ளி ( , )
2. அரைப்புள்ளி ( ; )
3. முக்காற்புள்ளி ( : )
4. முற்றுப்புள்ளி ( . )
5. வினாக்குறி ( ? )
6. உணர்ச்சிக்குறி ( ! )
7. இரட்டை மேற்கோள்குறி ( “ “ )
8. ஒற்றை மேற்கோள்குறி ( ‘ ‘ )
9. தனி மேற்கோள்குறி ( ’ )
10. மேற்படிக்குறி ( “ )
11. பிறையடைப்புக்குறி ( )
12. சதுரஅடைப்புக்குறி ( [ ] )
13. இணைப்புக்கோடு ( _ )
14. இணைப்புச்சிறுகோடு ( - )
15. சாய்கோடு ( / )
16. அடிக்கோடு ( _______ )
17. உடுக்குறி ( * )
18. தொடர் விடுபாட்டுக் குறி ( ……... )

**1. காற்புள்ளி ( , )**

இக்குறிக்கு உறுப்பிசைக்குறி என்ற பெயருமுண்டு. உச்சரிப்பில் இதற்கு அரைமாத்திரை அளவு விட்டிசைக்க வேண்டும்.

சொற்களைத் தனித்தனியாக எழுதுவதற்கும், அடுக்கடுக்காக பிரித்தெடுப்பதற்கும் காற்புள்ளி இட்டு எழுத வேண்டும். பெயர்ச்சொற்கள் பல அடுக்கி வந்தால் காற்புள்ளி இட்டு எழுத வேண்டும். ஓர் வாக்கியத்தில் ஓர் எழுவாய் பல பயனிலைகளைப் பெற்று வந்தால் கடைசியில் உள்ள பயனிலையைத் தவிர மற்றப் பயனிலைகளுக்குப் பின் காற்புள்ளி இட்டு எழுத வேண்டும். அதனால், இதனால், ஆதலால், ஆகையால், ஆகையினால், ஆகவே, ஆயினும், எனினும், என்றாலும், இருப்பினும் போன்ற வாக்கியங்களுக்கிடையே தொடர்பு ஏற்படுத்தப் பயன்படும் சொற்களுக்குப் பின்னர் காற்புள்ளி இட்டு எழுத வேண்டும்.

ஒரே சொல் அல்லது தொடர் தொடர்ந்து வந்தால் அவற்றிற்குப் பின்னரும் காற்புள்ளி இட்டு எழுத வேண்டும். விளிச்சொற்களுக்குப் பின்னர் காற்புள்ளி இட்டு எழுத வேண்டும். முகவரியில் குறிக்கும் பெயர், பட்டங்கள், வீட்டின் எண், தெருவின் பெயர் இவற்றிற்குப் பின்னர் காற்புள்ளி இட்டு எழுத வேண்டும். ஆங்கில முறையில் நாள், மாதம், ஆண்டு முதலானவற்றை எழுதும்போது அவற்றின் பின் காற்புள்ளி இட்டு எழுத வேண்டும். மேற்கோள் குறிக்கு முன் காற்புள்ளி இட்டு எழுத வேண்டும். பொருளில் குழப்பம் ஏற்படாமல் இருப்பதற்கு வேண்டிய இடத்தில் காற்புள்ளி இட்டு எழுத வேண்டும்.

(எ.கா) புலி, யானை, கரடி முதலியன காட்டில் வாழ்வன.

கடவுளே, எல்லோருக்கும் அருள் செய்க.

அழுகிப்போன தின்பண்டங்களை உள்ளே போட நம் வயிறு குப்பைத் தொட்டி அன்று. அதனால், நாம் நல்ல தின்பண்டங்களையே தின்ன வேண்டும்.

**2. அரைப்புள்ளி ( ; )**

ஒரு வாக்கியத்தில் ஒரு எழுவாயானது பல பயனிலைகளைக் கொண்டதாக அமையுமாயின் பயனிலைக்குப் பின்னர் அரைப்புள்ளி இட்டு எழுத வேண்டும். ஒரு வாக்கியத்தில் பல சிறுசிறு வாக்கியங்கள் இருந்து அவை முழுக்கருத்தையும் தெளிவுப்படுத்துமாயின் அவ்வாறு அமைந்த ஒவ்வொரு வாக்கியத்தின் பின்னரும் அரைப்புள்ளி இட்டு எழுத வேண்டும். ஒரே வாக்கியத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட செய்திகளைக் குறிப்பிடும்போது ஒவ்வொரு செய்திக்குப் பின்னரும் அரைப்புள்ளி இட்டு எழுத வேண்டும். ஏனென்றால், ஏனெனில் முதலான காரணச் சொற்களுக்குப் பின்னர் அரைப்புள்ளி இட்டு எழுத வேண்டும். ஒன்றினோடு ஒன்று மாறான கருத்துக்களைக் கொண்டு விளக்குகின்ற சிறு வாக்கியங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு முழுக்கருத்தை விளக்கி வந்தால், ஒவ்வொரு சிறு வாக்கியத்தின் பின்னரும் அரைப்புள்ளி இட்டு எழுத வேண்டும்.

(எ.கா) இவர் ஒரு கல்விக் கடல் கேள்விக் குவியல்.

அவனை மிரட்டினால் படிப்பான் இல்லையெனில் படிக்க மாட்டான்.

ஒன்றுபட்டு வாழ்ந்தால் உயர்ந்து வாழலாம் என்னும் கொள்கை வீட்டுக்கும் பொருந்தும் வீதிக்கும் பொருந்தும் நாட்டுக்கும் பொருந்தும்.

**3. முக்காற்புள்ளி ( : )**

வாக்கியத்தில் கூறியதொன்றை விவரித்துக் கூறும்போது முக்காற்புள்ளியிட்டு எழுத வேண்டும். விண்ணப்பப் படிவங்களில் தன் விவரங்களாகத் தகவலாளி தம் தகவல்களைப் பதிவுச்செய்யும்போது முக்காற்புள்ளியிட்டு எழுத வேண்டும். தலைப்பாகப்

பொதுவாகக் கூறப்படும் செய்திக்கும் அதன் விரிவாகக் கூறப்படும் செய்திகளுக்கும் முன்னர் முக்காற்புள்ளியிட்டு எழுத வேண்டும். எடுத்தாண்டிருக்கும் மேற்கோள் இன்ன நூலில் இருக்கிறது என்பதைக் காட்ட முக்காற்புள்ளியிட்டு எழுத வேண்டும். வாக்கியத்தில் ஒரு கருத்தை விளக்கவோ ஆதரிக்கவோ மற்றொரு கருத்து அதைத் தொடர்ந்து வருமாயின், முன் கருத்து முடியுமிடத்தில் முக்காற்புள்ளியிட்டு எழுத வேண்டும்.

(எ.கா)

ஒன்றைக் கூர்ந்து சிந்திக்க நூல்களைப் படித்துப் பழகு: கல்விக்கு மிகவும் வேண்டுவது.

குறள் அதிகாரம் 8:3

வாழ்வு இரு திறத்தது: ஒன்று உயிர் வாழ்வு: மற்றொன்று உடல் வாழ்வு.

**4. முற்றுப்புள்ளி ( . )**

வாக்கியம் நிறைவுப் பெற்றதனை அறிவிக்கும் விதமாக முற்றுப்புள்ளி பயன்படுத்தப்படுகிறது. கட்டளை அல்லது ஏவல் வாக்கியத்தின் இறுதியில் முற்றுப்புள்ளி இட்டு எழுத வேண்டும். மேற்கோளாகக் காட்டப்படும் வாக்கியத்தின் இறுதியில் முற்றுப்புள்ளி இட்டு எழுத வேண்டும். சுருக்கக் குறியீடாக உள்ள எழுத்தை அடுத்து புள்ளியிட்டு எழுத வேண்டும். ஆங்கில பட்டத்திற்கு பின்னர் புள்ளியிட்டு எழுத வேண்டும். ஒருவரின் பெயருக்கு முன்னர் வரும் தலைப்பெழுத்துக்குப் பின்னர் புள்ளியிட்டு எழுத வேண்டும்.

(எ.கா)

திருவள்ளுவர், ஒரு உன்னதமான நெறியாளர்.

திரு.மு.வரதராசனார்

உயர்திரு., தவத்திரு., கி.மு.,கி.பி.

**5. வினாக்குறி ( ? )**

வினா வாக்கியங்களின் இறுதியில் கேள்விக்குறி இட்டு எழுத வேண்டும். ஐயம், நம்பிக்கையின்மை போன்ற பொருள் கொண்ட தொடராக அமையும்போது கேள்விக்குறி இட்டு எழுத வேண்டும்.

6. **உணர்ச்சிக்குறி ( ! )**

உணர்ச்சியை வெளிப்படுத்த வேண்டிய இடங்களில், உணர்ச்சியை வெளிப்படுத்தும் வாக்கிய முடிவில் அல்லது சொல்லின் இறுதியில் உணர்ச்சி குறியிட்டு எழுத வேண்டும்.

**7. இரட்டை மேற்கோள்குறி ( " " )**

வாக்கியத்தின் இடையில் ஒருவரின் கூற்றை எடுத்தாளும்போது இரட்டை மேற்கோள் குறியிட்டு எழுத வேண்டும். நேர்க்கூற்றின் தொடக்கத்திலும் முடிவிலும் இரட்டை மேற்கோள் குறியிட்டு எழுத வேண்டும்.

**8. ஒற்றை மேற்கோள்குறி ( ' ' )**

இரட்டை மேற்கோள் குறிக்குள் வரும் மற்றொருவரின் கூற்றைத் தனித்துக்காட்ட ஒற்றை மேற்கோள் குறியிட்டு எழுத வேண்டும். பழமொழிகள், இலக்கிய தொடர்கள், தலைப்பு போன்ற சொல்லாட்சிகளை எடுத்தாளும்போது ஒற்றை மேற்கோள் இட்டு எழுத வேண்டும்.

**9. தனி மேற்கோள்குறி ( ' )**

வாக்கியத்தில் எண் அல்லது எழுத்து விடுபாட்டை குறிப்பதற்கு தனி மேற்கோள்குறி இட்டு எழுத வேண்டும்.

**10. மேற்படிக்குறி ( " )**

மேற்குறித்தனவே இவையும் என்னும் பொருளடிப்படையில் குறிக்கப்படுவது மேற்படிக்குறிகளாகும்.

**11. பிறை அடைப்புக்குறி ( ( ) )**

விளக்க வேண்டிய இடங்கள், விவரித்துக் கூற வேண்டிய பொருள்கள், கூடுதலான தகவல்கள் போன்றவற்றைக் குறிப்பாகக் குறித்துக் காட்டவேண்டிய இடத்தினைப் பிறைக்குறிகள் இட்டு எழுத வேண்டும்.

12. **சதுர அடைப்புக்குறி ( [ ] )**

கட்டுரை எழுதுபவரின் கருத்துக்கள் மற்றும் பதிப்பாசிரியரின் கருத்துக்கள் மேற்கோளாகக் குறிக்கப்படும்போது மேற்கோளில் இல்லாதவற்றைக் குறித்திருப்பதைத் தனித்துக்காட்ட சதுர அடைப்புக்குறியிட்டு எழுத வேண்டும்.

**13. இணைப்புக்கோடு ( _ )**

தனித்தனியாகச் சொல்லப்படும் பொருள்களின் முடிவில் அவையனைத்தும் ஒரே பொருளைச் சார்ந்தவை என்பதை வெளிப்படுத்த இணைப்புக் குறியிட்டு எழுத வேண்டும். இதிலிருந்து இதுவரை என்று காலத்தையோ, இடத்தையோ வெளிப்படுத்த வேண்டுமாயின் இணைப்புக் குறியிட்டு எழுத வேண்டும்.

**14. இணைப்புச் சிறுகோடு ( - )**

ஏதாவது ஒரு காரண காரிய அடிப்படையில் இரு சொற்களை ஒன்றாகத் தொகுத்து ஒரே சொல்லாகக் குறிப்பிட வேண்டியிருந்தால் இணைப்புச் சிறுகோடு இட்டு எழுத வேண்டும்.

**15. சாய்கோடு ( / )**

ஒரு சொல்லுக்கு மாற்றாகத் தரக்கூடிய சில சொற்களைக் கூறவேண்டி வந்தால் சாய்கோடு இட்டு எழுத வேண்டும். பணத்தொகையைக் குறிப்பிட்டு எழுதவேண்டிய இடத்தில் சாய்கோடு இட்டு எழுத வேண்டும்.

**16. அடிக்கோடு ( ______________ )**

ஒரு சொற்றொடரில் முக்கியமானதாகக் கருதப்படும் சொற்களின் அல்லது வாக்கியத்தின் அடியில் அடிக்கோடு இட்டு எழுத வேண்டும்.

**17. உடுக்குறி ( * )**

ஒருவாக்கியத்தின் இடையில் விரிவாகக்கூற வேண்டியிருப்பின் அந்த இடத்தில் உடுக்குறியிடப்பட்டு, அப்பக்கத்தின் அடியில் தனியாக அச்செய்திகளை விளக்கவேண்டி உடுக்குறியிட்டு எழுத வேண்டும்.

**18. தொடர் விடுபாட்டுக்குறி (…….)**

வேண்டாததை விடும்போது தொடர் விடுபாட்டுக்குறி பயன்படுத்த வேண்டும்.

**மாதிரி வினாக்கள்**

1. நிறுத்தற் குறியீடுகள் என்றால் என்ன? விளக்குக.
2. நிறுத்தற் குறியீடுகளின் பயன்கள் யாவை? விவரி.
3. நிறுத்தற் குறியீடுகள் பயன்படுத்தும் முறைகளை விளக்குக.

**பாடநூல்**

அ.கி.பரந்தாமனார், நல்ல தமிழ் எழுத வேண்டுமா?, பாரி நிலையம், சென்னை-17

**பார்வை நூல்கள்**

1. கோ.இளைய பெருமாள், தமிழில் பிழையின்றி எழுதுவது எப்படி?, வானதி பதிப்பகம், சென்னை-17
2. கா.பட்டாபிராமன், மொழி பயன்பாடு, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை
3. வே.சங்கர், மொழித்திறன், நன்மொழி பதிப்பகம், புதுச்சேரி
4. ஆ.சா.குருசாமி, தமிழில் பிழைகள் தவிர்ப்போம், நர்மதா பதிப்பகம், சென்னை

**முனைவர் ரெ.சுகிதா ராணி**

உதவிப்பேராசிரியர்

தமிழியல் துறை

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி-12

9487185553

suhitharani@gmail.com